வெளியீடு 10-9-2005 Issued 10-9-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 5, 2005—தொகுதி 79—எண் 2

Tuesday, the 5th April, 2005—Volume 79—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V211,31'805
P05.79.2
185278

[Price Rs. 3.00

564
21.2.06

5–4–2005

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. **வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 14) 297-330

2. **தகவல் கோரல்—**

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 330,331,336

3. **கவன ஈர்ப்பு—**

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டமும், உடனடியாக நல்ல குடிநீர் வழங்குதலும் 331-335

4. **அறிக்கை அளித்தல்—**

மதிப்பீட்டுக் குழு 336

5. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் 336,337

6. **மானியக் கோரிக்கைகள், 2005—2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 14 – சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை
(ஆ) கோரிக்கை எண் 31 – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
—தொடர்ச்சி 337-364, 369-399

திரு. ஏ.எஸ். கண்ணன் 337-342

பக்கங்கள்

6. **மானியக் கோரிக்கைகள், 2005—2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

*திரு. ஜெக. வீரபாண்டியன் 342-347

*மாண்புமிகு திரு. ப. அண்ணாவி 347-357, 359-363

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் 369-384, 386-387

**(இ) கோரிக்கை எண் 10 – வணிக வரித் துறை—வணிக வரிகள்** 399-473

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் 399,410,416, 418,419,451, 462-467

*திரு. டி.பி.எம். மைதீன்கான் 409-410, 411-417, 419-422,472

*திரு. வெ. ஏழுமலை 422, 424-429, 431-436

*திரு. எஸ். தாமோதரன் 436-445

திரு. மு. கார்த்தி 407, 445-453,471

*திரு. என். நன்மாறன் 453-457

திரு. சோ. இராசேந்திரன் 457-462

7. **விதி 110-ன்கீழ் அறிக்கை**—

சென்னை, கிரீம்ஸ் சாலையில் வணிக வரித் துறை ஆணையர் புதிய அலுவலகம் கட்டுதல் — மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை 364-369

8. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 473-475

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 23, தாரண—திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 ஏப்ரல் 5, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"தாளாண்மை என்னுந் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னுஞ் செருக்கு."

பிறருக்கு உதவி செய்தல் என்னும் பெருமித மேம்பாடு, முயற்சி என்னும் உயர்ந்த பண்பு உடையவரிடத்தே மட்டும் நிலைபெற்றிருப்பதாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்@ (பட்டியல் 14)

1—

### கூட்டுறவு விற்பனை அங்காடிக்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 31598—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாடகை இடத்தில் இயங்கி வரும் ஈரோடு சிந்தாமணி மொத்த கூட்டுறவு விற்பனை அங்காடிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

---

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

விடை—

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

ஈரோடு சிந்தாமணி மொத்த கூட்டுறவு விற்பனை அங்காடிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருவதற்கான வாய்ப்புகள் ஏதுமில்லை. மேற்படி நிறுவனம் அரசு சார்ந்த நிறுவனம் அல்ல. இது கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் அதன் நிதி ஆதாரங்களைப் பெருக்கித்தான் சொந்தக் கட்டடம் கட்டிக்கொள்ள வேண்டும்.

**2—**

## கிராம அங்காடிகளுக்குக் கட்டடம்

**வினா எண் 57165—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, நரசிங்கபுரம் வேளாண் கூட்டுறவு வங்கிக்குட்பட்ட நரசிங்கபுரம், ஒக்கூர் வேளாண் கூட்டுறவு வங்கிக்குட்பட்ட கோவேரியேந்தல், காசாவயல் வேளாண் கூட்டுறவு வங்கிக்குட்பட்ட வாட்டாத்தூர், கடம்பூர் வேளாண் கூட்டுறவு வங்கிக்குட்பட்ட அடம்பூர், தீயூர், கோவனிக்கிடங்கு மற்றும் தென்னமாரி கிராம அங்காடிகளுக்குக் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதியில் நரசிங்கபுரம் வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் நரசிங்கபுரம் நியாய விலைக் கடை முழுநேரக் கடையாகச் செயல்படுகிறது. ஒக்கூர் வேளாண் கூட்டுறவு வங்கியின்கீழ் கோவேரியேந்தல் நியாய விலைக் கடை முழுநேரக் கடையாகச் செயல்படுகிறது. காசாவயல் வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் வாட்டாத்தூர் நியாய விலைக் கடை முழுநேரக் கடையாகச் செயல்படுகிறது. அடம்பூர் வேளாண் கூட்டுறவு வங்கியின் [illegible] கோவணிக்கிடங்கு மற்றும் தென்னமாரி

ஆவணக் காப்பகம்
186278
சென்னை 600 018



நியாய விலைக் கடைகள் முழுநேரக் கடைகளாகச் செயல்படுகின்றன. மேற்படி முழுநேர நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன. இந்த முழுநேரக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசின் தற்போதைய திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

**3—**

## பகுதிநேர நியாய விலைக் கடை தொடங்குதல்

**வினா எண் 60219—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நரப்பாக்கம் ஊராட்சியில் உள்ள அகஸ்தீஸ்வரமங்கலம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை தொடங்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நரப்பாக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட அகஸ்தீஸ்வரமங்கலம் கிராமத்தில் 48 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், நரப்பாக்கம் கூட்டுறவு நியாய விலைக் கடையிலிருந்து அகஸ்தீஸ்வரமங்கலம் கிராமம் ஒன்றரைக் கிலோ மீட்டர் தூரத்திற்கும் குறைவான தூரத்தில் உள்ளதாலும், புதிய பகுதிநேர அங்காடி அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்பதாலும், தற்போது நடைமுறையில் உள்ள அரசாணையில் வகுக்கப்பட்ட நிபந்தனைகளின்படி புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**4—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 60345—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், திருவடிசூலம் ஊராட்சியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், திருவடிசூலம் ஊராட்சியில் உள்ள திருவடிசூலம் மற்றும் தென்கோடி வனம் ஆகிய இரண்டு கிராமங்களில் 188 குடும்ப அட்டைகள் உள்ளன. தென்கோடி வனம் மற்றும் திருவடிசூலம் ஆகிய கிராமங்களுக்கு இடையே 1/2 கிலோ மீட்டருக்குக் குறைவான தூரமே உள்ளது. திருவடிசூலம் கிராமத்தில் ஒரு முழுநேரக் கடை தனியார் கட்டடத்தில் வாடகைக்கு இயங்கி வருகிறது. எனவே, புதிதாக நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. மேற்படி நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**5—**

## கிராம அங்காடிகளுக்குக் கட்டடம்

**வினா எண் 61432—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், நெய்வத்தளி, புண்ணியவயல் ஆகிய கிராம அங்காடிகளுக்குக் கட்டடம் கட்டித்தரும் கருத்துரு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஒன்றியம், நெய்வத்தளி நியாய விலைக் கடை பெரியாளூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 312 குடும்ப அட்டைகளுடன் முழுநேரக் கடையாக வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அறந்தாங்கி ஒன்றியம், புண்ணியவயல் நியாய விலைக் கடை 368 குடும்ப அட்டைகளுடன் ஆவுடையார்கோவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் முழுநேரக் கடையாக ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது. நெய்வத்தளி நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசுத் திட்டங்களில் தற்போது வழிவகை செய்யப்படவில்லை.



**6—**

## கூட்டுறவு அங்காடியைப் பிரித்து புதிய அங்காடி

**வினா எண் 61485—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, செல்லனேந்தல் கூட்டுறவு அங்காடியை இரண்டாகப் பிரித்து புதிய அங்காடி ஒன்று தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, செல்லனேந்தல் மகளிர் நியாய விலைக் கடை ஏற்கெனவே இரண்டாகப் பிரிக்கப்பட்டு, மகளிர் அங்காடி (செல்லனேந்தல்) 789 குடும்ப அட்டைகளுடனும், மகளிர் அங்காடி (அன்னை சுய உதவிக் குழு) (செல்லனேந்தல்) 2,613 குடும்ப அட்டைகளுடனும் (27-3-2003 முதல்) செயல்பட்டு வருகின்றன.

**7—**

## நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 63008—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், ச.கண்ணனூர் பேரூராட்சி வாரச் சந்தையில் நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், கண்ணனூர் பேரூராட்சி வாரச் சந்தையில் நியாய விலைக் கடை செயல்படவில்லை. வாரச் சந்தைப் பகுதியில் உள்ள 561 குடும்ப அட்டைகளும் மண்ணச்சநல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்படும் ச. கண்ணனூர் முழுநேர நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. வாரச் சந்தை என்பது ச. கண்ணனூர் பேரூராட்சியின் ஒரு பகுதியாகும். இந்நிலையில் வாரச் சந்தையில் தனியாக நியாய விலைக் கடை ஏதும் செயல்படாத நிலையில் நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

**8—**

## திருக்கோயிலுக்குக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 56755—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆச்சாள்புரம் ஊராட்சி, குதிரைகுத்து மண்வெளி தெருவிலுள்ள அருள்மிகு திரௌபதி அம்மன் கோயிலுக்குக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கொள்ளிடம் ஒன்றியம், ஆச்சாள்புரம் ஊராட்சி, குதிரைகுத்து மண்வெளி தெருவிலுள்ள அருள்மிகு திரௌபதியம்மன் திருக்கோயில் இத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில். மேலும் இத்திருக்கோயில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் வாழும் பகுதியில் அமையவில்லை. எனவே மேற்படி திருக்கோயிலுக்கு இத்துறை சட்ட விதிகளின்படி திருப்பணிக்கு நிதியுதவி வழங்க வழிவகையில்லை.





**9—**

## படித்துறை அமைத்தல்

**வினா எண் 61559—திரு. ப. அரசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஊராட்சி, வடக்கு அம்மாம்பட்டினம் கோயில், பூவத்தக்குடி ஊராட்சி, பூவை மாநகர் சுந்தர விநாயகர், பூவத்தங்குடி காளிக்கோயில் மற்றும் ஏகணிவயல் ஊராட்சி, ஏகணிவயல் ஊரணியை மராமத்து செய்து, படித்துறை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டம், வடக்கு அம்மாம்பட்டினத்தில் அமைந்துள்ள அருள்மிகு பால தண்டாயுதபாணி சுவாமி, கோடி விநாயகர் கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆளுகைக்குட்பட்ட சிறிய திருக்கோயிலாகும். மேற்படி திருக்கோயிலின் திருக்குளத்தின் மேற்குப்புறம் ஊர்ப் பொது மக்கள்மூலம் உபயமாக படித்துறை அமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. தற்போது நீர் உள்ளது. மேலும் தெப்பக்குளமாகப் பராமரிக்கப்பட்டு பக்தர்கள் நீராடும் குளமாக பொது மக்களால் பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. பூவத்தக்குடி ஊராட்சி, பூவை மாநகர், அருள்மிகு சுந்தர விநாயகர் கோயில் குளம் அரசு புறம்போக்கில் உள்ளதால் குளத்தைத் தூர் வார ஊராட்சி நிர்வாகத்தின்மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். பூவத்தக்குடி காளிக்கோயில் குளம் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூ.60,000/- மதிப்பீட்டில் 2003 ஆம் ஆண்டில் குளம் தூர் வாரப்பட்டு, தற்போது நீர் நிறைந்துள்ளது. தற்போது குளத்தின் வடகரையில் புதியதாகப் படித்துறை கட்டப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. ஏகணிவயல்

கிராமத்தில் அமைந்துள்ள குடிநீர் ஊரணி ஊராட்சி நிர்வாகத்தின் மூலமாக 2002–2003–ல் தூர் வாரப்பட்டு, நீர் நிறைந்து நல்ல நிலையில் உள்ளது. ஊரணியின் மேற்குக் கரையில் படித்துறை ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது.

**10—**

### தெப்பக்குளத்தை சீரமைத்தல்

**வினா எண் 61612—திரு. ப. அரசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி நகரம், அருள்மிகு ஸ்ரீவீரமாகாளி அம்மன் கோயில் தெப்பக்குளத்தை சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி நகரம் மற்றும் வட்டம், அருள்மிகு ஸ்ரீவீரமாகாளி அம்மன் திருக்கோயில் தெப்பக்குளத்தில் தற்போது தண்ணீர் அதிகமாக உள்ளது. கிழ்ப்புறம் கரையில் மட்டும் சுவர் உள்ளது. மற்ற திசைகளில் கரைச் சுவர் இல்லாமல் உள்ளது. மேற்படி மூன்று புறமும் கரைச் சுவர்கள் அமைக்கப்பட வேண்டும். இதற்குத் திருக்கோயிலில் நிதி வசதி இல்லை. இத்திருக்கோயில் திருக்குளத்தினை மாவட்ட நிர்வாகம்மூலம் செப்பனிட நிதியுதவி அளிக்குமாறு புதுக்கோட்டை மாவட்டாட்சியருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

**11—**

### வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 39478—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை மடத்துக்குளம் பேரூராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை எண் 85, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 28–12–2001–ன்படி பிற்படுத்தப்பட்ட / மிகப் பிற்படுத்தப்பட்ட இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட மனைப் பிரிவுகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதை முன்னிட்டு, நில எடுப்பு நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே உடுமலைப்பேட்டை வட்டம், மடத்துக்குளம் பேரூராட்சியில் வசிக்கும் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க தற்போது சாத்தியமில்லை.

**12—**

### கால்நடை மருத்துவமனையின் கிளை நிலையம்

**வினா எண் 65721—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, அங்களக்குறிச்சி, புதுக்காலனி அருகில் கால்நடை மருத்துவமனையின் கிளை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாநிலத் திட்டக் குழு கடித எண் 1309/மா.தி./வேளாண்/99, நாள் 2–7–99–ன்படி, புதிய கால்நடை கிளை நிலையங்கள் துவக்கிட விதிக்கப்பட்ட தடை உத்தரவு இன்னமும் அமலிலுள்ள நிலையில், அரசாணை எண் 463/நிதி (சி.எம்.பி.சி) துறை, நாள் 23–11–2001–ன்படி புதிய பதவிகள் தோற்றுவிக்க அரசால் தடை

விதிக்கப்பட்டுள்ள நிலையிலும், வால்பாறை தொகுதி, அங்களக்குறிச்சி, புதுக்காலனி அருகில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

**13—**

## வீடுகள் கட்டித் தருதல்

**வினா எண் 38955—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி நகரில் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலம் வீடுகள் கட்டித்தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

தற்போது இல்லை. மைய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள வால்மீகி அம்பேத்கர் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் நகர குடிசைப் பகுதிகளில் புதிய வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி நகரில் குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு மேற்படி வால்மீகி அம்பேத்கர் வீட்டுவசதித் திட்டத்தின் பயன்கள் பற்றியும் மற்றும் நிதி ஆதாரங்கள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் குடும்பங்கள் அவர்களது பங்குத் தொகை ரூ.4000/–ஐ, கட்டுமானப் பணிகள் துவங்குவதற்கு முன்னர் செலுத்த வேண்டும். அறந்தாங்கி நகரில் குடிசைப் பகுதியில் வாழும் மக்கள் யாரும் இத்திட்டத்தின்கீழ் தங்களது பங்குத் தொகையினைச் செலுத்த முன் வராததன் காரணமாக வால்மீகி அம்பேத்கர் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் அறந்தாங்கி நகரில் வீடுகள் அமைக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

**14—**

## மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 47474—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சேலம் மாவட்டத்தில் 2003–04 ஆம் ஆண்டில் மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**15—**

## அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்

**வினா எண் 48546—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் குடிசைப் பகுதி மாற்று திட்டத்தின்கீழ் 2003–2004 ஆம் ஆண்டில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படவுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**16—**

## தீப்பிடிக்காத கூரை விடுகள்

**வினா எண் 48561—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 5

(அ) ஏற்காடு தொகுதியில் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு தீப்பிடிக்காத கூரை வீடுகள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படவுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இதுபோன்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், தீப்பிடிக்காத கூரை வீடுகள் அமைப்பதற்குப் பதிலாக, ஏற்காடு தொகுதியில் நகர குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்கள் வால்மீகி அம்பேத்கர் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் வீடுகள் அமைக்க அவர்கள் செலுத்த வேண்டிய முன்பணம் செலுத்தி வீட்டுவசதி நிறுவனங்களிடம் பெறப்படும் கடன் தொகையினைத் திருப்பிச் செலுத்தவும் சம்மதம் தெரிவித்தால் 2004–05 ஆம் ஆண்டில் ராம் நகர் மற்றும் இந்திரா நகர் குடிசைப் பகுதிகளில் தனி வீடுகள் அமைக்கும் பணிகள் துவங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**17—**

## தாழ்த்தப்பட்டவர்களுக்குப் புதியதாக வீடுகள்

**வினா எண் 59889—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சி 41, இராதாநல்லூர் கிராமத்தில் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடுகள் புதியதாக கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஒப்புதலளிக்கப்பட்ட நகரப் பகுதியில் உள்ள குடிசைப் பகுதிகளில்



2005 ஏப்ரல் 5]

வாழும் குடும்பங்களுக்கு மட்டுமே வீடுகள் கட்டிக் கொடுக்கும் பணியினை நிறைவேற்றி வருகிறது. சீர்காழி தொகுதியில் உள்ள திருமுல்லைவாசல் ஊராட்சி, இராதாநல்லூர் கிராமப் பஞ்சாயத்து என்பதால் அக்கிராமத்தில் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் புதியதாக வீடுகள் கட்டிக் கொடுப்பது குறித்து செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழவில்லை.

**18—**

## வீடுகளைப் புதுப்பித்தல்

**வினா எண் 62237—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு நகரம், மேட்டூர் ரோடு அருகிலுள்ள தோணி பிரிட்ஜ் மற்றும் ஜீவானந்தம் சாலை, ஓடைப்பள்ளம் அருகே உள்ள இடங்களில் கட்டப்பட்டுள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

ஆம். ஈரோடு நகரம், தோணி பிரிட்ஜ் மற்றும் ஜீவானந்தம் காலனி ஓடைப்பள்ளம் அருகே 468 குடியிருப்புகள் பெரும்பள்ளம் ஓடை திட்டப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. இக்குடியிருப்புகளுக்கு மாடிப் படிகள் சீர் செய்தல், கூரைத் தளங்களில் ஓடுகள் பதித்து மழை நீர்க் கசிவினைத் தடுத்தல், கான்கிரீட் தளங்களைச் செப்பனிடுதல், மாடி முகப்புகளைப் பழுதுபார்த்தல் மற்றும் பூச்சு வேலைகள் செய்தல் போன்ற பழுதுபார்ப்புப் பணிகள் ரூ.27.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன. இத்திட்டப் பணிகள் மைய அரசின் வால்மீகி அம்பேத்கர் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும். இத்திட்டப் பணிகளுக்கான திட்டப் பிரேரணைகள் வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டு நிதியுதவி கோரி ஹட்கோ நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இப்பழுதுபார்ப்புப் பணிகளுக்கான நிதியுதவி கிடைக்கப்பெற்ற பின்னர் பணிகள் துவங்கப்படும்.

[2005 ஏப்ரல் 5

**19—**

## அடுக்கு மாடி வீடுகள் கட்டுதல்

**வினா எண் 63603—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் குடிசை மாற்று வாரியம் மூலம் வால்பாறை தொகுதி, அங்குளக்குறிச்சி ஊராட்சி, பிலிசின்னம்பாளையம் கிராமம் மற்றும் வால்பாறை மேல் பகுதியில் உள்ள குடிசைப் பகுதிகளை மாற்றி அடுக்கு மாடி வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இதுபோன்ற செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**20—**

## வீடுகள் கட்டித் தருதல்

**வினா எண் 63607—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியிலுள்ள ரமணமுதலிபுதூர், தென்சித்தூர், தென்சங்கம்பாளையம் மற்றும் சோமந்துரை ஊராட்சிகளில் உள்ள வீடில்லாதவர்களுக்கு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலம் குறைந்த விலையில் வீடு கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 ஏப்ரல் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியப் பணிகள் தற்போது மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள குடிசைப் பகுதிகளில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஊராட்சிப் பகுதிகளில் வாரியப் பணிகள் விரிவுபடுத்தப்படவில்லை. எனவே, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஊராட்சிப் பகுதிகளில் வாரியப் பணிகளை மேற்கொள்ள வாய்ப்பில்லை.

**21—**

## வீடுகள் கட்டுதல்

**வினா எண் 63611—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியிலுள்ள அர்த்தநாரி பாளையம் ஊராட்சி, ஜல்லிபட்டி ஊராட்சி மற்றும் கம்பலாபட்டி ஊராட்சி ஆகியவற்றில் வீடில்லாத ஏழைகளுக்கு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலம் குறைந்த விலையில் வீடு கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியப் பணிகள் தற்போது மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள குடிசைப் பகுதிகளில் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஊராட்சிப் பகுதிகளில் அப்பணிகள் செயல்படுத்தப்படவில்லை. எனவே, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஊராட்சிப் பகுதிகளில் வாரியப் பணிகளைத் தற்போது செயல்படுத்த வாய்ப்பில்லை.

22—

### அடுக்கு மாடி வீடுகள் கட்டுதல்

**வினா எண் 63599—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியிலுள்ள ஜல்லிபட்டி, அர்த்தநாரிபாளையம், கம்பாலபட்டி மற்றும் கரியஞ்செட்டிப்பாளையம் ஊராட்சிகளில் உள்ள குடிசை வீடுகளுக்குப் பதிலாக தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்மூலம் அடுக்கு மாடி வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இதுபோன்ற செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

23—

### வீடுகள் கட்டுதல்

**வினா எண் 63614—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, கரியஞ்செட்டிப்பாளையம் கிராமம், அக்களகுறிச்சி ஊராட்சி மற்றும் பிலிசின்னம்பாளையம் கிராமத்தில் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலம் குறைந்த விலையில் வீடு கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியப் பணிகள் தற்போது மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள குடிசைப் பகுதிகளில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஊராட்சிப் பகுதிகளுக்கு வாரியப் பணிகள் விரிவுபடுத்தப்படவில்லை. எனவே வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஊராட்சிப் பகுதிகளில் வாரியப் பணிகளை மேற்கொள்ள வாய்ப்பில்லை.

24—

### உபகோட்ட அலுவலகம்

**வினா எண் 63838—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் குடிசை மாற்று வாரியத்தின் உபகோட்ட அலுவலகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போதைக்கு இல்லை.

25—

### கிராமப்புறங்களில் வீட்டு வசதி

**வினா எண் 63840—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 5

(அ) தமிழ்நாட்டில் நகரப் பகுதியில் வாழும் ஏழைகளுக்கு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் மானியத்துடன்கூடிய கடன் உதவி வழங்கி வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை கிராமப்புறங்களிலும் விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் தமிழகத்தின் நகரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் மட்டுமே செயல்படுத்தப்படுகின்றது. இவ்வாரியத்தின் பணிகள் கிராமப்புறங்களுக்கு விரிவுபடுத்தப்படவில்லை. எனவே சட்டமன்ற வினாவில் கூறப்பட்டுள்ளவாறு மானியத்துடன்கூடிய கடனுதவியுடன் கிராமப்புறங்களில் வீட்டு வசதி அமைக்க தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் தற்போது இயலாது.

**26—**

## தையல் ஆசிரியர் பணியிடங்கள்

**வினா எண் 9068—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளில் தையல் ஆசிரியர் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

தமிழகம் முழுவதிலுமுள்ள அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் காலியாகவுள்ள 204 தையல் ஆசிரியர் பணியிடங்கள் 2004-2005 ஆம் கல்வியாண்டில் நிரப்பப்பட பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மூன்று தையல் ஆசிரியர் காலிப் பணியிடங்களும் அதில் அடங்கும்.



2005 ஏப்ரல் 5]

**27—**

## உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்கள்

**வினா எண் 13297—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகம் முழுவதிலுமுள்ள அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் காலியாகவுள்ள விளையாட்டு ஆசிரியர் பணியிடத்தை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

தமிழகம் முழுவதுமுள்ள அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் காலியாகவுள்ள 701 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களை 2004-2005 ஆம் கல்வியாண்டில் நிரப்ப பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**28—**

## கவிமண்டபம் திறப்பு விழா

**வினா எண் 19053—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை தொகுதி, உடுமலை நகரத்தில் குட்டைத்திடலில் உள்ள உடுமலை நாராயண கவி மண்டபத்தை கட்டித் திறப்பு விழா செய்தும் உபயோகிக்காமலிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை நகரத்தில் குட்டைத்திடலில் உள்ள உடுமலை நாராயண கவி மணிமண்டபம் அமைந்துள்ள இடம்,

[2005 ஏப்ரல் 5

செய்தி-மக்கள் தொடர்புத் துறையினரால் 9-3-2002 அன்று கோயம்புத்தூர் மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு இலவசமாக ஒப்படைக்கப்பட்டது. இக்கட்டடத்தில் நூலக ஆணைக் குழுவின் குடிமைப் பணித் தேர்வு நூல்கள் பகுதி மட்டுமே இயங்கி வருகின்றது.

**29—**

## கூடுதல் வகுப்பறைகள்

**வினா எண் 26997—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் மாணவர்கள் தேவைக்கேற்ப கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் மாணவர்களின் தேவைக்கேற்ப கூடுதல் வகுப்பறைகள் கட்டும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**30—**

## வாகன சோதனைகளில் தணிக்கை

**வினா எண் 35093—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001–2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் வணிக வரித் துறையினர் வாகன சோதனைகளில் தணிக்கை செய்யப்பட்ட வாகனங்களில் தவறு கண்டறியப்பட்டவை எத்தனை?



2005 ஏப்ரல் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

| | |
|---|---|
| 2001–2002 ஆம் ஆண்டில் சேலம் கோட்டத்தில் வாகன சோதனைகளில் தணிக்கை செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை | — 7,58,275 |
| அவற்றில் தவறுகள் கண்டறியப்பட்டவை | — 1,503 |

**31—**

## கூடுதல் நூலகங்கள் துவங்குதல்

**வினா எண் 62031—திரு. டி. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் கூடுதல் நூலகங்கள் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்ட நூலக ஆணைக் குழுவில் தற்போது மாவட்ட மைய நூலகம்-1, கிளை நூலகங்கள்-9, ஊர்ப்புற நூலகங்கள்-78 மற்றும் பகுதிநேர நூலகங்கள்-2, ஆக மொத்தம் 90 நூலகங்கள் செயல்படுகின்றன. மேலும் புதிய பணியிடங்கள் தோற்றுவிப்பதில் அரசின் தடை உள்ளதாலும், நிதிநிலை காரணமாகவும் கன்னியாகுமரி மாவட்டத்தில் கூடுதல் நூலகங்கள் திறப்பதற்கான சாத்தியக்கூறு ஏதும் இல்லை. எனினும் 1,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களில் கீழ்க்காணும் நிபந்தனைகளை நிறைவேற்றித் தரும்பட்சத்தில் அக்கிராமங்களில் பகுதிநேர நூலகம் திறக்க பரிசீலிக்கப்படும்:

1. நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம்

2. 5 செண்ட் முதல் 10 செண்ட் வரையிலான காலி மனை நூலக ஆணைக் குழுவின் பெயருக்குப் பத்திரப் பதிவு செய்து தரவேண்டும்

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்

4. ரூ.2,000/– மதிப்பில் தளவாடப் பொருட்கள் நன்கொடையாக அளிக்க வேண்டும்

5. ரூ.1,000/– செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்

**32—**

## பகுதிநேர நூலகம் திறத்தல்

**வினா எண் 64642—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, அம்பலவானேந்தலில் நூலகம் அமைத்துத்தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, அம்பலவானேந்தலில் நூலகம் திறக்கக் கோரி பொது மக்களிடமிருந்து விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. எனினும் அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் ஒத்துழைத்து மேற்படி பகுதியில் பகுதிநேர நூலகம் திறக்க கீழ்க்காணும் நிபந்தனைகளை நிறைவு செய்து வழங்கும்பட்சத்தில் பகுதிநேர நூலகம் திறக்க இயலும்:

1. நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம் வழங்கப்படவேண்டும்
2. சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரையிலான இலவச காலி மனை மாவட்ட நூலக ஆணைக் குழு பெயருக்குப் பத்திரப் பதிவு செய்து தரவேண்டும்
3. தலா ரூ.1,000/– வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 பேர் புரவலர்களாகச் சேர வேண்டும்.
4. நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ.15/–, ஆண்டுச் சந்தா ரூ.5/–, ஆக மொத்தம் ரூ.20/– வீதம் செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்
5. ரூ.2,000/– மதிப்புள்ள தளவாடங்கள் இலவசமாக வழங்க வேண்டும்





**33—**

## அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 65881—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகரில் உள்ள வணிக வரி அலுவலர் அலுவலகக் கட்டடத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) இப்போது இயங்கும் கட்டடத்திற்கு அத்துறை செலுத்தும் மாத வாடகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) செங்கற்பட்டு நகரில், வணிக வரி அலுவலர் அலுவலகம், எண் 20, அழகேசன் தெரு, செங்கற்பட்டு என்னும் முகவரியிலுள்ள தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. தற்போது செங்கற்பட்டு நகரில் இயங்கி வருகின்ற வணிக வரி அலுவகத்திற்குப் புதிய சொந்தக் கட்டடம் கட்டுகின்ற பிரேரணை ஏதும் அரசிடம் நிலுவையில் இல்லை. மேலும் வருங்காலத்தில் செங்கற்பட்டு நகரில் வணிக வரி அலுவலகத்திற்கு சொந்தமாகக் கட்டடம் கட்டுவது தொடர்பாகப் பிரேரணை துணை ஆணையரிடமிருந்து வரப்பெற்றால் அரசின் நிதி நிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

(ஆ) செங்கற்பட்டு நகரில் இயங்கி வரும் வணிக வரி அலுவலகத்திற்கு மாத வாடகையாக ரூ.8,895/– வழங்கப்பட்டு வருகிறது.

**34—**

## கல்லூரி வளாகத்தில் பூந்தோட்டம்

**வினா எண் 66746—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி வளாகத்தில் பூந்தோட்டம் அமைத்துப் பராமரிக்க அரசு முன்வருமா?

[2005 ஏப்ரல் 5

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசு மகளிர் கல்லூரியில் தனியாகப் பூந்தோட்டம் அமைக்கப்படவில்லை. ஆங்காங்கே பூச்செடிகள் வைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. பெரிய அளவில் பூந்தோட்டம் அமைத்தால் தண்ணீர்ப் பற்றாக்குறைக் காலங்களிலும், கோடைக் காலங்களிலும் பூச்செடிகளைக் காப்பாற்றுவதில் சிரமம் ஏற்படும்.

**35—**

### பணிக் குழு உறுப்பினர்கள்

**வினா எண் 59837—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சின்கோனா TANTEA-யில் பணிக் குழு உறுப்பினர்கள் பழையபடி தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 3-7-2004 அன்று பணிக் குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு பணிக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**36—**

### சுமை தூக்கும் பணியாளர்கள்

**வினா எண் 61943—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கை வண்டி மற்றும் சுமை தூக்கும் பணியாளர்களுக்குத் தனி வாரியம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2005 ஏப்ரல் 5]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சாத்தியக்கூறு இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**37—**

### கூடுதல் நீதிமன்றம்

**வினா எண் 62302—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, தொழிலாளர்களின் தொழிற் தாவாக்களுக்கு தீர்ப்பு வழங்கக் கூடுதல் நீதிமன்றங்களை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2003 ஆம் ஆண்டில் வால்பாறை பகுதியில் எழுப்பப்பட்ட தொழிற்தாவாக்களில் மொத்தம் ஏழு தொழிற்தாவாக்கள் மட்டுமே நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்டுள்ளன. இந்நிலையில் வால்பாறை தொகுதி தொழிலாளர்களுக்கான கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. தற்போது வால்பாறை தொகுதிக்குட்பட்ட தொழிலாளர்கள் தொடர்பான தொழிற்தாவாக்கள் கோவை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடப்படுகின்றன.

(ஆ) வால்பாறை தொகுதியில் தற்போது போதுமான எண்ணிக்கையில் தொழிற்தாவாக்கள் இல்லையென்பதால், கூடுதலாக தொழிலாளர் நீதிமன்றம் அமைத்திட வழிவகை இல்லை. வருங்காலத்தில் அதிக அளவில் தொழிற்தாவாக்கள் தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடும் நேர்வில், கூடுதலாகத் தொழிலாளர் நீதிமன்றம் அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

[2005 ஏப்ரல் 5

38—

## வேலைவாய்ப்பு அலுவலகம்

**வினா எண் 64899—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளியில் வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்றைத் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளியில் தனியாக வேலைவாய்ப்பு அலுவலகம் புதியதாக அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

39—

## கூடுதல் அரிசி வழங்குதல்

**வினா எண் 30396—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 2001–2002 ஆம் நிதியாண்டில் கூடுதல் சிறப்பு ஒதுக்கீடாக சேலம் மாவட்டத்திற்கு எத்தனை டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 2001–2002 ஆம் நிதியாண்டில் கூடுதல் சிறப்பு ஒதுக்கீடாக சேலம் மாவட்டத்திற்கு 1011 மெ.டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2005 ஏப்ரல் 5]

40—

## பாசனக் குளத்தை சீர் செய்தல்

**வினா எண் 31653—டாக்டர். சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் குன்றாண்டார் கோயில் ஒன்றியம், தெம்மாவூர் ஊராட்சி, தெம்மாவூரில் விடானிக்குளம் பாசனக் குளத்தை சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார் கோயில் ஊராட்சி ஒன்றியம், தெம்மாவூர் ஊராட்சி, தெம்மாவூர் கிராமத்தில் உள்ள விடானி பாசனக் குளத்தினை 2003–2004 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.

41—

## நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 37336—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, பழையார் கிராமத்தில் நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 5

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, பழையார் கிராமத்திற்கு நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டித்தர இத்துறையில் தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களில் வழிவகை இல்லை. இப்பணியினைச் செய்துதர இயலாது.

**42—**

## மின் விசை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 48381—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், நெப்பத்தூர் ஊராட்சி, அப்பாபிள்ளை தோப்பு தெரு, முல்லையாம்பட்டினம், நெப்பத்தூர் தீவு, அம்பலக்காரத் தெரு, மேல நெப்பத்தூர் தெரு, கீழ நெப்பத்தூர் தெரு ஆகிய இடங்களில் சிறு மின் விசை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், நெப்பத்தூர் ஊராட்சி, அப்பாபிள்ளை தோப்பு தெரு, முல்லையாம்பட்டினம், நெப்பத்தூர் தீவு, அம்பலக்காரத் தெரு, மேல நெப்பத்தூர் தெரு, கீழ நெப்பத்தூர் தெரு ஆகிய இடங்களில் தண்ணீர் உப்பு நீராக இருப்பதால் அவ்விடங்களில் ஆழ்துளைக் கிணறு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. சிறு மின் விசைத் திட்டம் ஏற்கெனவே உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் மட்டும் அனுமதிக்கப்படுகிறது. எனவே, மேற்கண்ட இடங்களில் சிறு மின் விசைத் திட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க இயலவில்லை.



2005 ஏப்ரல் 5]

**43—**

## மகளிர் சுய உதவிக் குழு கட்டடம்

**வினா எண் 51669—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, மாதனூர் ஒன்றியத்தில் திருமலைக்குப்பம் பஞ்சாயத்து மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் அமைத்துத்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு சட்டமன்றத் தொகுதி, மாதனூர் ஊராட்சி ஒன்றியம், திருமலைக்குப்பம் ஊராட்சியில் 2004–2005 ஆம் நிதியாண்டில் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.99,990/- செலவில் மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**44—**

## மின் விளக்கு அமைத்தல்

**வினா எண் 55211—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், கீழச்சட்டநாதபுரம் ஊராட்சி, நெப்பத்தூர் ஊராட்சி, செம்மங்குடி ஊராட்சி, தில்லைவிடங்கன் ஊராட்சி, திட்டை ஊராட்சி, காத்திருப்பு ஊராட்சி ஆகியவற்றில் சூரிய எரிசக்தியைக் கொண்டு கிராம எரிசக்தித் திட்டத்தின்கீழ் மின் விளக்கு அமைக்க அரசு ஆவன செய்ய முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 5

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி ஒன்றியம், கீழச்சட்டநாதபுரம், நெப்பத்தூர், செம்மங்குடி, தில்லைவிடங்கன், திட்டை, காத்திருப்பு ஆகிய ஊராட்சிகளில் சூரிய ஒளியைக் கொண்டு கிராம எரிசக்தித் திட்டத்தின்கீழ் மின் விளக்குகள் அமைத்திட மேற்கண்ட ஊராட்சிகளில் போதுமான நிதி ஆதாரம் இல்லாததால் இப்பணியினைச் செய்து கொடுக்க இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**45—**

### சூரிய ஒளிமூலம் மின் விளக்கு

**வினா எண் 56288—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், தில்லைவிடங்கன் ஊராட்சி, திட்டை ஊராட்சி, சட்டநாதபுரம் ஊராட்சி, எடக்குடி வடபாதி ஊராட்சி, கன்னியாக்குடி ஊராட்சி, திருப்பன்கூர் ஊராட்சி, மருதங்குடி ஊராட்சி, கதிராமங்கலம் ஊராட்சி மற்றும் 54 நெம்மேலி ஊராட்சி ஆகியவற்றிலுள்ள மகளிர் சுய உதவிக் குழு கட்டடத்திற்கு சூரிய ஒளி மூலம் (Solar system) மின் விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி ஒன்றியம், தில்லைவிடங்கன், திட்டை, சட்டநாதபுரம், எடக்குடி வடபாதி, கன்னியாக்குடி, திருப்பன்கூர், மருதங்குடி, கதிராமங்கலம் மற்றும் 54 நெம்மேலி ஊராட்சிகளிலுள்ள மகளிர் சுய உதவிக் குழு கட்டடங்களுக்கு சூரிய ஒளியைக் கொண்டு மின் விளக்கு அமைத்திட மேற்கண்ட ஊராட்சிகளில் போதுமான நிதி வசதி இல்லாததால் இப்பணியினைச் செய்து கொடுக்க இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.



2005 ஏப்ரல் 5]

**46—**

### சூரிய ஒளிமூலம் மின் விளக்கு

**வினா எண் 56357—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மகேந்திரபள்ளி ஊராட்சி, தாண்டவன்குளம் ஊராட்சி, எலத்தூர் ஊராட்சி, வடரெங்கம் ஊராட்சி, கோபாலசமுத்திரம் ஊராட்சி மற்றும் வேட்டங்குடி ஊராட்சி ஆகியவற்றில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு கட்டடத்திற்கு சூரிய ஒளி மூலம் (Solar system) மின் விளக்கு அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கொள்ளிடம் ஒன்றியம், மகேந்திரபள்ளி, தாண்டவன்குளம், எலத்தூர், வடரெங்கம், கோபாலசமுத்திரம் மற்றும் வேட்டங்குடி ஆகிய ஊராட்சிகளின் மகளிர் சுய உதவிக் குழு கட்டடங்களுக்கு சூரிய ஒளி மூலம் மின் விளக்கு அமைத்திட மேற்கண்ட ஊராட்சிகளின் நிதி வசதி போதுமானதாக இல்லை என்பதால் சூரிய ஒளியைக் கொண்டு மின் விளக்கு அமைத்துக் கொடுக்க தற்போது இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**47—**

### சூரிய ஒளிமூலம் சூரிய ஒளி விளக்கு

**வினா எண் 56368—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆனைக்காரன் சத்திரம் ஊராட்சி, புத்தூர் ஊராட்சி, எருக்கூர் ஊராட்சி, மாதிரவேளூர் ஊராட்சி, ஓலையாம்புத்தூர் ஊராட்சி, கீழமாத்தூர்

ஊராட்சி மற்றும் எலத்தூர் ஊராட்சி ஆகியவற்றில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு கட்டடத்திற்கு சூரிய ஒளி மூலம் (Solar system) சூரிய ஒளி விளக்கு அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆனைக்காரன் சத்திரம், புத்தூர், எருக்கூர், மாதிரவேளூர், ஓலையாம்புத்தூர், கீழமாத்தூர் மற்றும் எலத்தூர் ஊராட்சிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு கட்டடங்களுக்கு சூரிய ஒளிமூலம் சூரிய ஒளி விளக்கு அமைத்திட மேற்கண்ட ஊராட்சிகளில் போதுமான நிதி இல்லாததால் தற்போது செய்துதர இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**48—**

## சூரிய ஒளிமூலம் மின் விளக்கு

**வினா எண் 56395—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, ஆதமங்கலம், பெருமங்கலம், செம்மங்குடி, தென்னாம்பட்டினம், அரசூர் மற்றும் புங்கனூர் ஊராட்சியிலுள்ள மகளிர் சுய உதவிக் குழு கட்டடத்திற்கு சூரிய ஒளிமூலம் (Solar system) மின் விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி ஒன்றியம், ஆதமங்கலம், பெருமங்கலம், செம்மங்குடி, தென்னம்பட்டினம், அரசூர் மற்றும் புங்கனூர் ஊராட்சிகளிலுள்ள





மகளிர் சுய உதவிக் குழு கட்டடத்திற்கு சூரிய ஒளி மூலம் மின் விளக்குகள் அமைத்துக் கொடுத்திட மேற்கண்ட ஊராட்சிகளின் நிதி ஆதாரம் போதுமானதாக இல்லை. எனவே, இப்பணியினைச் செய்து கொடுக்க இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**49—**

## சூரிய ஒளிமூலம் மின் விளக்கு

**வினா எண் 56401—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சி, நாங்கூர் ஊராட்சி, அகனி ஊராட்சி, பூம்புகார் ஊராட்சி ஆகியவற்றில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு கட்டடத்திற்கு சூரிய ஒளிமூலம் (Solar system) மின் விளக்கு அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி ஒன்றியம், திருநகரி, நாங்கூர், அகனி, பூம்புகார் ஆகிய ஊராட்சிகளின் மகளிர் சுய உதவிக் குழு கட்டடங்களுக்கு சூரிய ஒளி மூலம் மின் விளக்குகள் அமைத்திட மேற்கண்ட ஊராட்சிகளின் நிதி ஆதாரம் போதுமானதாக இல்லாததால் இப்பணியினைச் செய்து கொடுக்க இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**50—**

## மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கட்டடம்

**வினா எண் 63850—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 5

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், வள்ளுவக்குடி ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், வள்ளுவக்குடி ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் ஒன்று 2003-2004 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய். I திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கிறது. ஞானசேகரன், என்ன சொல்லுங்கள்?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Revenue stamp கிராமப் பகுதிகளிலே கிடைக்காத நிலை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே சொன்னீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) திரு. சிவபுண்ணியம்.



2005 ஏப்ரல் 5]

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. என்னுடைய ஆய்வில் இருக்கிறது. கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருந்தால், அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கம் வேலைவாய்ப்பிற்கு பணி நியமனத் தடைச் சட்டம் பிறப்பித்துள்ளது. ஒரு சில துறைகளில் மட்டும் இப்போது விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது. எல்லாத் துறைகளிலும் காலிப் பணியிடங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆகவே, அந்தத் தடை உத்தரவை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம், பேசும்போது குறிப்பிடுங்கள். அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துவிடுங்கள். (குறுக்கீடுகள்) திரு. கோவை தங்கம், வரவே இல்லையா? அந்த கவன ஈர்ப்பை இன்னொரு நாள் எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

## 3. கவன ஈர்ப்பு

### தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டமும், உடனடியாக நல்ல குடிநீர் வழங்குதலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள் மிகவும் பின்தங்கிய, தொடர்ந்து வறட்சியான மாவட்டப் பகுதியாக இருக்கும் என்ற காரணத்தினாலும், நிலத்தடி நீர் ஃப்புளோரைடு என்ற நச்சுத்தன்மை உள்ளதாலும்..."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, கவன ஈர்ப்பு அறிவிப்பை மட்டும் வாசியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2005 ஏப்ரல் 5

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, அதுதான், அதுதான். "நிரந்தர, பாதுகாக்கப்பட்ட குடிநீருக்காக நீண்ட காலமாக நிலுவையில் உள்ள ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்" என்பது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

**அறிக்கை**

ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஒகேனக்கல் அருகே காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு திட்டம் உருவாக்க அரசு பரிசீலித்து வருகிறது,

ஜூன் 2003-ல் நடப்பு விலை விவர அட்டவணைப்படி திட்டத்திற்கான மதிப்பீடு திருத்தப்பட்டு, அமைப்புச் செலவு ரூ.1085.00 கோடியாகவும், பராமரிப்புச் செலவு ரூ.69.05 கோடியாகவும் திருத்தப்பட்டது. அமைப்புச் செலவு மற்றும் ஆண்டுப் பராமரிப்புச் செலவு அதிகமாக உள்ளதால், பொருளாதார ரீதியான சாத்தியக்கூறினை ஆராய்ந்து அது, மறுபரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது. மதிப்பீடு இறுதி செய்யப்பட்ட பின், திட்டத்தைச் செயலாக்குவது குறித்து அரசு முடிவெடுக்கும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்ற விவர அறிக்கையை முழுமையாகப் படித்துப் பார்த்தேன். இந்த விவர அறிக்கையில் முழுமையான திட்டத்தைப் பற்றி, அங்கேயிருக்கிற குறைபாடுகளைப் பற்றி, அது எந்த ஆண்டு நிறைவேற்றப்படும், எப்போது பணி தொடங்கும் என்ற அந்த நிலை எல்லாம் சொல்லப்படாமல் இருக்கின்றது. அதிலும், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள், தமிழ்நாட்டிலே இருக்கிற மாவட்டங்களிலே வறட்சியான மாவட்டங்கள், தொடர்ந்து பின்தங்கிய மாவட்டங்கள். மழை பெய்கின்ற காலத்திலே திடீரென்று நீர் வரும். மழை நின்று விட்ட பிறகு, திடீரென்று வறட்சியான மாவட்டங்களாக மாறிவிடும். இப்படிப்பட்ட சூழ்நிலை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. எல்லா நிலைகளிலும் பின்தங்கிய மாவட்டங்கள். மற்ற மாவட்டங்களிலே மிகப் பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் இருக்கின்றது.



2005 ஏப்ரல் 5] [திரு. ஜி.கே. மணி]

ஆனால், இந்த மாவட்டத்திலே அப்படிப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் எதுவும் இல்லாத ஒரு சூழ்நிலை. அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலே இருக்கிற, நிலத்தடியிலே இருக்கிற நச்சுத்தன்மையைப் பார்ப்போம் என்று சொன்னால், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலேதான் நிலத்தடியிலே ஃபுளோரைடு என்ற நச்சுத்தன்மை அதிகமாக இருக்கிறது. ஆகவே, அந்தத் தண்ணீரைக் குடிக்கின்ற காரணத்தினாலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, ஒரு கேள்விதான் கேட்கலாம் நீங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்து விடுகிறேன். தலைவர் அவர்களே, இப்படி இருக்கின்ற காரணத்தினாலே, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலே திட்டம் தயாரிக்கப்பட்டு, இன்னும் நிலுவையில் இருக்கிறது. அதற்குப் பிறகு, கடந்த ஆட்சிக் காலத்திலேகூட திட்டமிட்டு, 10 கோடி ரூபாய் முதல் கட்டமாக ஒதுக்கீடு செய்து ஆரம்பக் கட்டப் பணிகளை எல்லாம் நிறைவேற்றி, இப்போது நிலுவையில் இருக்கிறது. கடந்த 2003 ஆம் ஆண்டுகூட...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, அது எப்போது நிறைவேற்றப்படும் என்று கேளுங்கள். (குறுக்கீடு) இதிலே விவாதத்திற்கு இடமில்லை.

**திரு. ஜி.கே. மணி:** முடித்து விடுகிறேன். 2003 ஆம் ஆண்டு 6-வது மாதத்திலே அங்கே அந்தத் தண்ணீரைக் குடித்து, காலரா நோய் ஏற்பட்டு, ஏறக்குறைய 60-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பாதிக்கப்பட்டு, ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டார்கள். அதிலே 12 பேர் உயிரிழந்தார்கள், உயிரிழந்தவர்களுடைய பட்டியலைக்கூட கொடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, ஒரு கேள்வி கேளுங்கள்.

**திரு ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, கேள்விதான். (குறுக்கீடு) இப்படிப்பட்ட அவல நிலையைச் சொல்லித்தானே கேட்க முடியும்?

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்பிலே ஒரு கேள்விதான் கேட்கலாம்.

[2005 ஏப்ரல் 5

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, இப்படி 12 பேர் உயிர் இழந்ததும், இந்தக் குடிநீர்ப் பிரச்சினை காரணத்தினாலே. ஆகவே, இவற்றையெல்லாம் மனதிலே வைத்து, இந்த அரசாங்கம் முன்னுரிமை கொடுத்து, இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளக்கூடிய வகையிலே, திட்ட மதிப்பீடு தயாராக இருக்கிறது. நிதி ஒதுக்கினால் போதும். ஆகவே, இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகராட்சி, 10 சிறப்புச் சிற்றூராட்சிகள் மற்றும் 8 ஒன்றியங்களைச் சார்ந்த 2,890 ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர்த் திட்டம் மற்றும் குறைந்த மதிப்பீட்டிலான கழிப்பிட வசதிகள் செய்வதற்கான விரிவான திட்டம் ஒன்று, ரூபாய் 386.87 கோடி அமைப்பில்—அமைப்புச் செலவிலே— சுமார் 13 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக, கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள இரண்டு நகராட்சிகள், ஏழு சிறப்புச் சிற்றூராட்சிகள் மற்றும் பத்து ஒன்றியங்களைச் சார்ந்த 3,865 ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளுடன்கூடிய திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது. இன்னும் ஓரிரு மாதத்திற்குள் திட்டமானது தயாரிக்கப்பட்டு, திட்டம் தயாரிக்கப்பட்டவுடன் அரசுக்கு அனுப்பப்பட்டு, இந்த இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அரசு ஆயத்தப் பணியை மேற்கொண்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து அமர்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்டத்தினுடைய அவசியத் தேவையைப் பற்றி நம்முடைய அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஆகவே, அதிலே அவர் இன்னும் அக்கறை செலுத்தி, அதை நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், இப்போது ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்கான வேலையெல்லாம் துவங்கப்பட்டதாகச் சொல்லுகிறார். அந்தத் திட்டத்தினால் எந்தப் பலனும் இருக்காது.



2005 ஏப்ரல் 5] [திரு. ஜி.கே. மணி]

காவிரி பக்கத்திலேதான் ஓடுகிறது. காவிரி நீர் தமிழ்நாட்டிலே இருக்கிற பல மாவட்டங்களுக்குப் பயன்படுகிறது, பாசனத்திற்கும், குடிநீருக்கும். ஆனால், காவிரி நுழைகிற மாவட்டம் எங்களுடைய மாவட்டம். தண்ணீரைக் கண்ணால் பார்க்க முடிகிறதே தவிர, பருக முடிவதில்லை. ஃபுளோரைடு நச்சுத்தன்மை அதிகமாக இருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் மனதில் கொண்டு, இந்த ஆண்டு துவங்கப்படுமா? இன்னும் எத்தனை மாதத்தில் துவங்கப்படும் என்பதை இங்கே ஆர்வத்தோடு எதிர்பார்க்கிறேன், அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதையும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கட்டமாக, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஓசூர் நகராட்சி மற்றும் மூன்று சிறப்புச் சிற்றூராட்சிகள், ஏழு ஊராட்சி ஒன்றியங்களைத் தவிர்த்து, மீதம் இருக்கின்ற பகுதிகளுக்குத் தயாரிக்கப்பட்டது. மேலும் அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுடைய வேண்டுகோளை ஏற்று, அவற்றையும் சேர்த்து திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்ட காரணத்தினால் காலதாமதம் ஆகிறது. மேலும் இன்னும் ஒரு மாதம் அல்லது ஒன்றரை மாத காலத்திற்குள்ளாகத் திட்டம் தயாரிக்கப்பட்டவுடன் 160 M.L.D. தண்ணீரைத் தருவதற்காக, தருமபுரி, கிருஷ்ணகிரி, இரண்டு மாவட்டங்களையும் சேர்த்து இந்தக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஃபுளோரைடு அதிகமாக இருக்கிறதென்று தெரிவித்தார். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து ஊரகக் குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவேண்டுமென்ற நோக்கத்தோடு, நம்முடைய மாவட்டத்தில் அதிகமாக ஃபுளோரைடு இருக்கின்ற பகுதிகளிலெல்லாம் அந்த ஃபுளோரைடை நீக்குகின்ற கலன்கள் அமைக்கின்ற வகையிலே ஆலோசனை வழங்கியுள்ளார்கள். அதன் அடிப்படையில், பாதுகாக்கப்பட்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வருகின்ற வரை, ஃபுளோரைடு கலன்கள் அமைக்கப்பட்டு, இரண்டு மாவட்டங்களுக்கும் நல்ல தண்ணீரை மக்களுக்கு வழங்குவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்து அமர்கின்றேன்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

**திரு. மு.பெ. சாமிநாதன்:** பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்படாததைக் கண்டித்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறையில் வந்து கேளுங்கள்.

## 4. அறிக்கை அளித்தல்

### மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மதிப்பீட்டுக் குழுத் தலைவர்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் பள்ளிக் கல்வி குறித்த இருபத்தொன்பதாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2005—2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 14—சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 31—தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 4-4-2005 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதமும் வாக்கெடுப்பும். திரு. ஏ.எஸ். கண்ணன். 10 மணித்துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** தலைவர் அவர்களே, தொழிலாளர், வேலைவாய்ப்பு, வனத் துறை, மாசு கட்டுப்பாடு வாரியம்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைக் கூற விரும்புகிறேன். தொழில் வளர்ச்சியின் வெற்றிக்குத் தொழிலாளர்கள் முக்கியப் பங்கு ஆற்றுகின்றார்கள் என்று அரசின் கொள்கை விளக்கக் குறிப்பு கூறுகின்றது. அப்படிப்பட்ட தொழிலாளர்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தற்போது பெற்றுவரும் ஊதியத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று தொழிற்சாலை நிர்வாகிகள் தொழிலாளர்களை வலியுறுத்துகிறார்கள். ஊதிய ஒப்பந்தங்கள் முடிந்து பல ஆண்டுகள் ஆகியும், புதிய ஒப்பந்தங்களுக்கான பேச்சுவார்த்தை நடத்த நிர்வாகம் மறுக்கிறது. உதாரணத்திற்காகச் சொல்ல வேண்டுமானால், மணலி, பெட்ரோ கெமிக்கல் நிறுவனம் பழைய ஒப்பந்தம் முடிந்து நான்கு ஆண்டுகள் ஆகியும், ஒப்பந்தம் பேச மறுக்கின்றார்கள்.

முற்பகல் 10-10

அதைப்போலவே, நிரந்தரத் தொழிலாளர்கள் செய்து வரும் பணி கான்ட்ராக்ட் தொழிலாளர்கள்மூலம் நிறைவேற்றப்படுகின்றது. பெரும்பாலான தொழிற்சாலைகளில் கான்ட்ராக்ட் தொழிலாளர்கள், பயிற்சித் தொழிலாளர்கள் என்ற பெயரில் உற்பத்தியில் ஈடுபடுகின்றார்கள். நிரந்தரத் தொழிலாளர்கள் செய்து வரும் வேலைகளை கான்ட்ராக்ட் மற்றும் பயிற்சித் தொழிலாளர்கள் செய்கின்றார்கள். அப்படியும் கான்ட்ராக்ட் தொழிலாளர்களுக்கு சட்டப்படி கிடைக்க வேண்டிய பாதுகாப்பும், வசதிகளும் மறுக்கப்படுகின்றன. உதாரணத்திற்குக் கூற வேண்டுமானால், ஹூண்டாய் மோட்டார் தொழிற்சாலையில் உள்ள இன்கோர் ஆட்டோடெக் இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற கான்ட்ராக்ட் நிறுவனம் இப்படி நடந்துகொள்கின்றது. கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் பிரச்சினையை தொழிலாளர் நலத் துறையிடம் தாவா எழுப்பினால், நிருவாகம் தொழிலாளியை வேலையை விட்டு வீட்டுக்கு அனுப்புகின்ற நிலையை எடுக்கின்றார்கள். ஒரு தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால் ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பதிலுரையில் சொல்லலாம். (குறுக்கீடு) பதிலுரையில் சொல்லலாம்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** ஒரு தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால், அங்கு சரி பாதி அல்லது அதற்கு மேல் கான்ட்ராக்ட் மற்றும் பயிற்சியாளர்கள் உள்ளார்கள். இது சம வேலைக்கு சம ஊதியம் என்ற சட்டத்தின் செயலை இழக்கச் செய்கின்ற நடவடிக்கையாகும். தொழிலாளர் பணி நிரந்தரம் என்ற சட்டத்தையும் செயலிழக்கச் செய்கின்றது. மூடப்பட்ட தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய Gratuity மற்றும் பாக்கியைக்கூட வழங்க மறுக்கின்றது நிருவாகம். உதாரணத்திற்கு, போரூர், கிண்டி, அம்பத்தூரில் உள்ள செவ்ரோ ஷூஸ், டன்லப், மார்சல், சிவானந்தா,



குணால் போன்ற கம்பெனிகள் இப்படிப்பட்ட நடவடிக்கையை எடுத்து வருகின்றன. அமைப்புசாராத் தொழிலாளர்கள் நாட்டின் பெருவளர்ச்சிக்கு முக்கியத்துவம் தருகின்றார்கள் என்று அரசின் கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டிருக்கின்றது.

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அரசு ஓய்வூதியமாக 200 ரூபாய் அறிவித்துள்ளது. தமிழ்நாடு A.I.T.U.C. கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் வரவேற்கின்றோம். வாரியத்திற்கு நல நிதி என்று 0.3 சதவிகிதமாக, ரூ.26,30,85,345/- தொழில் முனைவோரிடம் நல வரி வசூலிக்கப்படுகிறது. மத்திய அரசின் சட்டப்படி 1 சதவிகிதம் வசூலித்தால், வாரியத்திற்கு வருமானம் கிடைக்கும். அரசின் நிதி இல்லாமல் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள E.S.I., P.F., Gratuity மற்றும் ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்தலாம். அரசால் அறிவிக்கப்பட்டுள்ள ஓய்வூதியம் 200 ரூபாய் என்பது மிக, மிகக் குறைவு. குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் செயல்படாமல் இருக்கின்றது. ஆகவே, அதைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்து, ஒரு கோடிக்கும் மேலான விவசாயத் தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். நல வாரியத்தில் ஏற்கெனவே உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். பண்ணைத் தொழிலாளர்களை 1981 ஆம் ஆண்டு சட்டப்படி பணி நிரந்தரம் செய்யவேண்டும். விவசாயத் தொழிலாளர்களின வாழ்க்கை உரிமையைப் பாதுகாக்க திரு. கோலப்பன் கமிட்டி பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். உடலுழைப்புத் தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் நல வாரியம், 9 நல வாரியங்களில் அடங்கியுள்ளது. அரசின் கொள்கை விளக்கக் குறிப்பின்படி, 7,01,841 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். தொழில் முனைவோர்களுடைய பங்களிப்பு நிதி என்பதே இல்லை. செயல்படாமல் உள்ளது. அதை அமல்படுத்திட அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். அனைத்துத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதிய உயர்வு, மூடப்பட்ட தொழிற்சாலைகளைத் திறக்கவேண்டுமென்பதற்காக மாவட்ட அளவில் ஆட்சியர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், குழுக்கள் கூடுவதில்லை. செயலிழந்து கிடக்கின்றன. குறைந்தபட்சக் கூலியை கூடுவதில்லை. செயலிழந்து கிடக்கின்றன. குறைந்தபட்சக் கூலியை அமல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று

கேட்டுக்கொள்கின்றோம். அமைப்புசாரா கல்லுடைக்கும் தொழிலாளர்கள் 20 இலட்சம் பேர் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். ஆபத்தான, கடுமையான உழைப்பாளர்களாக கல் குவாரியில் பணிபுரிவோருக்கு, கல் குவாரிகளில் வருகை தரும் பதிவேடு, சம்பளப் பதிவேடு, மருத்துவ முதலுதவிப் பெட்டிகள், வெடிமருந்து லைசென்ஸ் வழங்குகின்றபோது தொழிலாளர்களுக்குத் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாசு கட்டுப்பாடு வாரியம். சிறு, குறுந்தொழில்களுக்கு தடையில்லாச் சான்று— N.O.C. வழங்குகின்றபோது, பெரிய தொழிற்சாலைகளிலிருந்து நிபந்தனையைத் தளர்த்தி தடையில்லாச் சான்று வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். மாசு கட்டுப்பாடு வாரியம் என்பது, தனிப்பட்ட நபர் பழிவாங்கும் வாரியமாக மாறி வருகின்றது என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். தனி நபர் புகார்கள் தந்தால், எவ்வித விசாரணையுமின்றி, மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. கதவடைப்புச் செய்வது போன்ற நடவடிக்கைகளை எடுக்கின்றார்கள். புகார்கள்மீது விசாரணை செய்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி, பரிட்சார்த்தமாக 100 கிலோ மீட்டர் தார் ரோடு போடவேண்டுமென்று திட்டமிடப்பட்டது. சென்னையில் வள்ளுவர் கோட்டம், மதுரையில் திருப்பரங்குன்றம், திருநெல்வேலியில் பிளாஸ்டிக் கலந்த தார் ரோடுகள் போடப்பட்டன. பிளாஸ்டிக் கலந்த தார் ரோடு போடப்பட்டது, சிறப்பாகப் பயன்படுகிறதா, இல்லையா? அப்படிப்பட்ட திட்டம் என்ன ஆனது என்று அறிய விரும்புகிறேன். தோல் பதனிடும்போது பயன்படுத்தப்படும் மரப்பட்டைகளால் மாசு உண்டாகிறது. அதனால், தென் ஆப்ரிக்காவிலிருந்து மாசு இல்லாத வாட்டில் என்ற மரக்கன்றுகளை குஜராத், உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் வளர்த்து, தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு மரப்பட்டைகளைப் பயன்படுத்துகிறார்கள். தமிழகத்திலும் கடந்த ஆண்டுகளில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்த கொடைக்கானலில் 100 ஏக்கர் பரப்பளவில் வாட்டில் மரக்கன்றுகள் நடப்பட்டன. அதைப் பற்றிய தகவல் கொள்கை விளக்கக் குறிப்பில் இல்லை.

*முற்பகல் 10-15*

மாசு கட்டுப்பாடு வாரியம், கழிவு நீரின் தரம், சுற்றுப்புறக் காற்றின் தரம், வெளியேறும் புகையின் தரம் ஆகியவற்றின் அளவினை



நிர்ணயித்து, இரண்டு கட்டங்களாக இசைவாணைகள் வழங்கப்படுகின்றன என்று கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதே நேரத்தில், கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை—treatment plant, புகைப்போக்கி அமைக்காத இரும்பு உருக்காலைக் கம்பெனிகள், பிளைவுட் தொழிற்சாலைகள், கழிவு நீர் வெளியேறுகின்ற பழவேற்காடு ஆற்றில் நூற்றுக்கணக்கான இறால் பண்ணைகள் இப்படிச் செயல்படுகின்றன. மக்கள் புகார் தந்தால், நடவடிக்கை எடுப்பதில்லை. நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1988 ஆம் ஆண்டில் மத்திய அரசு வனக் கொள்கையை அறிவித்தது. திட்டக் குழு 2007 ஆம் ஆண்டிற்குள் நாட்டில் உள்ள மொத்த நிலப் பரப்பளவில், வனங்களின் பரப்பை 25% உயர்த்த வேண்டும் என்றும், 2012 ஆம் ஆண்டுக்குள் 33.33% ஆக வனப் பரப்பு உயர்த்தப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது. ஆனால் மாநில வனக் கொள்கை உருவாக்கும் கருத்துரு இன்னும் பரிசீலனையில் இருக்கிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. மாநில அரசு வனத் துறைக் கொள்கையை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கண்ணன், இரண்டு மணித்துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** கிராமப்புறங்களின் உயர்விற்காக கிராமப்புறக் குழுக்களை ஏற்படுத்துகிறீர்கள். ஆனால் வனத் துறை அதிகாரிகள்மீது பகுதி மக்கள் புகார் சொன்னால் விசாரணையின்றி, கிராமப்புற வனக் குழுவைக் கலைக்கின்ற நிலை இருக்கின்றது. வனப் பகுதியையொட்டியுள்ள காடுகளில் உள்ள கிராமங்களில் பயோமாஸ் மற்றும் மர எண்ணெய் வித்துக்கள் கொண்டு மின் உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட வனத் துறை முடிவு செய்துள்ளதை வரவேற்கிறோம். ஆனால் அதற்கான தொழில் நுணுக்கம் குறித்த ஆய்வுகளுக்குத் திட்டம் ஏதும் குறிப்பிடப்படவில்லை. தமிழகத்தில் உள்ள வேளாண்மைப் பல்கலைக்கழகம், அண்ணா தொழில்நுட்பக் கழகம், வனச் சூழல் கல்வி நிலையங்கள் ஆகியவற்றைக் குறிப்பான திட்ட ஆய்வுகளுக்குப் பயன்படுத்தலாம் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 பட்ஜெட்டின்போது, பொன்னேரி தொகுதிக்கு மூன்று திட்டங்கள் அறிவிக்கப்பட்டன.

பழவேற்காடு பாலம் 6.85 கோடி ரூபாய், லட்சுமிபுர அணை 5.25 கோடி ரூபாய், நாப்பாளையம் அணை 3.25 கோடி ரூபாய். லட்சுமிபுர அணை கட்டி முடிக்கப்பட்டது. அதற்காக அரசுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். 2005–2006 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் நாப்பாளையம் அணை கட்டுவதற்கான பணி துவங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், பல்லாண்டுகளாக மீனவ மக்களின் கோரிக்கையான பழவேற்காடு பாலம் பற்றிய திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், தடைகள் இருப்பின் அதை நீக்கிவிட்டு, பழவேற்காடு பாலத்தைக் கட்டித் தருவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கூறி, பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூற விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன்.

***திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் சுற்றுச்சூழல் துறை குறித்த மானியக் கோரிக்கைகளில் என்னைப் பேசப் பணித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொருளாதார நடவடிக்கைக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் தொழிலாளர்கள் மிக முக்கியப் பங்காற்றுகிறார்கள். தொழில் வளர்ச்சியின் வெற்றிக்குத் தொழிலாளர்கள்தான் அடிப்படை என்பதிலே மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இதில் அமைப்புசாராத் தொழிலாளர்கள், உழைப்புச் சக்திக்கு முக்கிய ஆதாரமாக அமைகின்றனர். மற்றும் இவர்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கியப் பங்காற்றுகிறார்கள் என்பதை நமது அரசின் தொழிலாளர் நலக் கொள்கை தெளிவுபடுத்துகிறது. அமைப்புசாராத் தொழிலாளர்களிடையே அறியாமை, ஏழ்மை, சங்கமாகச் சேர்ந்து செயல்பட முடியாமை மற்றும் அரசாங்கம் அவர்களுக்குத் தரும் சலுகைகளைக்கூட தெரிந்துகொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள். பெரும்பாலான தொழிலாளர்களுக்கு, தாங்கள் ஆற்ற வேண்டிய கடமை பற்றியும் தெரிவதில்லை, தங்களுக்குள்ள உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் தெரிவதில்லை. தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம், அமைப்புசாராப் பணியாளர்களுக்குப் பல்வேறு நலப் பணிகளை ஆற்றி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட விவசாயத் தொழிலாளர்கள், ஆண், பெண் இருபாலருக்கும் குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்தி இந்த அவையிலே அறிவித்திருக்கிறார்கள்.



முற்பகல் 10–20

அதைப்போல, கட்டுமானத் தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, 60 வயது கடந்த கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.200/- ஓய்வூதியம் வழங்கவிருப்பதை நான் பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இது கட்டுமானத் தொழிலாளர்களுடைய ஒன்றுபட்ட தொழிற்சங்க தொடர் நடவடிக்கைகளுக்குக் கிடைத்த பரிசாக நான் கருதுகிறேன். ஆனால், இதேபோன்ற தொழிற்சங்க உணர்வுடன் ஒற்றுமையுடன் தொடர்ந்து செயல்பட முடியாத பல அமைப்புசாராத் தொழிலாளர்கள் தங்களுடைய சலுகைகளை, அவர்கள் பெற முடிவதில்லை. இன்றைக்குக்கூட சுமை தூக்கும் தொழிலாளர்கள், வேன், ஆட்டோ ஓட்டுநர்கள், தச்சர்கள், அச்சகத் தொழிலாளர்கள் ஆகிய இவர்களெல்லாம் தமிழ்நாடு தழுவிய நிலையிலே இருந்தும், அவர்களுக்குத் தொழிற்சங்கக் கட்டமைப்பு இல்லாத காரணத்தால், தங்கள் நிலையை உணர்ந்து தங்களை முன்னேற்றிக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள். பெருகி வரும் விஞ்ஞான முன்னேற்றமும், அறிவியல் தொழில்நுட்பமும், கைவினைஞர்களை சந்தையை விட்டு வெளியே விரைவில் வெளியேற்றுகிறது. Computer off-set printing அறிமுகப்படுத்தப்பட்டவுடன், பல்லாயிரக்கணக்கான அச்சகத் தொழிலாளர்கள், எழுத்துக் கோர்ப்பவர்கள், proof திருத்துபவர்கள், அச்சடிக்கும் இயந்திரத் தொழிலாளி என பல்லாயிரக்கணக்கான அச்சகத் தொழிலாளர்கள் வேலையிழந்திருக்கிறார்கள்.

அதேபோல, digital flex banner மற்றும் விளம்பர போர்டுகள் பல்லாயிரக்கணக்கான ஓவியர்களின் வாழ்க்கையைப் பாதித்திருக்கின்றன. மிக உயர்ந்த விருதுகளைப் பெற்ற சிறந்த ஓவியர்கள்கூட வேலையின்றி வறுமையில் வாடுகிறார்கள். குறிப்பாக, சென்னை முழுவதும் digital banner-கள்தான் ஆதிக்கம் செலுத்துகின்றன. இது நாடு முழுவதும் விரைவில் பரவயிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. 10 ஆண்டு காலம், 12 ஆண்டு காலம் அரிது முயன்றால்தான் ஒருவர் சிறந்த ஓவியராக வர முடியும். ஆனால், இந்த digital தொழில்நுட்பம் ஓவியர்களுடைய கைகளைக் கட்டிப் போட்டிருக்கிறது. திருட்டு V.C.D.–யால் திரைப்பட உலகம் சரிந்து, மிகப் பெரிய சினிமா கம்பெனிகள் எல்லாம் படம் தயாரிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. புகழ்மிக்க studio-க்கள் வணிக வளாகங்களாக மாறின. திருமணக் கூடங்களாக மாறின. மூடப்பட்ட தியேட்டர்கள் ஏராளம். ஆனால் அறிவியல் தொழில்நுட்பம், திருட்டு V.C.D.–ஆக மாறி திரைப்படத் தொழிலைப்

பாதித்து, பல்லாயிரக்கணக்கான திரைப்படத் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்தபோது, இந்தியாவுக்கே முன்மாதிரியாக, திருட்டு V.C.D.-ஐ வியாபாரத்திற்குக் கொண்டு வந்தால் அதைக் குண்டர் சட்டத்தில் தடுப்போம் என்று ஒரு முன்மாதிரி சட்டத்தை இங்கே கொண்டுவந்து திரைப்படத் தொழிலை நமது அரசு காப்பாற்றியிருக்கிறது. அதேபோல இந்த digital flex banner, ஓவியர்களுடைய வாழ்க்கையை விஞ்ஞான முன்னேற்றத்தின் துணையோடு பாதிக்கின்றபோது, அதை ஒழுங்குபடுத்த வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். சென்னை, அண்ணா சாலை முழுவதும் திரைப்படக் காட்சிகளை, வன்முறைக் காட்சிகளை, ஆபாசக் காட்சிகளை அப்படியே படம் பிடித்து, பெரிதாக்கி, பேனர் முழுவதும், அதுவும் முக்கிய இடங்களில் வைத்திருக்கிறார்கள். அதை ஒழுங்குபடுத்த வேண்டும். அதைப்போல 60 வயது முதிர்ந்த சிறந்த ஓவியர்களுக்கெல்லாம், கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வழங்கியதைப்போல அரசு ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.

அதேபோல, பல்வேறு தனியார் நிறுவனங்களிலும் அரசு நிறுவனங்களிலும், நீண்ட நாட்களாகப் பணியாற்றி, பணி நிரந்தரம் செய்ய முடியாத தொழிலாளர்கள் இருக்கிறார்கள். என்னுடைய மயிலாடுதுறை நகராட்சியிலேகூட 20-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் குடிநீர் வழங்கு துறையில் பணியாற்றுகிறார்கள். 20 ஆண்டு காலம் இன்னமும் N.M.R.-களாகத்தான் இருக்கிறார்கள். ஏறத்தாழ 300 கிலோ மீட்டருக்குப் பகிர்மானக் குழாய்களையும், 400-க்கும் மேற்பட்ட கைப்பம்புகளையும் பராமரிக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கும் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நகராட்சியிலே சுகாதாரப் பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் பலர் ஆண்கள், பெண்கள் பணியாற்றுகிறார்கள். இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால், அவர்களுடைய இனச் சான்றிதழ்கள் வழங்குவதற்குக்கூட அவர்களுக்கு ஏராளமான தொல்லைகள் இருக்கின்றன. S.T. certificate வாங்கக்கூட அவர்களால் முடியவில்லை. அதை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றுகூட நமது அவையில் போக்குவரத்துத் தொழிலாளர் பற்றி மிக நீண்ட வாக்குவாதம் நடைபெற்றது. போக்குவரத்துத் துறை



அமைச்சர் அவர்கள்கூட பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என்று கேட்கிறபோது, போக்குவரத்துத் தொழிலாளர்களைப் பற்றிப் பேசுகின்றபோது, தொழிற்சங்கங்களை நடத்திக் கொண்டிருப்பவர்கள் அரசோடு பேச்சுவார்த்தை நடத்தாமல் இருக்கிறார்கள். அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர்களே, ஓட்டுநர், நடத்துநர் பற்றிய கவலை அரசாங்கத்திற்கு, கட்சிகளுக்கு இருக்கிறபோது, அதேபோல தனியார் வாகன ஓட்டுநர்கள் maxi cab van ஓட்டுநர்கள், taxi ஓட்டுநர்கள் எல்லாம் தற்போது மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது நாம் இந்த Standard 20 அல்லது Mahindra van போன்ற van-களுக்கு எல்லாம் நாம் அதிகமாக சாலை வரியை விதிக்கிறோம். ஏறத்தாழ 24,000 ரூபாய் சாலை வரியாக அவர்கள் செலுத்த வேண்டியிருக்கிறது. ஒரு van ஓடினால் 24,000 ரூபாய் tax – வரி கட்ட வேண்டும். 24,000 ரூபாய் insurance கட்ட வேண்டும். இன்றைக்குப் பெருகி வருகிற பெட்ரோல், டீசல் விலை உயர்வு இந்த van ஓட்டுநர்களை மிகவும் பாதிக்கிறது. ஆகையால் தாயுள்ளத்தோடு தமிழக முதலமைச்சர் அவர்கள் taxi, van ஓட்டுநர்களுடைய இந்தக் குறையை ஏற்று, வரியைக் குறைக்க வேண்டும். இந்த van-களுக்கான வரியை அதிகப்படுத்தியதால் சரிபாதி van-கள் ஓடாமல் கிராமத்திலே முட்டுக் கட்டி வைத்திருக்கிறார்கள். வண்டி ஓடுவது கிடையாது. எல்லாமே T permit-களை surrender பண்ணி own permit-ஆக மாற்றியிருக்கிறார்கள். அந்த வண்டியையும் ஓட்டுவது கிடையாது. இதனால் பல்லாயிரக்கணக்கான ஓட்டுநர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கவில்லை. Painter-கள், Tinker-கள், ஆட்டோமொபைல் தொழிலாளர்களுக்கெல்லாம் இதனால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகையால், இந்த van, maxi cab மீது விதித்த வரியைச் சரி பாதியாகக் குறைக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-25

அதேபோல், புதிய வீராணம் திட்டம் முழுமையாகச் செயல்படவேண்டுமேயானால், கொள்ளிடம் பகுதியிலே நீர்ப் பிடிப்பைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் இருக்கிறது. என்னுடைய பகுதியிலே, கொள்ளிடத்திலே மயிலாடுதுறை தொகுதியிலே ஸ்ரீபுலியூர் பகுதியிலே நமது பொதுப் பணித் துறை மூலமாக கொள்ளிடத்தினுடைய தண்ணீரைத் தக்க வைத்துக்கொள்வதற்காக regulator அமைக்க இருக்கிறார்கள். இதிலே பொதுப் பணித் துறை ஒரு பாலமும் சேர்த்துக் கட்டுகிறது. அதனுடைய அகலம் 4.25 மீட்டராக இருக்கிறது. 4.25 மீட்டர் அகலத்தில் அந்தப்

பாலம் அமைந்தால், நிச்சயமாக அது போக்குவரத்துக்குப் பயன்படாது. பொதுப் பணித் துறையின் வாகனங்கள் மட்டும்தான் செல்லமுடியும். ஏழரை மீட்டர் அகலத்திற்கு அந்தப் பாலத்தை அமைத்தால், சென்னைக்கு வருவதற்கு 60 கிலோ மீட்டர் தூரத்தை மிச்சப்படுத்தும். அந்த மணல்மேடு பகுதி பேரூராட்சிப் பகுதி, அதனுடைய பொருளாதாரம் வளர்ச்சி அடையும் என்ற என்னுடைய கோரிக்கையை வைத்து, அதனைச் செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மணல்மேடு பஞ்சாலை வெகு நாட்களாக மூடிக் கிடக்கிறது. ஒரு காலத்தில் என்னுடைய தொகுதி முழுக்க முழுக்க வேளாண்மை சார்ந்த தொகுதி. வேறு எந்தத் தொழிற்சாலையும் கிடையாது. ஒரு sugar factory இருக்கிறது. மணல்மேடு பஞ்சாலை இருக்கிறது. அந்தப் பஞ்சாலை பல்லாண்டு காலமாக மூடப்பட்டிருக்கிறது. புதிய தொழில்நுட்பத்தோடு அந்தப் பஞ்சாலையை இயக்குவதன் மூலமாக, வேலைவாய்ப்பைப் பெருக்க முடியும்; அந்தப் பகுதியின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளிலே பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** சரி. அதேபோல எனது தொகுதியிலே, நான் பல முறை இந்த அவையிலே பேசியிருக்கிறேன், புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் என்று. அரசாங்கம் ஒத்துழைப்புத் தருகிறபோது, எப்படிப் பைக்காரா நீர் மின் திட்டத்திற்கு மத்திய அரசின் மூலம் பல்வேறு இடையூறுகள் வந்ததைப் போல, இந்தப் பேருந்து நிலையத்தை நாங்கள் கொண்டு வருகிறபோது எல்லாம், ஏதாவது ஒரு அரசியல் கட்சி முட்டுக்கட்டை போட்டு, தடுத்துக்கொண்டிருக்கிறது. நம் தமிழக முதல்வர் அவர்கள் இதிலே சிறப்புக் கவனம் செலுத்தி, மயிலாடுதுறைக்குப் புதிய பேருந்து நிலையத்தை அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, படித்து, வேலையில்லாத இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கிறார்கள். வயது வரம்பைக் கொஞ்சம் நீட்டித்துத் தரும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், ஓசூர் தொகுதியிலே பேரிகை கிராமத்திலே Sanmar தொழிற்சாலை இருக்கிறது. இது சுற்றுச்சூழலைப் பாதித்திருக்கிறது. இது தொடர்பாக, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், நானும் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பைக்



கொடுத்திருக்கிறோம். விரைவில் அதை நிறைவேற்றித் தரும்படிக் கேட்டுக்கொண்டு, இந்த அளவிற்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. வனத் துறை அமைச்சர் பேசும்போது கேளுங்கள். (குறுக்கீடு) அவர் பேசும்போது கேளுங்கள். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கடவுள் எனும் முதலாளி,
கண்டெடுத்த தொழிலாளி"

என்ற ஒரு புகழ் பெற்ற பாடலைப் பாடிய புரட்சித் தலைவர் அவர்களின் கருத்திற்கு ஏற்ப, 27 ஆண்டுகள் காக்கிச் சட்டை அணிந்து, போக்குவரத்துத் தொழிலாளியாகப் பணியாற்றி வந்த என்மீது கனிவான பார்வை கொண்டு, விசுவாசம் என்ற விலை மதிப்பற்ற சொத்தை மட்டுமே சொந்தமாகக் கொண்டிருந்த இந்த எளிய தொண்டனை, இம்மாமன்றத்திலே பேசுகின்ற அளவிற்கு உயர்வு தந்து, உள்ளம் மகிழ்ந்து, உழைக்கும் வர்க்கத்திற்கு உயர்வைத் தருகிறேன் என்று செய்து காட்டிய சிங்கத் தலைவியே! தொழிலாளர்களின் வாழ்க்கை மேம்பாடு அடைய, அவர்தம் குடும்பங்கள் இன்பத்தோடு வாழ்ந்திடத் திட்டம் வகுத்து, சிறப்பு வாய்ந்த முறையில் சலுகைகள் பல வழங்கி, நல்லாட்சி நடத்தும் நல்ல மனம் கொண்டவர்தான் நாடு போற்றும் நம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நல்ல தருணத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு, பணிவுடன் வணங்கி, என்னுடைய பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுதான், சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை ஒரு முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

தற்போது மத்தியில் ஆட்சி நடத்துபவர்கள், 27-5-2004-ல் ஒரு குறைந்தபட்ச செயல் திட்டத்தினை வெளியிட்டார்கள். அதில், மொத்தத் தொழிலாளர்களில் 93 சதவிகிதம் உள்ள அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் நலக் காப்பீடு ஆகிய திட்டங்களைச் செயல்படுத்தப் போகிறோம் என்று தெரிவித்தார்கள். ஆனால், அந்தத் திட்டம் என்னவானது? அவர்கள் சொன்னார்கள், சொன்னார்கள், இன்னும் சொல்லிக் கொண்டேதான் இருக்கிறார்கள். இதுவரை அந்த சமூகப் பாதுகாப்புத் திட்டம் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை.

*முற்பகல் 10-30*

மேற்கு வங்காளத்தில், பல ஆண்டு காலமாக ஆண்டு வரும் கம்யூனிஸ்ட் ஆட்சியில்கூட, இதுபோன்று, கட்டுமானத் தொழிலாளர்களுக்கென்று ஒரு தனி வாரியம் இல்லை. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள், 1994 ஆம் ஆண்டிலேயே கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வாரியம் அமைத்ததோடு மட்டுமல்லாமல், கடந்த வாரம், 29-3-2005-ல், அவர்களுக்கு ஓய்வூதியம் அளித்து, இதே மாமன்றத்தில் அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஓய்வூதியத்தை நிலுவைத் தொகையுடன் அளிக்க வேண்டும் என்று ஆணையிட்டார்கள். அந்தத் தொழிலாளர்களின் வயிற்றில் பால் வார்த்த இது, சாதனை இல்லையா?

அம்மா அவர்கள் அன்று சொன்னார்கள். இன்று செய்து முடித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்று, சொன்னதைச் செய்து முடிக்கின்ற தலைவி, அகில இந்திய அளவில், எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர, வேறு யாரும் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

முந்தைய ஆட்சிக் காலத்தில், 4,720 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு, 1 கோடியே 76 இலட்சத்து 70 ஆயிரத்து 500 ரூபாய் உதவித் தொகைகள் வழங்கப்பட்டன. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், இதுவரை, 46,950 தொழிலாளர்களுக்கு, 15 கோடியே 17 இலட்சத்து 37 ஆயிரத்து 865 ரூபாய் உதவித் தொகைகள் வழங்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கென, முந்தைய ஆட்சியில் 10 வாரியங்கள் எந்தவித நிதியாதாரமும் இன்றி, தேர்தல் கண்ணோட்டத்தோடு



உருவாக்கப்பட்டன. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள், அந்த 10 வாரியங்களையும் ஒன்றாக இணைத்த பிறகு, தற்போது இந்த வாரியம், செம்மையாகச் செயல்பட்டு வருகிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியத்தில், முந்தைய ஆட்சியில் 63 தொழிலாளர்களுக்கு மட்டுமே, 2 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், இதுவரை 22 ஆயிரத்து 482 தொழிலாளர்களுக்கு 5 கோடியே 22 இலட்சத்து 96 ஆயிரத்து 150 ரூபாய், (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, 254 மடங்கு அதிகமாகப் பணப் பயன்கள் வழங்கப்பட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமையடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைத் தொழிலாளர் முறையை அடியோடு நீக்கும்பொருட்டு, ஒரு செயல் திட்டத்தை— Action Plan— மாண்புமிகு அம்மா அவர்கள் தீட்டினார்கள். இந்தச் செயல் திட்டத்தின் நோக்கமே, 2005 ஆம் ஆண்டுக்குள் அபாயகரமான தொழில்களிலும், 2007 ஆம் ஆண்டுக்குள் அபாயகரமற்ற தொழில்களிலும் குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலுமாக அகற்ற வேண்டும் என்பதுதான்.

குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், ஒவ்வோராண்டும் ஜூன் 12 ஆம் நாள், குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம் கடைப்பிடிக்க மாண்புமிகு அம்மா அவர்கள்தான் உத்தரவிட்டார்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன். குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தும் மாவட்ட ஆட்சியருக்கு, ஆண்டுதோறும், மாண்புமிகு அம்மா அவர்களால், சிறந்த மாவட்ட ஆட்சியர் விருது வழங்கப்படுகிறது.

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் மற்றும் இந்திய, அமெரிக்க அரசுகளின் கூட்டுத் திட்டமான இண்டஸ் திட்டம் ஆகியன தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்கிறீர்களா? சரி, கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** இண்டஸ் திட்டத்தின் செயல்பாட்டை... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** இண்டஸ் திட்டத்தின் செயல்பாட்டை... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, அமைச்சர் முடித்தவுடன் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** இண்டஸ் திட்டத்தின் செயல்பாட்டைப் பார்வையிட, இங்கு வந்திருந்த அமெரிக்கத் தொழிலாளர் துறை துணை அமைச்சர் திரு. ஸ்டீவன் ஜே. லா என்பவர், "இந்தத் திட்டம், இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான், சமூக அக்கறையுடன் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது" என்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசைப் பாராட்டியுள்ளார் என்பதை இந்த மாமன்றத்திற்குக் கூறிக்கொள்வதில் பெருமிதம் அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, சிறப்பான தொழிலாளர் நலக் கொள்கையினைக் கொண்டு செயல்பட்டு வருவதால், தமிழ்நாடு தொழில் அமைதி நிலவும் சிறந்த மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேலை நிறுத்தம் என்று எடுத்துக்கொண்டால், 2003 ஆம் ஆண்டில் வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்பினால், 15 இலட்சத்து 70 ஆயிரத்து 866 மனித நாட்கள் இழப்பு ஏற்பட்டன. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த சீரிய நடவடிக்கைகளின் காரணமாக, இந்த ஆண்டில் ஏற்பட்ட மனித நாட்கள் இழப்பு, 11 இலட்சத்து 50 ஆயிரத்து 415 மட்டும்தான். கடந்த ஆண்டில் 56 வேலை நிறுத்தங்களும், 28 கதவடைப்புகளும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆலோசனைப்படி, சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, தமிழ்நாடு காகித நிறுவனம் மற்றும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஓசூரில் உள்ள Ashok Leyland நிறுவனத்தில் ஊதிய உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்தார்கள். இந்த வேலை



நிறுத்தம், உயர்மட்ட அளவில் நடந்த பேச்சுவார்த்தையின் காரணமாக விலக்கிக் கொள்ளப்பட்டது.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தி, மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்தின்போது பேசினார்கள். 1981 ஆம் ஆண்டு கழக ஆட்சியின்போது, தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்கான சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி, 24 மாதங்களில் 480 நாட்கள் பணிபுரிந்த தொழிலாளர்கள், பணி நிரந்தரம் என்று கருதி, உரிமை பெறுகிறார்கள். இந்தச் சட்டம் தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் பொருந்தும். தோட்ட நிறுவன அதிபர்களும், அப்பகுதியில் உள்ள தொழிற்சங்கங்களும் இணைந்து, அரசுக்கு மனுச் செய்து, தமிழ்நாடு பணி நிரந்தரப்படுத்தும் சட்டத்திலிருந்து தோட்ட நிறுவனங்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, இந்த விதிவிலக்கை அளிக்க மறுத்துவிட்டது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கான மத்திய அரசின் ஒருங்கிணைந்த வீட்டு வசதித் திட்டம், தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, வீடு ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். அதன்படி, 499 வீடுகளுக்கு 24 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் உள்ள 67 தொழில் இனங்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 1-2-2004 முதல் தேசிய அடிநிலை ஊதியத்தை நாளொன்றுக்கு 66 ரூபாயாக மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் 54 தொழில் இனங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்தபட்ச ஊதியம், மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ள 66 ரூபாயைவிட அதிகமாகவே உள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மணக்க வரும் தென்றலிலே குளிரா இல்லை,
மாந் தோப்பில் நிழலா இல்லை,
தணிப் பரிதாம் துன்பம் இது.
தமிழ்நாட்டில், தமிழ்த் தெருவில், தமிழ்தான் இல்லை"

என்ற பாரதிதாசனின் வேதனைக்கு ஒரு விடிவு காலம் தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். இன்றையதினம் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் அளித்து, வணிக நிறுவனங்களில் உள்ள பெயர்ப் பலகைகளைத் தமிழில் எழுத இத்துறை தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, நன்றாகக் கவனியுங்கள். (சிரிப்பு) முக்கியமானது. அமைச்சர் முக்கியமானதைச் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** தமிழில் பெயர்ப் பலகைகள் வைக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, 9,061 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

தொழிற்சாலைகளை உருவாக்குவதிலும், தொழிலாளர்களின் நலனைக் கட்டிக் காப்பதிலும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இந்தியாவிலேயே ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய முயற்சியாலும், சிறப்பான தொழிலாளர் நலக் கொள்கையாலும், தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை வெகுவாக உயர்ந்துள்ளது. முந்தைய தி.மு.க. ஆட்சியில் 27,991 ஆக இருந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, 34,520 ஆக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர்களின் எண்ணிக்கையும் ஏறத்தாழ 13 இலட்சமாக உயர்ந்துள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கையைவிட மூன்று மடங்கு குறைவாகத் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள மேற்கு வங்கத்தில் ஏற்பட்டுள்ள தொழிற்சாலை விபத்துக்களின் எண்ணிக்கை, தமிழ்நாட்டைவிட 15 மடங்கு அதிகமாக உள்ளது. (குறுக்கீடு) தமிழ்நாட்டிற்கு இணையாகத் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், அமைச்சருடைய கன்னி பதிலுரை. அதனால், முடிந்ததற்குப் பிறகு கேளுங்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** தமிழ்நாட்டிற்கு இணையாக தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள மகாராஷ்டிரா மாநிலத்தில் ஏற்பட்டுள்ள தொழிற்சாலை விபத்துக்கள் 6,069. ஆனால், அத்தகைய விபத்துக்கள் தமிழ்நாட்டில் 1,943 மட்டுமே. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பாதுகாப்பு விதிகளைச் செம்மையாகச் செயல்படுத்தியதால், விபத்துக்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துள்ளது. இதுவொரு மிகப் பெரிய சாதனையாகும் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைப் பொறுத்த வரையில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களையும் கணினிமயம் ஆக்கியுள்ளது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

கிராமப் பகுதி இளைஞர்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற ஏதுவாக, மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும், தன்னார்வ பயிலும் வட்டத்தினை விரிவுபடுத்தியதன் காரணமாக, 1,633 இளைஞர்கள் நாட்டின் உயர்ந்த தேர்வுகளில் வெற்றி பெற்றுள்ளனர். அதில், மத்திய தேர்வாணையம் நடத்தும் I.A.S. தேர்வில் ஏழு பேர் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் பெருமை கொள்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களே, இதய தெய்வமே! தத்துவத்தில் தாங்கள் ஒரு சாக்ரடீஸ்; தீயோர்களைத் தண்டிப்பதிலும், தீமைகளைக் களைவதிலும் தாங்கள் ஒரு சாணக்கியர்; ஏழைகளுக்குப் பாடுபடுவதில் தாங்கள் ஒரு அன்னை தெரசா; தொழிலாளர்களுக்குத் தாங்கள் ஒரு விடிவெள்ளி; தமிழ் மக்களுக்குத் தங்கள் ஆட்சி ஒரு பொற்காலம். தொழிலாளர்கள்மீது மிகுந்த அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய தலைமையிலும், சிறந்த வழிகாட்டுதலின்படியும் இத்துறை மேலும் சிறப்பாகப் பணியாற்றும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, எனது உரையை நிறைவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்:

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்— இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு உதவித் தொகையினை ரூ. 2,000-லிருந்து, ரூ.4,000 ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக ரூ.14 இலட்சம் செலவாகும்.

பதிவு செய்து கொண்டுள்ள 1,000 தொழிலாளர்கள், மூக்குக் கண்ணாடி வாங்கிய செலவினை ஈடுசெய்வதற்காக, ரூ. 250 வரை வழங்கப்பட்டு வந்தது. இப்போது, 2,000 தொழிலாளர்களுக்கு ரூ. 500 வரை வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக ரூ.7.5 இலட்சம் செலவாகும்.

பதிவு செய்துள்ள கட்டுமானத் தொழிலாளர்கள் இயற்கை மரணமடைந்தால், அவர்களுடைய நியமனதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை ரூ.10,000–ஐ, ரூ.15,000 ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பதிவு செய்துள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் பெண் குழந்தைகள் பள்ளிக் கல்வியைத் தொடர்வதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில், கல்வி உதவித் தொகை, 10 மற்றும் 11 ஆம் வகுப்பு படிப்பதற்கு தலா 1,000 ரூபாயும், 12 ஆம் வகுப்பு படிப்பதற்கு 1,500 ரூபாயும் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக ரூ.1.3 கோடி செலவாகும்.

2005–2006 ஆம் ஆண்டில் கட்டுமான பெண் தொழிலாளர்களின் குழந்தைகளின் தேவைக்காக, சென்னை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சேலம், கோவை ஆகிய மாநகரங்களில் குழந்தைகள் காப்பகம் ஆரம்பித்து நடத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஆண்டு ஒன்றுக்கு ரூ.18.32 இலட்சம் செலவாகும்.



உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்: இவ்வாரியத்தில், பதிவு செய்துள்ள உடலுழைப்பு பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மகப்பேறு உதவித் தொகை ரூபாய் 2,000–லிருந்து, ரூ.4,000 ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக ரூ.41 இலட்சம் செலவாகும்.

பதிவு செய்து கொண்டுள்ள உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கான உதவித் தொகைத் திட்டம் இதுவரை இல்லை. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் கருணைப் பார்வையால், மூக்குக் கண்ணாடி வழங்கிய செலவினை ஈடுசெய்வதற்காக, ஆண்டு ஒன்றுக்கு 2,000 தொழிலாளர்களுக்கு தலா ரூ. 500 வீதம் வழங்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஆண்டு ஒன்றுக்கு ரூ.10 இலட்சம் செலவாகும்.

பதிவு செய்துள்ள உடலுழைப்புத் தொழிலாளர்கள் இயற்கை மரணம் அடைந்தால், அவர்களின் நியமனதாரர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ.10,000–லிருந்து ரூ.15,000 ஆக உயர்த்தி வழங்க, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பதிவு செய்துள்ள உடலுழைப்புத் தொழிலாளர்களின் பெண் குழந்தைகள், பள்ளிக் கல்வியைத் தொடர்வதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில், கல்வி உதவித் தொகை 10 மற்றும் 11 ஆம் வகுப்பு படிப்பதற்கு, தலா 1,000 ரூபாயும், 12 ஆம் வகுப்பு படிப்பதற்கு 1,500 ரூபாயும் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஆண்டு ஒன்றுக்கு ரூ.1.3 கோடி செலவாகும்.

முற்பகல் 10–45

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்: கணினி அடிப்படைப் பயிற்சி பெற, இவ்வாரியத்தில் உறுப்பினராக உள்ள தொழிலாளர் மற்றும் அவரைச் சார்ந்தோர் 150 பேருக்குத் தலா ரூ. 1,000 உதவித் தொகை வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஆண்டு ஒன்றுக்கு 1.5 இலட்சம் ரூபாய் செலவாகும்.

இவ்வாரியத்தின் 71 தொழிலாளர் நல மையங்களுக்கும், தலா ஒரு மின் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தை 3,97,316 ரூபாய் செலவில் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாரியத்தின் தொழிலாளர்கள் மூக்குக் கண்ணாடி வாங்கிக் கொள்ள வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை ரூ. 200-ஐ 400 ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் கூடுதலாக ஆண்டு ஒன்றுக்கு 2 இலட்சம் ரூபாய் செலவாகும்.

இவ்வாரியத்தின் தொழிலாளர்கள் பணிக் காலத்தில் மரணமடையும் போது, அக்குடும்பத்துக்கு வழங்கப்பட்டு வந்த ஈமச்சடங்கு உதவித் தொகை ரூ. 500-ஐ, ரூ.1,500 ஆக, மூன்று மடங்கு உயர்த்தி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாரியத்தில் பாட நூல் உதவித் தொகையாக, மேல்நிலைக் கல்விக்கு வழங்கப்பட்ட ரூ. 40-ஐ, ரூ.180 ஆகவும், பட்டப் படிப்பிற்கு ரூ.100-ஐ ரூ.250 ஆகவும், முதுநிலைப் பட்டப் படிப்பிற்கு ரூ.150-ஐ ரூ.300 ஆகவும் உயர்த்தி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் கூடுதலாக ஆண்டு ஒன்றுக்கு 2 இலட்சம் ரூபாய் செலவாகும்.

பொறியியல், மருத்துவம், சட்டம் மற்றும் வேளாண்மை பட்டப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக இவ்வாரியத்தில் வழங்கப்பட்ட 1,200 ரூபாயை, ரூ.2,400 ஆக, இரு மடங்கு உயர்த்தியும், பொறியியல் மற்றும் மருத்துவ பட்டயப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ. 720-ஐ, ரூ.1,440 ஆக, இரண்டு மடங்கு உயர்த்தியும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தொழிற்பயிற்சிக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இவ்வாரியத்தில் வழங்கப்பட்டு வந்த ரூ. 500-ஐ, ரூ.1000 ஆக, இரண்டு மடங்கு உயர்த்தியும், மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ. 600-ஐ, ரூ.1,200 ஆக, இரண்டு மடங்கு உயர்த்தியும், வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வகைகளில் கூடுதலாக ஆண்டு ஒன்றுக்கு 4.16 இலட்சம் ரூபாய் செலவாகும்.



அபாயகரமான தொழில்களில் பணிபுரியும் மேற்பார்வையாளர்களுக்கு, பாதுகாப்பு மற்றும் நலம் குறித்து, "ஒரு மாதச் சான்று" அளிக்கும் பயிற்சி வகுப்புகளை முதன்முறையாக, தொழிலாளர் கல்வி நிலையம் நடத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

வெளிநாட்டில் செவிலியர் பணியில் சேருவதற்கு, அயல்நாட்டு நர்ஸ் பட்டதாரிகளுக்கான ஆணையம் நடத்துகின்ற தேர்விலும், பன்னாட்டு ஆங்கில புலமைத் தேர்விலும் தேர்ச்சி பெறப் போதுமான பயிற்சிகளை, அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் குறைந்த செலவில் அளித்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து வைத்த கருத்துகளின்மீது போதிய அளவிற்கு விளக்கங்களை அளித்திருக்கிறேன். மாமன்ற உறுப்பினர்கள் அளித்துள்ள அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் அரசு கவனத்திலே எடுத்துக் கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணை பெற்று, தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள், தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்— அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு நிதி ஒதுக்குவதிலே, கடந்த காலத்தில் மோட்டார் வாகன வரியின் அடிப்படையிலே 1 சதவீதம் வசூலிக்கப்பட்டு ரூ. 3 கோடியே 25 இலட்சம் ஓராண்டு காலத்திலே சேர்த்து வைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது அந்த வாரியத்திலே நிதி அதே அளவுக்கு வசூலிக்கப்படுகிறதா? உயர்த்தப்படுகிறதா? கடந்த காலத்திலே நிதி ஆதாரங்களை உருவாக்குவதற்காகவென்றே இந்த அமைப்புசாராத் தொழிலாளர்களுக்காக நிதி ஆதாரமும் உருவாக்கப்பட்டது. அது தொடர்ந்து செயல்படுகிறதா? அதுமட்டுமல்லாமல், அரசாங்கமே ஒரு கோடி ரூபாய் மானியமும் வழங்கி இருக்கிறது. இப்போது அந்த நிதி ஆதாரங்கள் எப்படி இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எதிர்பார்த்ததைவிட, தொழிலாளர் நலத் துறை அமைச்சர், அவருக்குத் தந்துள்ள கடமையைச் சிறப்பாகவே செய்துள்ளார். ஆகவே, அவரை நான் பாராட்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது, வசிஷ்டர் வாயால் பிரம்ம ரிஷி பட்டம் வாங்குகிற மாதிரி. (சிரிப்பு)

**திரு. கே.சி. கருணாகரன்:** ஒரு போக்குவரத்துத் தொழிலாளியாகத் தொடங்கி, சட்டமன்ற உறுப்பினராகி, அமைச்சராகி, அதிகாரிகள் தந்துள்ள இந்த விளக்கங்களை இவ்வளவு நிதானமாகவும், பொறுமையாகவும், சிறப்பாகவுமே செய்துள்ளார். ஆகவே, அவருடைய கன்னிப் பேச்சில் குறுக்கிடுவது என்னுடைய நோக்கம் அல்ல. நான் அதை விரும்பவும் இல்லை. ஆனால், அரசின் கவனத்திற்கு இப்போது நான் சொல்வதைப் பதிவு செய்துகொள்வதும், எதிர்காலத்தில் இந்தத் துறையை முறையாகச் செயல்படுத்துவதும், அமைச்சருக்கு மட்டுமல்ல, இந்த அரசுக்கே உகந்ததாக இருக்கும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். 45 பஞ்சாலைகள் பூட்டப்பட்ட பிரச்சினை. முத்தரப்புக் குழு போடப்பட்டது. மூன்று முறை கூடியது. நடவடிக்கை இல்லை. மூடியது மூடியவாறு உள்ளது. வேலையிழந்தோருக்கு 250 ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. நிறுத்தப்பட்டுள்ளது. இப்போது கிடைக்கவில்லை. புதிய ஆலைகள் புல்லுருவிபோல் தொடர்கின்றன. பெண்கள் campus கூலிகளாக, சிறைப்பிடிக்கப்பட்ட நிலையிலே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருணாகரன், இதை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு பேசக்கூடாது. ஏதாவது ஒரு கேள்வியைக் கேளுங்கள். Clarification ஏதாவது கேளுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** நான் பதிவு செய்வதுதான். நான் பிரசங்கம் பண்ணவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Clarification ஏதாவது வேண்டுமென்றால் கேளுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** Clarification கேட்டுவிட்டு, அப்புறம் பதில் சொல்லவும் நான் விரும்பவில்லை. இவை இருக்கின்றன. இந்தத்



துறை, தொழிலாளர் நலத் துறை, இப்போது முடமாகி இருக்கிறது, செயல்படவில்லை என்பது எங்கள் குற்றச்சாட்டு. எதிர்காலத்திலாவது இதைச் செயல்பட வைப்பதும், பெண்களை, பாதுகாப்பாக, சட்டரீதியான பாதுகாப்போடு செயல்பட வைப்பதும் இந்த அரசின் கடமை என்பதை நான் வலியுறுத்தி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதற்குப் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமான திரு. பொன்முடி அவர்கள், 2–4–2005 அன்று, தினகரன் செய்தி ஏட்டிலே அமைப்புசாராத் தொழிலாளர்களின் செயல்பாடு குறித்துப் பேசியதற்கு நான் என்னுடைய விளக்கத்தை அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994 ஆம் ஆண்டிலே மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் கட்டுமானத் தொழிலாளர்களுக்காக, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட்டு, முதன்முறையாகச் செயல்பட்டு வருகிறது. முறையாகச் செயல்படாமல் இருந்த அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியம் என மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் குறிப்பிட்டது, 1997 ஆம் ஆண்டில் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் ஆரம்பிக்கப்பட்ட வாரியம்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டவாறு, '97–ல் ஒரு குழுவினை அமைத்து, அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அமைக்கப்பட்டதுதான் அந்த வாரியம். அந்தக் குழு அரசுக்கு அளித்த அறிக்கையில், தனித்தனிப் பிரிவினருக்கும், தனித்தனியாக வாரியங்கள் அமைப்பது நிர்வாக ரீதியாக உகந்ததல்ல என்று கருதி, நிதி நோக்கில் நிலைத்து நிற்கக்கூடியதல்ல என்றும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு ஒரேயொரு முதன்மை வாரியம் அமைத்து, திட்டங்களை நிர்வகிக்கலாம் என்று அந்தக் குழு பரிந்துரை செய்துள்ளது. ஆனால், அந்தக் குழுவின் பரிந்துரைக்கு மாறாக, நிதியாதாரங்கள் ஏதுமில்லாமல், பல்வேறு தொழிலாளர் நல வாரியங்களை திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் அமைத்தது. கட்டடத் தொழிலாளர்களுக்கு குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் காப்பீடு செய்யப்பட்டு, காப்பீடு செய்வதற்கான

premium தொகையை வாரியமே செலுத்தி வருகிறது என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், இந்தத் திட்டம் 1995 ஆம் ஆண்டிலே மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் அமலாக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தைப் பொறுத்த வரையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 4,720 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ரூ.1 கோடியே 76 இலட்சத்து 70 ஆயிரத்து 500 மட்டும்தான் உதவித் தொகை வழங்கப்பட்டது. ஆனால் தற்போது, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், 46,950 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.15 கோடியே 17 இலட்சத்து 37 ஆயிரத்து 865 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு நல வாரியத்தைப் பொறுத்த வரையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 63 உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு 2 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் மட்டும்தான் உதவித் தொகையாக வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில், 22,452 உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) 5 கோடியே 22 இலட்சத்து 96 ஆயிரத்து 150 ரூபாய் உதவித் தொகையாக அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டது.

முற்பகல் 10-55

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்திற்கு கட்டுமானப் பணியில் செய்ல்புரிபவர்களின் பங்களிப்புத் தொகைமூலமாக, வாரியத்திற்கு நிதி வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் வழிவகை ஏற்படுத்தப்பட்டது. இதன்மூலம் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்திற்கு ஒரு வலுவான நிதியாதாரம் ஏற்பட்டதால் ஓய்வூதியம் அளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். ஆனால் போதுமான நிதியாதாரங்கள் இல்லாமல் தி.மு.க. ஆட்சியில் பல்வேறு வாரியங்கள் ஏற்பட்டன. இக்குறையைச் சரிப்படுத்தும் நோக்கில்தான் மாண்புமிகு அம்மா அவர்கள், தி.மு.க. ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட 10 வாரியங்களையும் ஒருங்கிணைத்து, ஒரே வாரியமாக அமைத்தார்கள். இந்த ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில் தற்போது 7 இலட்சத்து 13 ஆயிரத்து 647 தொழிலாளர்கள் பதிவு செய்துகொண்டுள்ளார்கள். இவ்வாரியத்திற்குத் தற்போது பெறப்படும்



சராசரி ஆண்டு வருமானம் ரூ.5.5 கோடி மட்டுமே. இந்த வாரியத்திற்கு, தற்போது திட்டங்கள் அமல்படுத்தப்படுவதற்கு ஏற்படும் சராசரி ஆண்டுச் செலவு ரூபாய் 3 கோடி ஆகும். 2004 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்துவது தொடர்பாக ஆராய்வு செய்த ஓய்வூதிய நிபுணர், தற்போது வாரியத்தின் நிதிநிலையில் மூன்று வருடங்களுக்கு மட்டுமே ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த இயலும் எனத் தெரிவித்தார். ஓய்வூதியம் அளிப்பது தொடர்பாகப் பரிசீலனை செய்ய அரசால் அமைக்கப்பட்ட பணிக் குழுவும் அரசுக்கு அளித்த தனது அறிக்கையில், இவ்வாரியத்தில் உள்ள தொழிலாளர்கள் எண்ணிக்கை, வாரியத்தின் வருமானம், அதிகரித்து வரும் செலவு ஆகியவற்றைக் கணக்கில்கொள்ளும்போது இவ்வாரியத்தில் ஓய்வூதியத் திட்டம் தற்போது அமல் செய்வது சாத்தியமில்லை எனப் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தினால் தற்போது ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவது சாத்தியமில்லையென மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாரியத்திற்கு வலுவான நிதியாதாரம் ஏற்படும்பொழுது, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று ஓய்வூதியம் வழங்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) பொன்முடி. (குறுக்கீடு) சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியிலே நிதியாதாரமே உருவாக்கப்படவில்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே மூன்று கோடியே 24 இலட்சம் ரூபாய் ஒரு ஆண்டிலேயே நிதியாதாரம் உருவாக்கப்பட்டது. இப்போதுகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 4 ஆண்டு காலத்திலே இந்த உடலுழைப்புத் தொழிலாளர்களுக்காக 5 கோடி ரூபாய்தான் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்ட கேள்வியே, மூன்று கோடியே 24 இலட்சம் ரூபாய் என்பது, வாகன வரிகளின்மீது ஒரு சதவிகிதமாக வசூலிக்கப்பட்டு, அந்த உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கென்று நிதி சேமித்து

வைக்கப்பட்டது. அரசாங்கமும் மானியம் கொடுத்தது. இப்போது அந்த முறை பின்பற்றப்படுகிறதா? பின்பற்றப்படுவதாக இருந்தால், எப்படி 5 கோடி ரூபாய்தான் இருக்கிறது என்று சொல்கிறீர்கள்? ஒரு வருடத்திலேயே மூன்று கோடி ரூபாய் கலெக்ட் செய்திருந்தார்கள், கடந்த கால ஆட்சியிலே. நீங்கள் நிதியாதாரம் இல்லையென்று சொல்கிற கடந்த கால ஆட்சியிலேயே ஒரே ஆண்டிலேயே கிட்டத்தட்ட மூன்றரைக் கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. நான்கு ஆண்டு காலத்தில் இந்த அமைப்புசாராத் தொழிலாளர்களுக்காக நீங்கள் எவ்வளவு நிதியாதாரம் திரட்டியிருக்கிறீர்கள்? ஏனென்றால், பல்வேறு திட்டங்களையும் அறிவித்திருக்கிறீர்கள். இவற்றிற்கு இந்த நிதியாதாரம் இருக்கிறதா என்பதை மட்டும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டமன்ற உறுப்பினர் பொன்முடி அவர்கள் கூறும்பொழுது, தேர்தலுக்காக நாம் இதையெல்லாம் அறிவித்திருக்கிறோம் என்று பேப்பரிலே அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். 16–12–2000 அன்று சனிக்கிழமை சிரணி அரங்கத்தில் நடைபெற்ற அந்தக் கூட்டத்திலே, பொன்முடி அவர்கள், அவர்களுக்குத் தேர்தலுக்காக அளிக்கப்பட்டது இந்தப் புத்தகம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன், இதிலே 240 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள், 10 வாரியத்திற்கு. இதனைப் பார்த்தீர்கள் என்றால், இதிலே அட்ரஸ் சரியாக இல்லை. தபால் போட்டால் தபால் சரியாகப் போய்ச் சேராது. அந்த மாதிரியான உறுப்பினர்களை நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வாரியத்தையே அமைக்கக் கூடாது என்று தொழிற்சங்கத் தலைவர் மறைந்த வை. பெருமாள் அவர்கள் இதிலே கையெழுத்திட்டிருக்கிறார்கள். இதிலே நிதியாதாரம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வாரியங்களைத் தனித்தனியாக அமைக்கக் கூடாது என்று வை. பெருமாள் அவர்களே கையெழுத்திட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தலுக்காகத்தான் நீங்கள் இந்த வாரியத்தை அமைத்தீர்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் சட்டமன்ற உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள், தினகரன் பேப்பரிலே ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு இவ்வளவு விளக்கத்தையும் கொடுத்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்டதற்குப் பதில் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) பொன்முடி, ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** நான் கேட்டதற்கு இன்னும் பதிலே வரவில்லை. நான் கேட்டது... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு குழுவினுடைய பரிந்துரையை ஏற்று (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்திற்கு, தற்போது ஆண்டு ஒன்றிற்கு 25 கோடி ரூபாய் வருமானம் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, நீங்கள் கேட்டதற்குச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு)

முற்பகல் 11–00

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது கட்டுமானத் தொழிலாளர்கள் வேறு, அடுத்த வாரியம் ஒன்று வேறு. அதற்கு நான் கேட்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதைச் சொல்லுங்கள். கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வேறு. நான் சொல்வது உடலுழைப்புத் தொழிலாளர்களுக்காக இருந்தது, 3 கோடி ரூபாய் நிதி தனி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நீங்கள் கேட்டதற்குத் தெளிவாக விளக்கம் சொல்லி இருக்கிறார். (குறுக்கீடு) கேட்டதற்குத் தெளிவான விளக்கம் சொல்லி இருக்கிறார். (குறுக்கீடு) உட்காருங்கள், பொன்முடி, சொல்லி விடுகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், (குறுக்கீடு) பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது, கட்டுமானத் தொழிலாளர்களுக்குத் தனியாக இருக்கிறது, உடலுழைப்புத் தொழிலாளர்களுக்குத் தனியாக இருக்கிறது. உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு இருப்பதில், 3 கோடி ரூபாய் நாங்கள் ஆட்சியில் விட்டுவிட்டுப் போனோம். இப்பொழுது நீங்கள் சொன்னது கட்டுமானத் தொழிலாளர்களுக்கு. நான் கேட்டது,

உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு நீங்கள் ஒதுக்கி இருப்பது எவ்வளவு? அப்போது, ஓராண்டு காலத்திலேயே 3 கோடி ரூபாய் இருந்ததே, இப்பொழுது 4 ஆண்டு காலத்தில் எவ்வளவு வைத்திருக்கிறீர்கள் என்று நான் கேட்கிறேன். இரண்டும் வெவ்வேறு. (குறுக்கீடு) இரண்டும் வெவ்வேறு. தெரிந்தால் சொல்லுங்கள். இல்லாவிட்டால் விட்டுவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். அதாவது, அமைச்சர் அவர்கள் தெளிவாகப் பதில் சொன்னார்கள். ஒரு குழுவினுடைய (குறுக்கீடு) தெளிவாகப் பதில் சொன்னார்கள். ஒரு குழுவினுடைய பரிந்துரையை ஏற்று (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒரு குழுவினுடைய பரிந்துரையை ஏற்று, இது சீர்படுத்தப்பட்டது என்று சொன்னார்கள். பெயர்தான் மாறி இருக்கிறது என்று சொன்னார்கள். பெயர் மாறுவதிலே ஒன்றும் தவறு இல்லை. (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** தவறான தகவலை தயவுசெய்து கொடுக்கக்கூடாது. அப்பொழுதே கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நிதி இருந்தது. உடலுழைப்புத் தொழிலாளர்களுக்குத் தனியாக நிதி இருந்தது. பெயர் மாறவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 வாரியங்களாக இருந்தன-- போதுமான அளவு நிதி ஒதுக்கவில்லை--ஒரே வாரியமாக ஆக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். பெயர் மாற்றத்திலே ஒன்றும் தவறு இல்லையே? தெய்வசிகாமணி பொன்முடி ஆகவில்லையா? (குறுக்கீடு) தெய்வசிகாமணி என்ற பெயர் பொன்முடி ஆகவில்லையா? அது மாதிரிதான். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

## 7. விதி 110-ன்கீழ் அறிக்கை

### சென்னை, கிரீம்ஸ் சாலையில் வணிக வரித் துறை ஆணையர் புதிய அலுவலகம் கட்டுதல்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் வணிக வரிகள் துறை மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கும், சமூக நலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் தேவையான நிதியைப் பெருமளவில் ஈட்டித் தருகின்ற துறை ஆகும். அரசின் வரி வருவாயில் 68 சதவீதம் வணிக வரிகள்மூலமாகவே கிடைக்கப்பெறுகிறது.

2001 ஆம் ஆண்டில் நான் மீண்டும் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, தமிழ்நாடு கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கி இருந்ததையும், வணிக வரி வருவாய் வளர்ச்சி வீதத்தில் தொய்வு ஏற்பட்டு இருந்ததையும், அதனைச் சரிப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டதையும் இந்த அவையின் மரியாதைக்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். இதன் பயனாக, வரி வருவாய் வளர்ச்சி வீதம் சிறப்பாக உயர்ந்துள்ளது. 2001 ஆம் ஆண்டில் நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, வணிக வரி வருவாய் 8,664 கோடி ரூபாயாக இருந்தது. இது கணிசமாக உயர்ந்து, 2003--2004 ஆம் ஆண்டில் 11,757 கோடி ரூபாய் என்ற அளவை எட்டியது. (மேசையைத் தட்டும் ஒலி) 2004–2005 ஆம் ஆண்டில் வணிக வரி வருவாய் மேலும் அதிகரித்து, 13,907 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2003–2004 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2004–2005 ஆம் ஆண்டின் வணிக வரி வளர்ச்சி 18.29 சதவீதம் ஆகும். கடந்த நான்கு ஆண்டுகளில் வணிக வரி வருவாய் வளர்ச்சியின் ஒட்டுமொத்த உயர்வு 60.51 சதவீதம் ஆகும் என்பதை மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2005–2006 ஆம் ஆண்டில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக எந்த வரியும் விதிக்காத Tax Free Budget -- வரியற்ற நிதிநிலை அறிக்கையை எனது அரசு வழங்கி உள்ளபோதும், இத்தகைய வரி வருவாய் உயர்வு எட்டப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கடந்த நான்கு ஆண்டுகளில் எனது அரசு 175 கோடி ரூபாய் அளவுக்கு வரிச் சலுகைகளை வழங்கி உள்ளது. இதில் மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசல் மீதான விற்பனை வரியை சென்ற ஆண்டு இரத்துச் செய்ததில் மட்டும் 51 கோடி ரூபாய் அளவுக்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை வழங்கப்பட்ட வரிச் சலுகைகளின் மதிப்பை, நடப்பு நிதி ஆண்டு முடியக் கணக்கிட்டால், அதன் ஒட்டுமொத்த மதிப்பு 460 கோடி ரூபாய் ஆகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–05

வரி வருவாயில் எவ்வித இழப்பும் ஏற்படாமல் இருக்க வேண்டுமெனில், வரி ஏய்ப்பு தடுக்கப்பட வேண்டும். எனவே, வரி விதிப்புக்கு இலக்காகும் பொருட்கள் உரிய வரி செலுத்தப்படாமல் மாநிலத்திற்கு வெளியே எடுத்துச் செல்வதும், மாநிலத்திற்கு உள்ளே கொண்டு வரப்படுவதும் கண்காணிக்கப்பட வேண்டும். இதற்கு ஏதுவாக, பிற துறைகளுடன் இணைந்து வாகனங்களைச் சோதனை செய்யும் வகையில், மாநிலத்தின் எல்லைப் பகுதிகளில் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகளை அமைப்பது குறித்து ஆய்வு செய்திட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன்.

அரசின் வரி வருவாயில் 68 சதவீதத்தைத் தனது பங்காக வழங்குகின்ற வணிக வரித் துறையின் நிருவாகத்தை நவீனப்படுத்தவும், மேம்படுத்தவும் பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டது. வரி வசூல் மற்றும் அதன் தொடர்புடைய பணிகளை விரைவாகவும், செம்மையாகவும் செய்து முடித்திட துறை முழுமையாகக் கணினிமயம் ஆக்கப்பட்டுள்ளது. துறையின் அனைத்து வரி விதிப்பு வட்டங்கள், நிர்வாக அலுவலகங்கள் மற்றும் வணிக வரி சோதனைச் சாவடிகள் ஆகியவை கணினிமயம் ஆக்கப்பட்டு, ஆணையர் அலுவலகத்துடன் தகவல் தொடர்புப் பரிமாற்றம் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இப்பணிகளுக்காக, 10 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

வணிக வரிகள் துறையின் தலைமை அலுவலகம், தற்போது சேப்பாக்கத்தில் உள்ள எழிலக வளாகத்தில் அமைந்துள்ளது. முழுவதும் கணினிமயம் ஆக்கப்பட்ட இவ்வலுவலகத்தில் 400 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்குத் தேவையான பயிற்சி அளிப்பதற்கு என தனியான பயிற்சி நிலையம் ஒன்றும் இத்துறையில் செயல்பட்டு வருகிறது. இவை அனைத்திற்கும் எழிலக வளாகத்தில் உள்ள தற்போதைய அலுவலகத்தில் போதிய இட வசதி இல்லை. இதனால் அலுவலர்களும், பணியாளர்களும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். மேலும் கணினி மையமும், பயிற்சி நிலையமும் ஆணையர் அலுவலக வளாகத்திலேயே அமையாமல் தனிக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன.

வணிக வரித் துறை ஆணையர் அலுவலகத்திற்குத் தேவைப்படுகின்ற போதிய இட வசதி; அங்கு பணியாற்றும் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகள், மற்றும் கணினி





மையம், பயிற்சி நிலையம் ஆகியவை ஆணையர் அலுவலக வளாகத்திலேயே அமைய வேண்டிய தேவை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இதற்கென ஒரு புதிய கட்டடம் கட்டுவதற்கான அனுமதி அளிக்க நான் முடிவெடுத்துள்ளேன்.

சென்னை, கிரீம்ஸ் சாலையில் தற்போது வணிக வரி நிர்வாக அலுவலகங்கள் செயல்படுகின்ற கட்டடத்திற்கு அருகில் அமைந்துள்ள அரசுக்குச் சொந்தமான 0.56 ஏக்கர் காலி நிலத்தில் இந்தப் புதிய கட்டடத்தை உருவாக்க நான் ஆணையிட்டுள்ளேன்.

இந்த இடத்தில் 4,224 சதுர மீட்டர் பரப்பளவில் அனைத்து வசதிகளுடன்கூடிய 5 அடுக்கு கொண்ட அலுவலக வளாகம் கட்டப்படும். வணிக வரித் துறை ஆணையர், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்குத் தேவையான இட வசதியுடன் இந்தப் புதிய கட்டடம் அமையும். மாநாட்டுக் கூடம், கணினி மையம் மற்றும் பயிற்சி நிலையம் ஆகியவையும் இக்கட்டடத்திலேயே இடம் பெறும். 5 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அனைத்து வசதிகளுடன் இந்தப் புதிய கட்டடம் கட்டப்படும்.

இதன்மூலம் வணிக வரித் துறை ஆணையர் அலுவலக அலுவலர்களும், பணியாளர்களும் தங்களது பணிகளை மேலும் சிறப்புடன் மேற்கொள்ள ஏதுவாகும் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 110–வது விதியிலே விவாதத்திற்கு இடம் இல்லை. (குறுக்கீடு) மானியக் கோரிக்கைமீதான விவாதத்திற்குப் பதிலுரை. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் எங்கே வருகிறீர்கள் என்று தெரிகிறது. (குறுக்கீடு) தெரிகிறது, தெரிகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பில், (குறுக்கீடு) அறிவில், ஆற்றலில், ஆன்மீகத்தில், தியாகத்தில், செயலில், (குறுக்கீடு) பண்பில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. துரைமுருகன், நீங்கள் சொல்வது என்னவென்று எனக்குப் புரிகிறது. (குறுக்கீடு) சரி,

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் தலைவர்] [2005 ஏப்ரல் 5

சரி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவரவர்களே,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. 110—வது விதியின்கீழ் உள்ள, வைக்கக்கூடிய அறிக்கையின் மேலே விவாதத்திற்குப் போக முடியாது. (குறுக்கீடு) நீங்கள் அதையொட்டித்தான் இப்போது பிரச்சினையைக் கிளப்பி இருக்கிறீர்கள். ஆகவே, தாங்கள் குறிப்பிட்டது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

முற்பகல் 11–10

***திரு. துரைமுருகன்:** ஒரே ஒரு வரி Sir.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், She is the mother of all Departments. She has got all rights, Constitutional rights, legal rights to address anything. (Thumping of desks)

**திரு. துரைமுருகன்:** நானும் அதை ஒத்துக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்களுக்கு உரிமை உண்டு. அரசாங்கம் முழுவதும் அவர் கையில்தான் இருக்கிறது. அவர் பார்த்து யாரை வேண்டுமானாலும் அமைச்சராக வைக்கலாம். அறிக்கை கொடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒத்துக்கொண்டீர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை.

**திரு. துரைமுருகன்:****

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பில், அறிவில், ஆற்றலில், ஆன்மீகத்தில்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசியது, அனுமதி இல்லாமல் பேசியது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2005 ஏப்ரல் 5]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** B.P. வந்தால் B.P. மாத்திரைதான் வைத்துக்கொள்ள வேண்டும். இப்படி அங்கலாய்ப்பது பொறுப்பற்ற ஒன்று.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. துரைமுருகன்:****

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. கடைசியாகச் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்)*

## 6. மானியக் கோரிக்கைகள், 2005—2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 14—சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 31—தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பில், அறிவில், ஆற்றலில், ஆன்மீகத்தில், தியாகத்தில், செயலில், பண்பில், பரிவில், பாசத்தில், கனிவில், துணிவில், கண் துஞ்சா உழைப்பில், சிந்தனையில், பேச்சில், எழுத்தில், ஈடற்ற ஈகைக் குணத்தில் என, அத்தனை குணங்களும் இணைந்தே பெற்று, தமிழகம் சிறக்க, தமிழ் மக்கள் வாழ்வு மலர ஓயாமல் உழைக்கின்ற உத்தமத் தாயாக விளங்குகின்ற, அமைதிப் பூமியின் சத்தியத் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) சிந்தனைச் சிகரமே! சிங்க நிகர்த் தலைவியே! செந்தமிழ்ப் பெருமையே! எங்கள் அன்னையே! தாங்கள் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடியும் தமிழகத்தின் முன்னேற்றப் படி என்று நித்தம் 20 மணி நேரம் உழைக்கும் எங்கள் உயிர் மூச்சே! அலைமகளின் அழகு வண்ணமோ நீலம், கலைமகளின் கவின் வண்ணமோ வெண்மை, எங்கள் அம்மா, உங்கள் மன வண்ணமோ பசுமை, கங்கை வற்றினாலும்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

கருணை வற்றாத பேருள்ளம் கொண்ட எங்கள் அன்னையே! தங்களைத் தலைதாழ்த்தி வணங்கி என் உரையைத் துவக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீரின்றி அமையாது உலகு' என்றார் வள்ளுவர். ஆனால் வனமின்றி அமையாது உலகு என்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. நீரின் ஆதாரமாக வனம் விளங்குகின்றது. வனம் மழை நீர் சேகரிப்பு இல்லமாகவும், துப்புரவுத் தொழிற்சாலையாகவும் இன்றைக்குத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட வனமானது அதனடியில் 50 ஆயிரம் முதல் 2 இலட்சம் கன மீட்டர் வரை தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்ளக்கூடிய ஆற்றல் மிக்கதாகத் திகழ்கின்றது. அப்படித் தேக்கி வைத்திருக்கின்ற நீரைச் சிறிது, சிறிதாக சுனை நீராக வெளியேற்றக்கூடிய சக்தி படைத்ததாகத் திகழ்கின்றது. மேலும் மண் வளத்தைக் காத்து, மண் அரிப்பைத் தடுக்கின்றது. துப்புரவுத் தொழிற்சாலையாகவும் இன்றைக்கு வனம் திகழ்ந்து கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு, 14 மீட்டர் விட்டமுடைய ஒரு மரம் 1 மணி நேரத்தில் 2,240 கிலோ கரியமில வாயுவை— Carbon-di-oxide-ஐ உட்கொண்டு, 1,712 கிலோ Oxygen-ஐ வெளியிட்டு, இன்றைக்கு துப்புரவுத் தொழிற்சாலையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஒரு வருடத்திற்கு பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள Oxygen-ஐ வெளியிட்டு, உயிரினங்கள் சுவாசிப்பதற்கு இன்றைக்கு வனங்கள் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன. சாலை ஓரத்தில் இருக்கின்ற மரங்கள் தூசு மாசினையும், ஒலி மாசினையும் கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றல் மிக்கதாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றன. 30 சதவீதம் ஒலி மாசினையும், 70 சதவீதம் காற்று மாசினையும் இன்றைக்குக் கட்டுப்படுத்துகின்றது.

இந்திய அரசமைப்புச் சட்டம் 48–A, 'வனங்கள் சுற்றுச்சூழல், நீரோடைகள், நதிகள் போன்றவற்றைக் காப்பது ஒரு அரசின் கடமை' என்று கூறுகிறது. அதே இந்திய அரசமைப்புச் சட்டம் 51–A (g), 'ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் அந்த உரிமை இருக்கிறது. அந்தக் கடமை இருக்கிறது' என்று கூறுகிறது. ஆனால் மாநாடு நடத்துபவர்கள் மரத்தை வெட்டுகிறார்கள். வியாபார நோக்கத்தில் விளம்பரப் பலகை வைப்பவர்கள் மரத்தை வெட்டுகிறார்கள். கேட்டால், பனங்காட்டு நரிகள், சலசலப்புக்கு அஞ்சமாட்டோம் என்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பனங்காட்டு நரிகளும், சிறு நரிகளும், குள்ள நரிகளும், சிங்கத்தை எதிர்த்ததாகச் சரித்திரம் உண்டா? (மேசையைத் தட்டும் ஒலி) வென்றதாகச் சரித்திரம் உண்டா? ஓடியதாகத்தான் சரித்திரம் உண்டு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தொலைநோக்குச் சிந்தனையுடன்—அரசியல்வாதிகள்



அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திப்பார்கள், அம்மா அவர்கள் அரசியல் ஞானியாக இருந்து அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்தித்து (மேசையைத் தட்டும் ஒலி) காடு வளர்ப்புத் திட்டம் என்ற ஒரு மகத்தான திட்டத்தை 1994 ஆம் ஆண்டு கொண்டு வந்து, 623.55 கோடி ரூபாயில் 1,257 கிராமங்களில் 4,57,457 எக்டேர் நிலப் பரப்பில், தரங்குன்றிய காடுகளை, தரம் மேம்படுத்திய காடுகளாகவும், வனப் பரப்பை அதிகப்படுத்தவும், வனத்திற்கு அருகே இருக்கின்ற கிராம மக்களுடைய வாழ்க்கை ஆதாரத்தை மேம்படுத்தவும், அவர்களுக்குத் தேவையான சுற்றுச்சூழல், சாலை வசதி, பள்ளிக்கூட வசதி, குடிநீர் வசதி, சுய தொழில் தொடங்கக் கடன் வசதி, அவர்களின் வாழ்க்கை ஆதாரத்திற்கு வேலை நாட்களை உருவாக்கிக் கொடுத்து, அந்தத் திட்ட கிராமத்தைத் தன்னிறைவு அடைந்த கிராமமாக, கிராம கூட்டு வன நடவடிக்கையின்கீழ் வனக் குழுக்களை அமைத்து, அந்தத் திட்டத்தினால் 1,60,000 மக்கள் பயன்பெற்றிருக்கின்றார்கள். 77 மகளிர் சுய உதவிக் குழுக்கள் பயன்பெற்றிருக்கின்றன. இந்தத் திட்டத்தைப் பாராட்டிதான் இந்திய வனத் துறை 15 விருதுகளை அறிவித்தது. அந்த 15 விருதுகளில், "இந்திரா பிரியதர்ஷிணி விஸ்வமித்ரா" என்ற அந்த விருதில், 15–ல் 3 விருதுகளை அம்மாவின் அரசு பெற்று முதலிடம் வகிக்கின்றது என்பதை நான் சொல்லிக்கொள்வதில் பெருமையடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி வனத்தைப் பெருக்குவதில், காடு வளர்ப்பதில் அம்மா அவர்கள் இந்தியாவுக்கே வழிகாட்டியாகத் திகழ்கின்றார்கள் என்ற ஒரு மகிழ்ச்சியான செய்தியைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–15

அதுமட்டுமல்ல. ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியினுடைய நிதி 2003–2004–லே செலவாகிவிட்டது. அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தினுடைய அருமை, பெருமைகளை உணர்ந்து, இந்தத் திட்டம் தொய்வில்லாமல் தொடர்ந்து நடக்க வேண்டுமென்று, நிதி நெருக்கடியான நேரத்திலும் மாநில அரசிடமிருந்து 69.09 கோடி ரூபாயை ஒதுக்கிக் கொடுத்து (மேசையைத் தட்டும் ஒலி), மேலும் பல கிராமங்கள் பயனடையவும், மகளிர் சுய உதவிக் குழுவினர் பயனடையவும் இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த ஆணையிட்டார்கள். அப்படி இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தியதன் காரணமாக, அடர்ந்த காடுகளின் பரப்பு, 17,078 சதுர கிலோ மீட்டரிலிருந்து 21,482 சதுர கிலோ மீட்டர்— அதாவது 4,404

சதுர கிலோ மீட்டர் வனப் பரப்பு அதிகரித்திருப்பதாக, இந்தியாவிலுள்ள, டேராடூனிலுள்ள வன அளவை ஆராய்ச்சி மையம், 17 சதவிகிதத்திலிருந்து 21 சதவிகிதம் தமிழ்நாட்டில் வனம் உயர்ந்திருப்பதாகப் புள்ளிவிவரம் கூறுகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் நேற்று அறிவித்தார்கள், காடு வளர்ப்புத் திட்டம் நிலை-II—எட்டு வருடங்களுக்கு இந்தத் திட்டம் இப்பொழுது நடந்ததுபோல் தொடர்ந்து நடந்து வந்தால், இந்திய வனக் கொள்கையான 33.3 சதவிகிதம் 2012 ஆம் ஆண்டு அடையவேண்டுமென்பதற்காக, இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடக்க அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்பேரில் நடந்து வந்து, 2007–ல் 25 சதவிகிதத்தையும், 2012–ல் 33.3 சதவிகிதத்தையும் நமது தமிழக அரசு, தமிழ்நாடு அடையும் என்ற மகிழ்ச்சியான செய்தியைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–20*

அம்மா அவர்கள் இன்றைக்குப் புதிய சகாப்தத்தை படைத்துக் கொண்டிருக்கின்றார்கள். சந்தன மர வருவாய் 273 கோடி ரூபாய் இந்த நான்கு வருடங்களில் வந்திருக்கின்றது. இந்த வருடம் 80 கோடி ரூபாய் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் சந்தன மரத்தை வெட்டியவன் யானைகளைக் கொன்று தந்தங்களைத் திருடியவன், சூழ்ச்சியால், வஞ்சகத்தால் அதிரடிப் படை வீரர்களையும், வனக் காவலர்களையும் கொன்று குவித்தவன், இருபது ஆண்டு காலம் சிம்ம சொப்பனமாக விளங்கிக்கொண்டிருந்த வீரப்பனை, அவனுடைய கொட்டத்தை அம்மா அவர்கள் அடக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள், 'வீரப்பா, என் பேச்சைக் கேட்டிருந்து நீ சரணடைந்திருந்தால் இந்த அனாதைச் சாவு உனக்கு ஏற்பட்டிருக்காது' என்று இரங்கற்பா பாடுகின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல. வீரபாண்டிய கட்டபொம்மன் வேஷத்தை அவனுக்குத் தரிக்க முயற்சிக்கின்றார். ஒரு கொள்ளைக்காரனை ஒரு சுதந்திரப் போராட்ட வீரனாகச் சித்தரிக்க முயல்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நாடு ஏற்றுக்கொள்ளுமா, நடுநிலையாளர்கள் ஏற்றுக்கொள்வார்களா, நேர்மையானவர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 190 கோடி ரூபாய் சந்தன மரம் எரிந்து சாம்பலாகியது.



அவர்களுடைய கையாலாகாத்தனத்தாலும், நிர்வாகத் திறமையின்மையின் காரணத்தாலும்— அன்றைய மதிப்பு 190 கோடி ரூபாய்—அதன் இன்றைய மதிப்பு 450 கோடி ரூபாய். எதற்குச் சொல்கிறேன் என்றால், சந்தன மரங்கள் தமிழ்நாட்டில் இல்லை. சந்தன மரக்கன்றுகள்தான் இருக்கின்றன. இருக்கின்ற ஸ்டாக்குகளைத்தான் ஒவ்வொரு வருடமாக நாங்கள் விற்பனை செய்துகொண்டிருக்கிறோம். அந்த மரங்கள் இன்றைக்கு இருந்திருந்தால்—450 கோடி ரூபாய் தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய வருவாய் இழப்பை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு அன்றைக்கு ஏற்படுத்தியது என்பதை இந்தச் சபையில். நான் பதிய வைக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா அவர்கள் கொள்ளையன் வீரப்பன் கும்பலைக் கூண்டோடு அழிப்பதற்குத் துணை நின்ற 104 வன அலுவலர்களைப் பாராட்டி, விருதும், ரொக்கப் பரிசுமாக ரூ.109.20 இலட்சம் வழங்கினார். மேலும் 56 வன அலுவலர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டது. 105 வனத் தோட்டக் காவலர்களுக்கு முறைப்படுத்தப்பட்ட தொகுப்பூதியம் வழங்கப்பட்டது. அம்மா அவர்களுக்கு வனத் துறையின் சார்பாக அவர் பொற்பாதங்களில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிகள் மற்றும் குளக் கரையில் கருவேல மரங்கள் நடவு செய்யும் சமூகக் காடுகள் திட்டம் 1981 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வந்தது. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியாளர்கள் இந்தத் திட்டத்திற்குத் தடை விதித்தார்கள். அந்தத் திட்டத்தின் வாயிலாக சுற்றுச்சூழலை மேம்படுத்தலாம் மண் அரிப்பைத் தடுக்கலாம், அந்தக் கிராமத்தில் இருக்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கலாம். இவ்வளவு அருமையான திட்டம். அம்மா ஆட்சிக்கு வந்தவுடன் ஆய்வு செய்து மீண்டும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டத்தின்மூலமாக, 2003–2004–ல் பத்து மாவட்டங்களில் 3,500 எக்டேர் பரப்பளவில் ரூ. 3.50 கோடி மதிப்பீட்டில், 2004–2005–ல் 5.65 கோடி மதிப்பீட்டில், 2005–2006–ல் ரூ. 5.63 கோடி மதிப்பீட்டில் இந்தத் திட்டம் நடக்க அம்மா அவர்கள் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம். தி.மு.க. ஆட்சியில் ஐந்தாண்டுகளில் ஒதுக்கிய நிதி ரூ. 26.81 கோடி. ஆனால் அம்மா அவர்கள் இந்த நான்கு ஆண்டுகளில் ஒதுக்கிய நிதி ரூ. 30.12 கோடி. இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கிற நிதி ரூ. 8.2 கோடி. தி.மு.க. ஆட்சியைவிட மலைவாழ் மக்கள் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் 12 கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், சிறு வன மகசூல். தி.மு.க. ஆட்சியில் அவற்றின் நேரடிப் பயன் மலைவாழ் மக்களுக்குப் போய்ச் சென்றடையவில்லை. அம்மா அவர்கள் மலைவாழ் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தையும், வருமானத்தையும் அதிகரிக்கும்பொருட்டு, சிறு வனப் பொருள்களான புளி, நெல்லி, கடுக்காய், தேன், மாங்காய் போன்ற சிறு வனப் பொருட்கள் பதினாறை இலவசமாக அந்த மலைவாழ் மக்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் துறை. சுற்றுச்சூழல் துறையை இதய தெய்வம் அம்மா அவர்கள் 1995 ஆம் ஆண்டு ஏற்படுத்தினார்கள். இதைப் பின்பற்றித்தான், கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகின்ற மேற்கு வங்காளம், கர்நாடகா, குஜராத், ஓரிசா போன்ற மாநிலங்கள் பிறகு, சுற்றுச்சூழலுக்கு என்று ஒரு தனித் துறையை அம்மா அவர்களைப் பார்த்துத்தான் ஆரம்பித்தார்கள்.

முற்பகல் 11–25

இந்தச் சுற்றுச்சூழல் துறை இன்றைக்குச் சிறப்பாகத் தமிழ்நாட்டில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. மாணவர்கள் மத்தியில் பள்ளிக்கூடங்களிலே பசுமைப் படை, சுற்றுச்சூழல் மன்றம், இவற்றை நிறுவி மக்களிடத்திலே சுற்றுச்சூழலைப் பற்றிய விழிப்புணர்ச்சியையும், மரங்கள் நடுவதையும் மற்றும் கலை நிகழ்ச்சிமூலமாக சுற்றுச்சூழலினுடைய முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதும்தான் சுற்றுச்சூழல் துறை. மேலும் தேசிய நதி நீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் சென்னை நகர நதி நீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் முக்கிய நீர் வழித்தடங்களான கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி ஓடை, காட்டன் கால்வாய், மாம்பலம் கால்வாய் ஆகியவற்றில்சேரும் 422 சாக்கடைகளின் கழிவு நீரைச் சுத்திகரிக்கும் திட்டத்திற்கு மத்திய



அரசின் திட்ட மதிப்பீடு ரூ.382.25 கோடி. ஆனால் மத்திய அரசு அனுமதித்த தொகை ரூ.254.42 கோடி. அம்மாவின் அரசு செலவு செய்தது ரூ.288.52 கோடி.

அதேபோல், காவிரி, வைகை, தாமிரபரணி ஆறுகள் பாயும் 7 முக்கிய நகரங்களான திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், கரூர், மயிலாடுதுறை, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நதி நீரைத் தூய்மைப்படுத்தும் திட்டத்திற்கு மத்திய அரசின் திட்ட மதிப்பீடு ரூ.440.49 கோடி. மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட நிதி ரூ.99.73 கோடி. அம்மாவின் அரசு செலவு செய்தது ரூ.238.21 கோடி. (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோல், காவிரி பாயும் 5 பழைய நகரங்களான திருச்சி, ஈரோடு, பவானி, பள்ளிப்பாளையம், குமாரபாளையம் ஆகிய இடங்களில் நதி நீரைத் தூய்மைப்படுத்தும் திட்டத்திற்கு மத்திய அரசின் திட்ட மதிப்பீடு ரூ.21 கோடி. மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட நிதி ரூ. 19 கோடி. அம்மா அவர்கள் செலவு செய்தது ரூ.19.46 கோடி. நான் இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், திண்டுக்கல்லில் நடந்த திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் மத்திய அமைச்சர் உயர்திரு டி.ஆர். பாலு அவர்கள், நாங்கள் நிறைய ரூபாயை இந்தத் தேசிய நதி நீர்ப் பாதுகாப்புத் திட்டத்திற்குக் கொடுத்திருக்கின்றோம். மாநில அரசு செலவு செய்யவில்லை என்று நான்கு ஆண்டு காலமாக, ஒரு உண்மைக்கு மாறான செய்தியைச் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். வீராவேசமாக அன்றைக்கு திண்டுக்கல் மாநாட்டிலே பேசி இருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த மொத்த ரூபாய் 373.31 கோடி. அம்மாவின் அரசு செலவு செய்திருப்பது ரூ.546.21 கோடி. (மேசையைத் தட்டும் ஒலி) அதிகமாகச் செலவு செய்தது ரூ.172.90 கோடி. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி உண்மை இருக்க, இப்படித் தவறான செய்திகளை, உண்மைக்குப் புறம்பான செய்திகளை கோயபல்ஸ் தத்துவத்தை— நான் 2003–2004 ஆம் ஆண்டு இதே அவையில், இதே டி.ஆர். பாலு இப்படிச் சொல்கிறார் என்று சொல்லி, கோயபல்ஸுக்கு நிகழ்ந்த கதிதான் உங்களுக்கும் நிகழும் என்று சொன்னேன். இப்படி * உண்மைக்கு மாறாகச் சொல்லி அம்மாவின் அரசு இவ்வளவு அதிகமான ரூபாயைச் செலவு செய்தும் மக்களிடத்தில் திரும்பத் திரும்ப இதைச் சொன்னால் உண்மை ஆகிவிடும் என்ற எண்ணத்தில் அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எந்த இடத்திலும் நாங்கள் இதைப் பற்றி விவாதிப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பதை உண்மைக்கு மாறுபட்டது என்று மாற்றிக்கொள்ளுங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் முடித்துவிடட்டும். (குறுக்கீடு) திரு. வைதியலிங்கம், அமைச்சர் முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லிகையின் மணம் மாறினாலும் மாறும். ஆனால் மல்லிகைப் புதரிலே குடி கொண்டிருக்கும் பாம்பின் குணம் மாறாது. அப்படி அவர்கள் பாம்பு குணம் படைத்தவர்கள். என்றைக்கும் மாற மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைதியலிங்கம், என்ன? உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்தவுடனே கூப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைதியலிங்கம். அந்த வைத்திலிங்கம் முடித்தவுடனே நீங்கள் பேசுங்கள். முடித்தவுடனே கூப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** இந்த மாசு கட்டுப்பாடு வாரியம் துவக்கப்பட்டது. இந்த மாசு கட்டுப்பாடு வாரியம் இன்றைக்குச் சிறப்பாக அம்மாவினுடைய வழிகாட்டுதலின்பேரில் இந்தியாவிற்கே வழிகாட்டியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



முற்பகல் 11-30

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நீர், நிலம், காற்று மாசுபடுவதைத் தடுப்பதற்கு மாசு கட்டுப்பாடு வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக, நீர் மாசுபடுவதைத் தடுக்க எதிர்மறைச் சவ்வூடு பரவுதல் என்ற தொழில்நுட்பத்தினைக் கடைப்பிடிக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் தொழிற்சாலைகள் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் 19 தனியார் சாய மற்றும் சலவைத் தொழிற்சாலைகள் கழிவிலிருந்து செய்முறைக்குத் தேவையான நீரை மீட்சி செய்வதற்காக எதிர்மறை சவ்வூடு பரவுதல் — Reverse Osmosis என்ற ஒரு புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன்முதலில் ஆறு தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இந்தத் தொழில்நுட்பம் புகுத்தப்பட்டு இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அதேபோல், 19 தனியார் Textile தொழிற்சாலைகளில் இந்தப் புதிய தொழில்நுட்பம் புகுத்தப்பட்டிருக்கிறது. இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்துகொண்டிருக்கின்றது. தமிழகத்தில் மொத்தம் 33 புது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைந்திருக்கின்றன. மேலும், 17 புது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க மாசு கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. இன்றைக்கு தடையில்லாச் சான்று—மாசு கட்டுப்பாடு வாரியம் மக்கள் கேட்புரைக் குழுவை நியமித்து, கேட்டு, அந்த Board-லே வைத்து N.O.C. அரசுக்கு, தமிழ்நாடு அரசுக்கு அனுப்பி, அதுதான் மத்திய அரசுக்கு அனுப்பும். ஆனால், இன்றைக்கு மத்திய அரசு தமிழ்நாட்டின், மாநில அரசினுடைய N.O.C. தேவையில்லை, நேரடியாகவே கொடுக்கலாம் என்ற ஒரு நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றது. மாநிலத்திற்கு வருகின்ற நல்ல திட்டங்களை ஆணையிட்டுத் தடுக்கின்றார்கள். இதே மாமன்றத்தில் 1974 ஆம் ஆண்டு மாநில சுயாட்சித் தீர்மானத்தை இதே ஏப்ரல் மாதம், 16 ஆம் தேதி முன்மொழிந்து பேசிய முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள், 'மாநில சுயாட்சி எங்கள் உயிர் மூச்சு. உரிமைக்குக் குரல் கொடுப்போம். உறவுக்குக் கைகொடுப்போம்' என்றெல்லாம் சொன்னார்கள். எங்கள் அம்மாவினுடைய கொள்கை, 'கட்டுண்டு வாழோம், பிரிவினை நாடோம், சம நிலையில் இணைவோம்'--இதுதான் எங்கள் அம்மாவின் கொள்கை. (மேசையைத் தட்டும் ஒலி)

மத்தியிலே ஆட்சியில் இருக்கும்பொழுது மாநில உரிமைக்கு ஏதாவது ஒரு பின்னடைவு என்றால் குரல் கொடுப்பார். 1998–ல் ஆட்சியில் பங்கிருக்கும்பொழுதே குரல் கொடுத்தவர். அதேபோல், என்றைக்கு மாநில உரிமைகள் பாதிக்கப்படுகின்றனவோ அன்றைக்குக் குரல் கொடுக்கக்கூடிய ஒப்பற்ற தலைவி இந்தியாவிலேயே (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள்தான். மாநில சுயாட்சித் தீர்மானத்தைக் கொண்டுவந்து வீராவேசமாகப் பேசியவர்கள் இன்றைக்கு மாநில அதிகாரத்திலேயே கை வைக்கின்றார்கள்.

1974 ஆம் ஆண்டு இதே அவையிலே முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள் பேசியிருக்கின்றார்கள். என்ன பேசியிருக்கின்றார்கள்? 'சிறையிலிருந்து நாடு விடுதலை பெற்றுவிட்டது. கதவு திறந்தது, பூட்டிய இரும்புக் கூட்டிலிருந்து கைதி புன்னகை மலர வெளியே வருகிறான். தந்தையைக் காணாமல் தவித்துக்கொண்டிருந்த தளிர் நடைச் செல்வன் இளங்கரம் தூக்கித் தாவி ஓடுகிறது, அவனைத் தழுவிக்கொள்ள. அவனும் அடக்க முடியாத மகிழ்ச்சி வெள்ளம் கரை புரள மகனைத் தூக்கி முத்தமிட கரங்களை நீட்டுகிறான்; கைகள் இயங்க முடியாமல் தவிக்கின்றன. சிறையிலிருந்துதான் விடுபட்டு விட்டேனே, இன்னும் என்ன தடை, தன்னை யார் தடுப்பது, சுற்றும் முற்றும் பார்க்கிறான். அவன் சிறையில் இல்லை. சுதந்திரப் பூமியில்தான் இருக்கிறான். பிறகு யார் தன் குழந்தைகளைக்கூட தழுவ முடியாமல் தடுத்தது? யாருமல்ல. அவன் சிறையிலிருக்கும்போது அவன் கைகள் இரண்டையும், காலையும் சேர்த்து ஒரு விலங்கு மாட்டியிருந்தார்கள். விடுதலை அடைந்த பூரிப்பில் விலங்குகளைக் கழற்றவேண்டும் என்ற நினைப்புக்கூட இல்லாமல் அவன் வெளியே வந்து விட்டான். அவன் சுதந்திர மண்ணில்தான் இருக்கிறான். கை, கால்கள் விலங்கு மட்டும் கழற்றப்படவில்லை. மனிதன் விடுதலையாகிவிட்டான். கை, கால்கள் மட்டும் கட்டுண்டு கிடக்கத் தேவையில்லை. இந்தியா விடுதலை பெற்றுவிட்டது. அதன் அவயவங்கள் போன்ற மாநிலங்கள் மட்டும் மத்திய அரசுக்குத் தேவையில்லாத அதிகாரக் குவியல்கள் என்னும் விலங்குகளால் கட்டுண்டு கிடப்பானேன்' என்று சொல்லியிருக்கிறார்.

இன்றைக்கு அதிகாரத்தில் மேலும் பல விலங்குகளைப் பூட்ட, அவரும், அவருடைய அமைச்சர்கள், மத்தியிலேயிருப்பவர்களும் செய்துகொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாநில சுயாட்சிக்கு உரக்கக் குரல் கொடுத்தவர்கள், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் மாநில சுயாட்சிக்கு எதிரானவர்கள் என்று இந்தச் சபையில் நான் பதிய வைக்க விரும்புகின்றேன். ஏனென்றால், அவர்கள்தான் இந்தியாவிற்கே வழிகாட்டி என்று



கூறியவர்கள். அதை இன்றைக்குக் குழி தோண்டிப் புதைக்கத் தயாராகிவிட்டார்கள் என்பதைக் கூறிக்கொள்ள நான் ஆசைப்படுகின்றேன். மாண்புமிகு.....(குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன ஞானசேகரன்? உட்காருங்கள். என்ன, சம்பந்தமே இல்லாமல் நீங்கள்? உட்காருங்கள். (குறுக்கீடு) சம்பந்தமேயில்லாமல் (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

முற்பகல் 11–3.5

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இரப்பர் கழகம், தி.மு.க. ஆட்சியில் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்தது. 2001–ல் அம்மா ஆட்சிக்கு வந்தவுடன்--1998–லிருந்து 2001 வரைக்கும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பள நிலுவைத் தொகையை பாக்கி வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். அகவிலைப் படியைக் கொடுக்காமல் சென்றுவிட்டார்கள். குறைந்தபட்சம் போர்வை, காலணி, மருந்துகள், குடை போன்றவற்றைக்கூட கொடுக்காமல் சென்றுவிட்டார்கள்-- அம்மா அவர்கள் ஆய்வு செய்து, நமது வனத் துறைக்கு, அந்த இரப்பர் கழகம், மாநில அரசுக்குக் குத்தகை 6 ஆயிரம் ரூபாய் ஒரு எக்டேருக்குக் கொடுத்துக்கொண்டிருந்தது. அம்மா அவர்கள் அதை 3 ஆயிரமாகக் குறைத்தார்கள். அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன் ரூ.12.90 கோடி இருந்தது. அதிலே 6.45 கோடி ரூபாயைப் பங்காகவும், ரூ.6.45 கோடியை மென் கடனாகவும் ஆக்கினார்கள். மேலும், கொடுக்க வேண்டிய அந்த நிலுவைத் தொகையையெல்லாம் கொடுத்து இன்றைக்கு அரசு இரப்பர் கழகம் இலாபத்தில் இயங்கிக்கொண்டு வருகிறது. அதுமட்டுமல்ல. 1–12–2004–ல் தனியார் தோட்டக் கழகத்திற்கு இணையாக சம்பள உயர்வை அறிவித்து ஆணையிட்டிருக்கின்றார்கள். நேற்றுகூட மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் இங்கே பேசினார்கள். அவர் மனசாட்சியைத் தொட்டுச் சொல்லட்டும். எத்தனையோ முறை தி.மு.க. ஆட்சியில் போராடினார்கள். போராடாமலேயே அள்ளிக் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. போராடாமலேயே அள்ளிக் கொடுத்தவர் எங்களுடைய அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல், வனத் தோட்டக் கழகம் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகின்றது.

[திரு. ஆர். வைத்திலிங்கம்] [2005 ஏப்ரல் 5

அதேபோல், தேயிலைத் தோட்டக் கழகம் இலாபத்தில் இயங்கி வருகின்றது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க இந்த வனத் துறையின் சார்பாக இப்போது அறிவிப்புகளை நான் வெளியிடுகின்றேன்:

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டில் 2005–2006 மற்றும் 2006–2007 ஆம் ஆண்டுகளில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் 115 கூட்டு வன நிர்வாக கிராமங்களில் காட்டாமணக்கு மாதிரித் தோட்டங்கள் அமைக்கப்படும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, எதிர்காலத்தில் சுனாமி மற்றும் புயல்களின் பாதிப்புகளிலிருந்து காத்துக்கொள்ள சதுப்பு நிலக் காடுகள், கடலோரத் தொடர் தடுப்புத் தோட்டங்கள் ரூ.10 கோடி மூலதனத்தில் அமைக்கப்படவுள்ளன. மேலே குறிப்பிட்ட திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, உலக வங்கியின் நிதி உதவி கோரி அனுப்பப்பட்டு, அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டில் தொலைதூரக் கிராமங்கள் மற்றும் சிறு கிராமங்களில் மின் வசதி அளிக்க தமிழ்நாடு மின்சார வாரியத்தின் grid விரிவாக்க வசதிகள் இல்லாததால் மின் விநியோகம் இல்லை. எனவே, உயிரினக் கழிவு மற்றும் மரங்களின் எண்ணெய் வித்துக்களின்மூலம் கிராமங்களில் எரிசக்திப் பாதுகாப்பு என்ற திட்டத்தின் பெயரில் மின் உற்பத்தி செய்யும் திட்டத்தினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஐந்து கிராமங்களில் ரூ.98.96 இலட்சம் மூலதனத்தில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த மைய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்திற்கு வனத் துறைமூலம் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, கிழக்குத் தொடர்ச்சி மலையைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் அங்குள்ள விவசாயிகளுக்கு நீர் ஆதாரப் பாதுகாப்பு ஏற்படுத்தவும், அங்கு வாழும் மலைவாழ் மக்களின் வாழ்க்கைச் சூழலுக்கு ஆதரவு அளிக்கவும் சிறு வனப் பொருட்கள் உற்பத்திப் பெருக்கம், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பணிகள், இலவச விதை விநியோகம், சூழல் விழிப்புணர்ச்சி, திட்டப் பணிகள் மற்றும் தீத்தடுப்புப் பாதுகாப்பு ஆகிய பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.1.05 கோடி செலவில் செயற்குறிப்பு மத்திய அரசுக்கு அனுப்பப்படவுள்ளது.



2005 ஏப்ரல் 5] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, 2005–2006 ஆம் ஆண்டில் வனத் துறையால் நடத்தப்படும் வனப் பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.4.82 கோடி செலவில் மேம்படுத்தப்படவுள்ளது. இதற்கான செயற்குறிப்பு தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, விளைநிலங்களுக்கு காட்டு விலங்குகளால், குறிப்பாக யானைகளின் தாக்குதலுக்குள்ளாகக்கூடிய பகுதிகளில் ஏற்படும் சேதத்தைத் தடுப்பதற்காக 200 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூபாய் ஒரு கோடி செலவில் 2005–2006 ஆம் ஆண்டில் சூரிய மின் வேலி அமைக்க அரசு முடிவெடுத்துள்ளது.

முற்பகல் 11–40

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, ஒருங்கிணைந்த வனப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் காட்டுத் தீயைத் தடுப்பதற்கு, தீத்தடுப்புக் கோடுகள் அமைத்தல், வனப் பாதுகாப்பை வலுவாக்குதல், நில அளவை, எல்லை வரையறை, பயிற்சி, தொழில்நுட்பம் மேம்படுத்துதல், மண் வளம் மற்றும் ஈரப் பாதுகாப்புப் பணிகள், கூட்டு வனக் குழுக்களுக்கு உதவி செய்தல், உள் கட்டமைப்பு மேம்பாடு போன்ற பணிகள் ரூ.4.85 கோடி செலவில் 2005–2006 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழக விவசாயிகளுக்கு அடக்க விலையில் தரமான விதைகளை அதிக அளவில் விநியோகிக்க உறுதி செய்யும் வகையில் உயர் ரக சவுக்கு விதைத் தோட்டங்கள் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தால் வளர்க்கப்பட்டு வருகிறது. 2005–2006–ல் 100 ஏக்கர் பரப்பளவு, இவ்வுயர் ரக விதைத் தோட்டங்களாக மாற்றப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, உயர் விளைச்சல் தரும் ஒட்டு நாற்றுகள், இயற்கை உர வேளாண்மை முறையில் அதிக முந்திரி விளைச்சல் தருவதாக அறியப்பட்டுள்ளது. இயற்கை உர வேளாண்மை முறை வாயிலாகப் பெறப்பட்டுள்ள முந்திரிக் கொட்டைகள், தேசிய மற்றும் பன்னாட்டுச் சந்தைகளில் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் இரு மடங்கு விலை பெற்றுத் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் ஒட்டு நாற்றுகளைப் பெருமளவில் தயாரித்து,

விவசாயிகளுக்கு வழங்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, மரங்களின் வாயிலாகப் பெறப்படும் எரிசக்திமூலம் மின்சாரம் தயாரிக்க ஏதுவாக, குறு சுழற்சி முறையில், வேகமாக வளர்ந்து, நான்கு ஆண்டுகளுக்குள் அறுவடை செய்யத்தக்க மர வகைகள் தமிழ்நாடு வனத் துறையால் கண்டறியப்பட்டுள்ளன. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் இலட்சக்கணக்கில் பெரும் எண்ணிக்கையிலான ஒட்டு நாற்றுகளையும் மற்றும் நாற்றுகளையும் உற்பத்தி செய்யும் கட்டமைப்பைக் கொண்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் இவை அடக்க விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

**சுற்றுச்சூழல் துறை**

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூ.5 கோடி மதிப்பீட்டில் சேலம் மாவட்டம் ஏற்காடு ஏரியில் சூழல் மேம்பாட்டுப் பணிகள் 2005–2006 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, தெரிவு செய்யப்பட்ட நகர்ப்புற ஏரிகளின் சூழல் மேம்பாட்டிற்காக ஏரிகள் மேம்பாட்டு ஆணைக் குழு ஒன்று ஏற்படுத்தப்படும். இதற்குத் தேவையான நிதியாதாரம் தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை வாயிலாக மைய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் மற்றும் பன்னாட்டு அமைப்புகளிடமிருந்து பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டின் கடற்கரை ஓரங்களில் உச்ச அலைக்கோடு நிர்ணயப் பணி மற்றும் ஒருங்கிணைந்த கடற்கரை மேலாண்மைத் திட்டம் தயாரிக்கும் பணி ரூ.5 கோடி உலக வங்கி நிதி உதவியுடன் 2005–2006 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, டைகர் ஹில் தேயிலைத் தொழிற்சாலைக்கு I.S.O. 9001:2000 உலகத் தரச் சான்று ஏற்கெனவே பெறப்பட்டது. தர மேம்பாட்டிற்குக் கிடைக்கப்பெற்ற அங்கீகாரம் காரணமாக தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தேயிலைக்கு தேசிய மற்றும் பன்னாட்டுச் சந்தையில் அதிக விலை கிடைக்கப்பெற்றது. நீலகிரி மாவட்டம் குவீன் சோலை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைமலையில் உள்ள ரயான் ஆகிய இரு தொழிற்சாலைகளுக்கு I.S.O. 9001:2000 உலகத் தரச் சான்று 2005–2006 ஆம் ஆண்டு பெறப்படும்.



மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, 2005–2006 ஆம் ஆண்டில் பணியாளர் மற்றும் தொழிலாளர் வசதிகளுக்காக ரூ.1.62 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, உயர் விளைச்சல் தரும் வீரிய ஒட்டு ரகம்மூலம் குறைந்த விளைச்சல் தரும் ஏ.டி.கே. ஒட்டு ரகத்தை அகற்ற வேண்டி 2005–2006 ஆம் ஆண்டில் கூடலூர் பகுதியில் 40 எக்டேர் பரப்பில் உயர் விளைச்சல் தரும் வீரிய ரகத் தேயிலை மறு நடவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆய்வகத்தில் அபாயகரமான கழிவுகளின் மாதிரி சேகரித்தல் மற்றும் சோதனை வசதிகள், ரூபாய் 1 கோடி மதிப்பில் "மேம்பட்ட கருவிகள் மற்றும் உபகரணங்கள்" 2005–2006 ஆம் ஆண்டில் வாங்கப்பட்டு, மேம்படுத்தப்படும்.

முற்பகல் 11–45

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, சென்னையில் போக்குவரத்து சந்திப்புகளில் சுற்றுச்சூழல் காற்றுத் தரக் கண்காணிப்பு அமைப்பினை மேம்படுத்த ரூபாய் 30 இலட்சம் மதிப்பில் கார்பன் மோனாக்ஸைடு அளவீடு மானிகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் 2005–2006 ஆம் ஆண்டில் வாங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு நகராட்சி அல்லது ஒரு சிறப்புச் சிற்றூராட்சியினை திடக் கழிவுகள் மேலாண்மையில் முன்மாதிரியாக உருவாக்க, மாவட்டந்தோறும் ஒரு நகராட்சிக்கு ரூபாய் 2 இலட்சமும் அல்லது ஒரு சிறப்புச் சிற்றூராட்சிக்கு ரூபாய் 1 இலட்சமும் என்ற முறையில் மாவட்ட ஆட்சியர்மூலம் ஆதார நிதி 2005–2006 ஆம் ஆண்டில் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, வேலூர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம் ஆகியவற்றிற்காக காட்பாடியில் ஒரு புதிய கட்டடம் ரூபாய் 1.30 கோடி மதிப்பில் 2005–2006 ஆம் ஆண்டில் கட்டப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சுற்றுச்சூழல் பயிற்சி நிலையத்திற்குத் தன்னாட்சி வழங்கப்பட்டு, மேம்படுத்தப்படும். வாரியப் பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் திறனையும், தகுதியையும் மேம்படுத்த சென்னையிலுள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து செயல் திட்டம் ஒன்று வரையறுக்கப்பட்டு, 2005–2006 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் கணினிமயமாக்கும் திட்டம், இயக்கத்திலுள்ள அனைத்துப் பிரிவுகளுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும். வாரியத்தின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக களப்பணி அலுவலகங்களுடன் இணையதள அமைப்பு ஏற்படுத்தப்படும். வாரியத்தின் இணையதளத்தினை மேம்படுத்த 2005–2006 ஆம் ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காடு கமழ வந்த கற்பூரப் பூங்கா போல, நாடு மகிழ ஆளும் நான்காம் தமிழ் கண்டவரே! காக்கைக்கும் பருக்கை போடா கல் நெஞ்சுக்காரக் கும்பல் வாழும் நாட்டில், யானைக்கும் தீனி போட்டு, சீராக சிகிச்சை தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) பாராளும் தலைவர்கள் பாராட்டிப் போற்றும்வண்ணம் தமிழகம் ஆளும் எங்கள் தாயே! எங்கள் குடும்ப விளக்கே! தங்கள் பொற்பாதம் வணங்கி என் உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களைப் படித்துப் பார்த்தேன். உங்களுடைய கோரிக்கைகளை இதய தெய்வம் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறுகின்றேன். உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு நா. வீராசாமி.



***திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது குறுக்கிடக்கூடாது என்று நீங்கள் சொன்ன காரணத்தாலே குறுக்கிட விரும்பவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மாநில சுயாட்சியைப் பற்றி எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் பேசியதைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்த மாநில சுயாட்சித் தீர்மானத்தைத் தான் இன்று இந்தியா முழுவதும் உள்ள எல்லா மாநிலங்களும் ஏற்றுக்கொண்டு, மத்திய அரசே மாநிலங்களுக்கு சுயாட்சி கொடுப்பதற்கு முன்வந்திருக்கிறது என்ற செய்தியும் நேற்று பத்திரிகையிலே வந்திருக்கிறது.

இரண்டாவது, டி.ஆர். பாலு அவர்கள் திண்டுக்கல் மாநாட்டில் பேசியதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அவர் மாநாட்டில் குறிப்பிட்டது பற்றி இங்கே பேசலாமா, கூடாதா என்பது வேறு. ஆனால் அமைச்சருக்கு அந்த உரிமை இருக்கிறது. அவர் என்ன குறிப்பிட்டார் என்றால், 2001 ஆம் ஆண்டு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக சென்னை நகரத்தைச் சுற்றியிருக்கக்கூடிய ஆறுகளை எல்லாம் சுத்தப்படுத்துவதற்காக 490 கோடி ரூபாய் மானியம் வழங்கினோம், தமிழகம் முழுவதும் அப்படிப்பட்ட ஆறுகளுக்கு 1,100 கோடி ரூபாய் கடனாக வழங்கினோம், அதை இந்த அரசு முறையாகப் பயன்படுத்தியிருந்தால், மத்திய அரசு இன்னமும் நிதி கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது என்றும், அதைப்போலவே **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அமைச்சர் குறிப்பிட்டதை மட்டும் குறிப்பிடுங்கள்.

முற்பகல் 11–50

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில சுயாட்சியைப் பற்றி ஒன்றே ஒன்று மட்டும். மாநில சுயாட்சிக்கு வித்திட்டவர்கள், இந்தியா பூராவும் பரப்பியவர்கள் என்று சொன்னார்கள். இப்படி வாயளவில் சொல்லிக்கொண்டு, டெல்லியிலே ஆட்சி பீடத்தில் அமர்ந்துகொண்டு, மாநிலத்திற்கு அதிக நிதி ஆதாரம் பெற வேண்டும் என்று அன்று கூறியவர்கள், மாநிலத்திற்கு அதிக நிதி ஆதாரமான Service Tax— சேவை வரி என்பது அரசியல் சட்டத்திலே Residuary list -லே இருந்தது. அதைத் தற்போது தி.மு.க. ஆட்சி செய்து வருகிற மத்திய அரசு, Union List-க்குக் கொண்டுபோய், 268–A (i)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்று ஒரு புதிய பிரிவைக் கொண்டு வந்து, மாநிலத்தினுடைய பண அதிகார வரம்பை எல்லாம் பிடுங்கி டெல்லிக்குத் தந்துவிட்ட உங்கள் கொள்கையா மாநில சுயாட்சிக் கொள்கை? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பிரச்சினை குறித்து எங்களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. நீங்கள் அதற்குக் குரல் கொடுத்தால், நாங்களும் சேர்ந்து குரல் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம். ஆனால் நான் தெரிந்துகொள்ள விரும்புவது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களேகூட தேர்தல் அறிக்கையிலேயும் குறிப்பிட்டார்கள், ஆளுநர் அறிக்கையிலேயும் குறிப்பிட்டார்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்வது **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினையை வேறு இடத்திற்குத் திசை திருப்பாதீர்கள். அதாவது, திரு. டி.ஆர். பாலு அவர்கள் சுற்றுச்சூழல் துறைக்கு அவர்கள் ஒதுக்கியதாகச் சொன்ன பணத்தைவிட அதிகமாக மாநில அரசு செலவு செய்திருக்கிறது என்ற கருத்தைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதிலே உங்களுக்கு ஏதாவது மாறுபட்ட கருத்து இருக்குமானால் அதைச் சொல்லுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான், உட்காருங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, இல்லை, இன்னும் ஒன்றே ஒன்று.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுத்த நிதியைச் செலவு செய்யவில்லை என்று சொன்னார்கள். அதைவிட 172 கோடி ரூபாய் அதிகமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செலவு செய்திருக்கிறது என்பதுதான்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



இவரே இதை எத்தனை வருஷமாக, 3 வருடங்களாகத் திரும்பத் திரும்ப சென்னை வரும்போதெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்? (குறுக்கீடுகள்) ஏன், அதற்கு முன்னாலே அமைச்சராக இருந்தாரா, இல்லையா? (குறுக்கீடு) அதற்கு முன்னாலேயே அமைச்சராக இருந்தாரே? (குறுக்கீடு) அதற்கு முன்னாலே இருந்தது தெரியாதா? வனத் துறை அமைச்சராக இருந்தாரே முன்னாலே? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள். இன்னும் ஒரு நிமிடத்திலே முடியுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்ற எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல விரும்பவில்லை. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது இப்போது பிரச்சினை இல்லை. தயவுசெய்து ** நீங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்து என்பது வேறு. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** இது வேறு பிரச்சினை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்தபோது மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் இங்கே அவரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டு ஒரு பிரச்சினையை எழுப்பினார். ஒரு தவறான தகவலை இந்த அவையில் தெரிவித்தார். அதற்கான விளக்கத்தை இங்கே நான் அளிக்க விரும்புகிறேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் தேவையில்லாத ஒரு வினாவை இங்கே எழுப்பியுள்ளார். முந்தைய தி.மு.க. அரசின் ஆட்சியில் பல்வேறு வாரியங்கள் அறிவித்ததோடு சரி, அதற்கான போதிய நிதி ஆதாரங்கள் உருவாக்கப்படவில்லை என்பதே உண்மை. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்குப் போதுமான அளவு நிதி ஆதாரங்கள் ஏற்படுத்தப்படவில்லை. முந்தைய ஆட்சியில் தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் வாரியம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு, மோட்டார் வாகன வரியில் ஒரு சதவீதம் என்று பங்கு நிர்ணயிக்கப்பட்டு, இந்த வாரியத்திடம்தான் ஒப்படைக்கப்பட்டது. இந்தத் தொகை தமிழ்நாடு உடலுழைப்புத்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு உரியது அல்ல. நிர்வாகச் சீரமைப்புப் பணியை இந்த அரசு மேற்கொண்டு இந்த வாரியங்கள் முறையாகச் செயல்பட அனைத்து வாரியங்களையும் ஒருங்கிணைத்து, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியத்துடன் 2004 ஆம் ஆண்டில் இணைக்கப்பட்டுள்ளன. தற்போதுதான் இந்த வாரியத்திற்கு மோட்டார் வாகன வரியில் ஒரு சதவீதப் பங்கு கிடைக்கின்றது. இந்த வாரியத்திடம் 31–3–2005 அன்று சுமார் 22 கோடி ரூபாய் அளவிற்கு வைப்பீடுகளில் நிதி உள்ளது. ஆண்டொன்றுக்கு இந்த வாரியத்திற்கு சுமார் 7.5 கோடி ரூபாய்தான் வருமானம் உள்ளது. இதில் மோட்டார் வாகன வரியின் பங்கு 5.5 கோடி ரூபாய் ஆகும். எனவே, அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் ஏற்படுத்த வேண்டுமென்றால், மேலும் சில நிதி ஆதாரங்களைத் திரட்ட வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு, இந்த அரசு, அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது குறித்து, தீவிர பரிசீலனை செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடுகள்) திரு. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. வைத்திலிங்கம் அவர்கள் இங்கே பேசுகின்றபோது **

*முற்பகல் 11–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதைப் பற்றிக் குறிப்பிட்டது எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதைப் பற்றி அமைச்சர் சொல்லவேயில்லை. விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடுகள்) பொன்முடி, என்ன, சொல்லுங்கள்?

**டாக்டர் க. பொன்முடி:** உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கான வாரியம் 5–11–1999–லே உருவாக்கப்பட்டு, அதிலே 3 கோடியே 24 இலட்சம் ரூபாய் நிதியும் சேர்த்து வைக்கப்பட்டது. இது ஆதாரபூர்வமான செய்தி. தவறாக இருந்தால் நான் ஏற்றுக்கொள்கிறேன். அப்பொழுது அது உருவாக்கப்பட்டது. அதற்கென்ன? முதலமைச்சர் இதைத் தவறு என்று சொன்னால், அதற்காக என்ன...

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியம் ஏற்படுத்தப்பட்டதைப் பற்றி நான் இங்கே குறிப்பிடவில்லை. வாரியம் ஏற்படுத்தப்பட்டது உண்மைதான். ஆனால், இந்த நிதி ஒதுக்கப்பட்டது ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்ஸி டிரைவர்கள் சங்கத்திற்கு. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்டீர்கள். அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடுகள்)

## (அ) கோரிக்கை எண் 14—சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 14–சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன். (குறுக்கீடுகள்)

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. (குறுக்கீடுகள்) இல்லை, அவர்கள் கேட்டார்கள், பதில் சொல்லிவிட்டார்கள். விளக்கம் சொல்லிவிட்டார்கள், முடிந்து விட்டது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை. திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை. திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என் நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எ.எஸ். மஹேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ். தாமோதரன்.

**திரு. எஸ். தாமோதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். தாமோதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. (குறுக்கீடுகள்) கேட்டதற்குப் பதில் சொல்லிவிட்டார்கள்.

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.119,98,16,000/– மற்றும்

மூலதனக் கணக்கில் ரூ. 108,45,58,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (ஆ) கோரிக்கை எண் 31—தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 31–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி, அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை. திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை. திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எ.எஸ். மஹேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். தாமோதரன்.

**திரு எஸ். தாமோதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். தாமோதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 190,09,99,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.4,53,42,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத



தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

நண்பகல் 12-00

## (இ) கோரிக்கை எண் 10—வணிக வரித் துறை—வணிக வரிகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 10— வணிக வரித் துறை—வணிக வரிகள். மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2710, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஏழைகள் அதிக அளவில் பயன்படுத்தும் களிமண்ணால் செய்யப்பட்ட ஓடு, செங்கல்கள் ஆகியவற்றிற்கு வரி விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3424, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் விற்பனை வரியை நெறிப்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4312, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு முழு வரி விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4559, டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் வணிக வரி அலுவலகங்களுக்குப் புதிய சொந்தக் கட்டடங்கள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4941, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5336, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அத்தியாவசியப் பண்டங்கள்மீது வரி விதிப்பதால் நடுத்தர ஏழை மக்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5774, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6231, திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

185278
சென்னை-600 009

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6572, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வணிக வரி சுங்கச் சாவடிகளில் நடைபெறும் முறைகேடுகளைக் களைய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7173, திரு. கி. பாரிமோகன்.

***திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7446, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் உள்ள வணிக வரித் துறை அலுவலகங்களை நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6676, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வணிக வரி பாக்கியை செலுத்தாதவர்கள்மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3299, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் VAT வரிக் கொள்கையை அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5486, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5607, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதியிலுள்ள விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவைகளுக்கு முழு வரி விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6389, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6738, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வணிக வரி சம்பந்தப்பட்ட வழக்குகளைக் கூடிய விரைவில் விசாரித்து நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கி, வணிக வரி செலுத்துவதற்கு உதவ நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3967, திரு. டி. மணி.



**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7020, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வணிக வரிகளால் சிறு வணிகர்களுக்கு ஏற்படும் பதற்றத்தைத் தவிர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6363, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலுவையிலுள்ள அனைத்து வணிக வரித் தொகைகளையும் முழுமையாக வசூலிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6791, திரு. கே.வி. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4279, திரு. எஸ். தாமோதரன்.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசியில் வணிக வரி அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2990, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வியாபாரிகள் தாமாகவே முன்வந்து வரி செலுத்துகின்ற வகையில் வணிக வரித் துறையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3144, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், தாரமங்கலத்திலுள்ள தங்க, வெள்ளி நகைக் கடைகளில் தினமும் கோடிக்கணக்கில் வியாபாரம் செய்து வணிக வரி கட்டாமல் ஏய்ப்போரைக் கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4991, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புறங்களில் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் நடத்தும் கேபிள் ஒளிபரப்புகளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4608, திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அந்தியூர் தொகுதி, அந்தியூரில் வணிக வரித் துறை அலுவலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6906, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

***திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளை ஊக்குவிக்கும்பொருட்டு, விவசாயக் கருவிகள், உரம் போன்றவற்றின்மீதான விற்பனை வரியை ரத்துச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7254, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பனியன் விற்பனையின்போது 'C' Form பெற 10% விற்பனை வரி வசூல் செய்தபின் அரசு பனியன் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் 9% வரி செலுத்தியவர்களுக்கு மேற்கு வங்க அரசுபோல் திரும்பக் கொடுக்க அரசாணை பிறப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7229, திரு. ஆ. ராஜகோபால்.

***திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசியில் உள்ள வணிக வரித் துறை அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4453, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெட்ரோல் பங்குகளில் விற்கப்படும் "Distilled Water"–களுக்கு விற்பனை வரியை ரத்துச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வணிக வரித் துறை–வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6054, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வணிக வரித் துறையில் துணை வணிக வரி அலுவலர்கள் நிலையிலிருந்து அனைத்து அலுவலகங்களுக்கும் ஈப்பு வசதி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6192, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி நகரில் வணிக வரித் துறை அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2071, திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டையில் உள்ள வணிக வரித் துறை அலுவலகத்தில் விசாரணைப் பிரிவு துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3274, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதிப்புக் கூட்டு வரியில் விவசாயப் பொருள்கள், விதை, உரம், பூச்சி மருந்து ஆகியவைகளுக்கும் விதிக்கப்படுகிறது. விவசாயம் ஏற்கெனவே பின்னடைந்துள்ள நிலையில் இந்த வரி விதிப்பால் விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாவார்கள் என்பதால், அவ்வரியினின்று விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 477 முதல் 494 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையின்மீது விவாதம். திரு. டி.பி.எம். மைதீன்கான்.

***திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வல்லூறுகளிடமிருந்து வண்ணப் புறாவைக் காப்பாற்ற தன் சதையை அறுத்துத் தந்து, அதுவும் போதாது என்றபோது, புறாவுக்காக தன்னையே தந்த சிபிச் சக்கரவர்த்தி மண்ணில் பிறந்து, வட்டமிடும் ஓநாய்களிடமிருந்தும், வளைக்க வரும் மலைப் பாம்புகளிடமிருந்தும், ஜனநாயக வெண்புறாவைக் காக்க, தன்னை மட்டுமல்லாமல், தன்னுயிர்த் தனையனையும் தத்தம் செய்ய சித்தமாக, ஆதிக்கச் சக்திகளிடமிருந்து தனது 82–வது அகவையிலும் தளராமல் யுத்தம் புரிந்து வரும் என் ஆருயிர்த் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஆய்ந்து அறிந்திட, கொள்கைச் சான்றோராக எங்களை வழிநடத்தி வரும் இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், இராஜராஜ சோழனின் மகன், இராஜேந்திர சோழன் முந்நீர்ப்பழந் தீவுகள் பன்னீராயிரம் வென்று, கங்கைகொண்டு கடாரம் வென்றதைப்போல ஜனநாயக சமர்க்களத்தில் ஓராயிரம் சாதனைகளைப் புரிந்து சரித்திரம் படைத்து வரும் எங்கள் குலபதி, தமிழகத்தின் தளபதி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையைத் துவங்குகிறேன்.

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்றொப்ப 30 ஆண்டுகளுக்கு முன்னால், நான் வசித்து வருகிற நெல்லைச் சீமையிலே, நெல்லை வியாபாரிகள் சங்கத்தினுடைய வெள்ளி விழா நிகழ்ச்சியில் முன்னாள் முதலமைச்சர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவருமான கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு பெருமைப்படுத்தினார்கள். அந்த நேரத்திலே சூழ்நிலையின் காரணமாக வணிகர்களெல்லாம் மிக நீண்ட காலமாக வைத்து வந்த சில கோரிக்கைகளை அங்கே வைத்தார்கள். இரண்டு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. ஒன்று, எல்லாப் பொருட்களுக்கும் ஒரு முனை வரி கொண்டு வரப்பட வேண்டும். இன்னொன்று, வணிகர்களுக்காக—பெருவாரியாக வரியை அரசிற்குச் செலுத்துகின்ற இந்த வணிகர்கள்—ஒரு வணிகர் நல வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை மிக நீண்ட காலமாக வைத்து வந்தார்கள். 1975 ஆம் ஆண்டு, அந்தக் காலத்தில், அந்த மேடையிலேயே தலைவர் கலைஞர் அவர்கள் அந்த இரண்டு கோரிக்கைகளையும் ஏற்றது மட்டுமல்லாமல்,

நடைமுறைப்படுத்துவேன் என்ற உத்தரவாதத்தைத் தந்தார்கள். ஆனால் காலத்தின் சாபக்கேடாக, அன்றைக்கிருந்த அந்த ஆட்சி கலைக்கப்பட்டுவிட்ட காரணத்தால், மீண்டும் சற்றொப்ப 14 ஆண்டு காலம் கழித்து, 1989 ஆம் ஆண்டில், ஆட்சிப் பொறுப்புக் கட்டிலிலே ஏறிய தலைவர் கலைஞர் அவர்கள், 1975 ஆம் ஆண்டு நெல்லைச் சீமையிலே நடைபெற்ற அந்த விழாவிலே கொடுத்த அந்த வாக்குறுதிகளை, வணிகர் நல வாரியம் அமைத்தல், பொருட்களுக்கு ஒரு முனை வரி என்கிற அந்தப் பிரச்சினைகளைக் கையிலே எடுத்துக்கொண்டு, 1989 ஆம் ஆண்டிலே, உடனடியாக, வணிகர்கள் கேட்டபடி, பல பொருட்களுக்கு ஒரு முனை வரியையும், அவர்கள் கேட்டபடி, முதலமைச்சரைத் தலைவராகவும், வணிக வரித் துறை அமைச்சரைத் துணைத் தலைவராகவும் கொண்ட, அதற்கென்று தனி ஒரு அதிகாரியையும், ஆறு அரசுசாரா உறுப்பினர்களையும் கொண்டதாக அந்த வணிகர் நல வாரியம் அமைக்கப்பட்டது. அதிலே முக்கியமானது என்னவென்றால், அப்படி அமைக்கப்பட்ட அந்த வாரியத்தின் ஆறு உறுப்பினர்களிலே நானும் ஒருவன் என்பதை இந்த நேரத்திலே நினைவுகூர்வதோடு மட்டுமல்லாமல், மீண்டும் ஒரு முறை தலைவர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப் பின்னால் இப்போது இருக்கிற ஆட்சி பொறுப்புக்கு வந்தது. அவர்கள் பல பொருட்களுக்கு ஒரு முனை வரி—திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட ஒரு முனை வரியை, பல முனை வரியாக்கினார்கள் என்பதுதான் உண்மை. அதற்குப் பின்னால், மீண்டும் 1996 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னால், தலைவர் கலைஞர் அவர்கள் சற்றொப்ப எல்லாப் பொருட்களுக்கும்—புளி, மிளகாய் வத்தல் போன்ற உணவுப் பொருட்கள் மற்றும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள், ஏன் சுருக்கமாகச் சொல்லப் போனால், காசினிக் கீரை உட்பட—முழுமையான வரி விலக்கு அளிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், எல்லாப் பொருட்களுக்கும் ஒரு முனை வரியை அறிவித்தார். அந்த வாரியத்திலே நாங்கள் எல்லாம் பணியாற்றுகின்ற நேரத்திலே இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கிய காலம் போக, 1996 ஆம் ஆண்டிலே ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னால்—இன்றைக்கு எதையெடுத்தாலும் அரசியல் என்கின்ற சூழ்நிலை இருக்கின்ற இந்த நேரத்தில்— அன்றைக்கு அரசியலைப் பற்றிக் கவலைப்படாமல், வணிகர் சங்கங்களுடைய கருத்தைக் கேட்டு, அவர்களிடம் பட்டியலைப் பெற்று, அவர் எந்தக் கட்சி என்பதுகூட தெரியாமல்,



அன்றைக்கு வணிகர் சங்கங்கள் கொடுத்த அந்த உறுப்பினர்களைக் கொண்ட, 16 பேர்கள் கொண்ட அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டது என்பதுதான் உண்மை. அன்றைக்கு வணிகர் சங்கங்களெல்லாம் அதைப் பெருமையோடு ஏற்றுக்கொண்டன. ஆனால் இன்றைக்கு அந்த வணிகர் நல வாரியம் எப்படிச் செயல்படுகிறது என்பதை இங்கே அமைச்சர் அவர்கள் பதிலுரையில் சொல்வார்கள். அப்படிச் சொன்னாலும்கூட, எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன்.

இன்றைக்கு இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்திலேகூட நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். 2003 ஆம் ஆண்டு ஒரு திருத்தம் செய்யப்பட்டு, 16 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் கேட்பதெல்லாம், இந்த 16 உறுப்பினர்களைப் போட்டது யாருக்காவது தெரியுமா? நான் தெரிந்துகொண்ட அளவில், இந்த மாநிலத்திலே பூராவும் வணிகர் சங்கங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டுப் பார்த்தேன். அப்படி ஒன்று இருக்கிறதா, செயல்படுகிறதா என்று வணிகர்கள் கேட்கிறார்கள். நான் கேட்பதெல்லாம், அந்த 16 பேர் என்று கூட்டியது மட்டுமல்லாமல், எனக்குக் கிடைத்த தகவலின்படி, அவர்கள் நியமிக்கப்பட்டு— கிட்டத்தட்ட இன்னும் 6 மாதங்களிலே, அவர்களுடைய பொறுப்பு, பதவிக் காலம் முடிகிறது— இதுவரை ஒரு முறைகூட அந்தக் கூட்டம் கூட்டப்படவில்லை என்பதுதான் உண்மை என்பதை குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன். அப்படியானால், இந்த வணிகர் நல வாரியத்தை எப்படிச் செயல்படுத்துகிறீர்கள்? ஓர் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கலைஞர் இந்த வணிகர் நல வாரியத்தைக் கொண்டு வந்தார் என்ற காரணத்திற்காகவே, ஏற்கெனவே மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயரால் இலவசத் திருமணத் திட்டம்; உழவர் சந்தை போன்ற பல நல்ல திட்டங்களை கலைஞர் ஆட்சியில் அவர்கள் கொண்டு வந்த காரணத்தால் எப்படிக் கிடப்பில் போட்டீர்களோ, அதேபோல் இதையும் நீங்கள் கிடப்பில் போடுவதற்கு ஒரு முன்னுதாரணமாக எடுத்திருக்கிறீர்கள் என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

பிற்பகல் 12-10

இன்றைக்கு வணிகர்கள் எப்படி எல்லாம் பாதிக்கப்படுகிறார்கள் என்பது எல்லாம் ஒருபுறம் இருந்தாலும்கூட, அன்றைக்கு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வணிகர்களுக்கு பதிவுச் சான்றிதழ், R.C. எடுப்பதற்கு 200 ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. நீங்கள் ஆட்சிக்கு

வந்த பிறகு அதை 500 ஆக உயர்த்தினீர்கள். பாவம், அந்த வணிகர்கள் என்ன குற்றம் செய்தார்கள்? அவர்கள் வரியை வசூல் செய்ததோடு எந்தக் குற்றமும் செய்யவில்லை. இன்னொன்றும் சொல்கிறேன். அந்தக் கட்டணத்தைக்கூட ஏப்ரல் 30 ஆம் தேதி வரை கட்டலாம்; அதற்குப் பின்னால் மே மாதம் வரைப் போனால், அபராதத்தோடு கட்டலாம். என்று சலுகை அளிக்கப்பட்டிருந்தது. அதிலும்கூட நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்றால், மார்ச் 31–க்குள் கட்டி முடிக்கப்பட வேண்டுமென்று அந்த ஒரு மாதத்தைக் குறைத்திருக்கிறீர்கள். அதனால் அவர்கள் எப்படிப் பாதித்திருக்கிறார்கள் என்பதை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அன்றைக்கு வணிக வரி அதிகாரிகள், சோதனை என்ற பெயரால் எந்த நேரமும், எந்தக் காரணமும் இல்லாமல் வணிகக் கடைகளுக்குச் சென்று சோதனை செய்யலாம் என்ற நிலைமையில், வணிகர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களை யோசித்துப் பார்த்து, அந்தப் பிரச்சினைகளை அவர்களோடு கலந்து பேசி, அந்த நேரத்திலே 5 விதமான நிபந்தனைகளுக்கு, விதிகளுக்கு உட்பட்டுத்தான் சோதனையிட வேண்டுமென்று ஆணை பிறப்பித்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு. அதுமட்டுமல்ல. வணிகர்களுக்கு சுய வரி விதிப்பு என்ற முறையைக் கொண்டு வந்ததும் திராவிட முன்னேற்றக் கழக அரசு. தி.மு.க. ஆட்சியில் வணிகர்கள் ரூ. 20 இலட்சம் வரை தமக்குத் தாமே சுய வரி விதிப்பு முறையிலும், ரூ.20 இலட்சத்திற்கு மேல் ரூ.40 இலட்சம் வரை பட்டயக் கணக்கர் சான்றிதழைக் கொடுத்து கணக்குகளைக் காண்பித்துக் கொள்ளலாம் என்கிற வகையிலும் ஆணை அன்றைக்குப் பிறப்பிக்கப்பட்டது. இதனால், வணிகர்கள் தவறு செய்வதிலிருந்து தம்மை விலக்கிக் கொண்டு, முறையான கணக்குகளை வைத்ததுமட்டுமல்லாமல், அரசுக்கு முறையான வருவாயும் வந்தது. ஆனால், இந்த ஆட்சியில் ரூ.10 இலட்சத்திற்கு மேலேயிருந்தால் ஒரு சதவிகிதம் மறு வரியாகப் போட்டிருக்கிறீர்கள். அதிலே பல கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு நிதிநிலை அறிக்கையைப் படிக்கிறீர்கள். வணிகர்கள் பிரச்சினை, மற்ற பிரச்சினைகள் எல்லாம் வருகின்றன. ஒரு முன்னுதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்து, அந்தத் துறையையும் தன் பொறுப்பில் வைத்துக்கொண்டார். என்ன காரணம் என்றால், இங்கே சொன்னதுபோல், சற்றேறத்தாழ 68 சதவிகிதம்—இன்றைக்கு தமிழகத்தினுடைய மொத்த வரி வருவாயில் 68 சதவிகிதம் இந்தத் துறையிலே வருகிறது. அந்தத் துறையிலே வருகிறவர்களுக்கு,



அவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்களே அந்தத் துறையை ஏற்றிருந்தார்கள். நான் சொல்வது எல்லாம், 1999–2000, 2000–2001, அந்த இரண்டு ஆண்டுகளில் நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்வதற்கு முன்பாக--எந்த வணிகர்களை சமூக விரோதிகள்போலவும், வணிகர் என்றாலே தவறு செய்பவர்கள்போலவும் வர்ணிக்கப்பட்ட காலம் போக, அவர்களைச் சமமாக வைத்து, அத்தனை பிரதிநிதிகளையும் அழைத்து வைத்து, கோட்டையிலே வைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களுடைய கருத்துகளைக் கேட்டு, இதை எப்படிச் செய்தால் நலமாக இருக்கும்; உங்களுடைய பொறுப்பு என்ன; நீங்கள் அதற்கு என்ன செய்ய முடியுமென்றெல்லாம் கேட்டு, அதற்குப் பின்னால்தான் நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்பட்டது என்பதுதான் உண்மை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தற்போது இந்த அரசும் வணிகர்களையும், உற்பத்தியாளர்களையும், நுகர்வோர்களையும் அழைத்து, அவர்களுடைய ஆலோசனைகளையும் அவ்வப்போது பெற்றுத்தான் அதற்கேற்ப நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நான் ஒரு பிரச்சினையைச் சொல்லும்போது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் செய்த நன்மைகள், அதில் தொடர்ந்தது என்றால், ஒருவேளை நீங்கள் பேசியிருந்தால் அந்தத் தொடர்ச்சியைச் செய்ததற்கு நன்றி. ஆனால் அப்படிச் செய்யப்படவில்லை என்றுதான் வணிகர்கள் பக்கத்தில் இருந்து எனக்குப் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. நான் ஒரு வணிகர் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். நான் அரசியல்வாதியாக திராவிட முன்னேற்றக் கழகத்தில் பல ஆண்டுகளாக இருந்தாலும்கூட, நானும் ஒரு வணிகர். வணிகப் பெருமக்களுக்குப் பெரிதும் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த வணிக வரி சோதனைச் சாவடிகளைத் தமிழ்நாட்டிலே அறவே அகற்றி, வணிகர்களுக்குப் பாதுகாப்பு அளித்தது தலைவர் கலைஞர் ஆட்சியிலே.

பிற்பகல் 12–15

ஒரேயொரு பிரச்சினை பற்றி மட்டும் நான் சொல்லி விடைபெறுகிறேன். இன்றைக்குக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம், பக்கம் 15–ல், வணிகர் நல வாரியத்திற்கு 16 உறுப்பினர்கள்

நியமிக்கப்பட்டதாகக் கூறியிருக்கிறீர்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, அந்த 16 உறுப்பினர்கள் யார் என்று எந்த வணிகருக்கும் தெரியவில்லை. அதுமட்டுமல்ல. இதுவரை அந்தக் கூட்டம் கூட்டப்படாதது மட்டுமல்ல, இன்றைக்குக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலேகூட, எது, எதற்கெல்லாம் நிதி உதவி செய்யப்பட்டது என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் விசாரித்த அளவில், அதை எப்படிக் கொடுத்தார்கள் என்றோ, அப்படி ஒன்று நடப்பதாகவோ எங்களுக்குத் தெரியவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

நான் அதற்குள்ளே வரக்கூடாது என்பதற்காக வேறு மாதிரிச் சொல்கிறேன். மொத்த வருவாயில் இன்றைக்கு 68 சதவிகிதம், இந்த ஆட்சிக்கு வருமானத்திலே காட்டியிருக்கிறீர்கள். இன்றைக்கு இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தின் ஆரம்பத்திலேயே, முதல் பக்கத்திலே சொல்லியிருக்கிறீர்கள்: 'வணிக வரித் துறையின் நிர்வாகம், ஆணையர் அவர்களால் திறம்பட நடத்தப்படுகிறது' என்று. ஏன் இப்படி ஒரு தவறான தகவலைச் சொல்லியிருக்கிறீர்கள்? வணிக வரித் துறையினுடைய ஆணையாளர் அந்த இடத்தை விட்டுக் காலி பண்ணி 5 மாதம் ஆகிவிட்டது. ஆணையாளரே அந்தப் பதவியில் கிடையாது என்பதுதான் உண்மை. அதுமட்டுமல்ல...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக்கு மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலைத் தருகிறார். 5 ஆண்டு காலமாக வணிக வரித் துறை ஆணையர் இல்லை என்பது முற்றிலும் தவறான ஒன்று. தற்போது திரு. ராஜரத்தினம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் வணிக வரித் துறையினுடைய ஆணையாளராகச் செயல்படுகிறார். (குறுக்கீடு) எதைச் சொல்கிறார்? (குறுக்கீடு) இல்லை.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைக் கொடுக்கின்றார். 5 ஆண்டு காலம் ஆணையரே இல்லாமல் இருக்கிறது என்று சொல்கின்றார். 5 ஆண்டு காலம் இல்லை. 3 மாத காலமாகத்தான் ஆணையர் இல்லை. அந்தப் பொறுப்பை இப்போது வணிக வரித் துறையினுடைய செயலாளர் கவனித்துக்கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 5 ஆண்டு காலம் என்பது தவறு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** பரவாயில்லை. நமக்குள் ஆண்டுகள்தான் வித்தியாசம். ஆனாலும், உண்மை நிலைமையை ஒப்புக்கொண்டதற்கு நன்றி.

இன்றைக்கு 68 சதவிகிதம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல, நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். இந்த ஆண்டு மட்டும் வருமானம், விற்பனை வரியிலிருந்து— நான் பல ஆண்டுகளைப் பற்றிச் சொல்ல முடியும். ஆனால், அதற்கு முன்னால் விதி 110–ன்கீழ் அறிக்கை படித்துவிட்ட காரணத்தால், உடனே 110–க்குள்ளே வந்துவிட்டதாகச் சொல்லிவிடுவீர்கள். அதனால் விட்டுவிடுகிறேன். உங்களுடைய 110–ன்படியே மட்டுமல்லாமல், கொள்கை விளக்கக் குறிப்பிலும் அதுதான் இருக்கிறது. 110–வது விதியின்படியான அறிக்கைமீது நான் பேசக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். கொள்கை விளக்கக் குறிப்பிலே 13,900 கோடி ரூபாய்— 12,555 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்குப் பின்னாலே, இப்போது 13,900 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் அதற்குள்ளே வாதத்திற்கு வரவில்லை. அந்த 13,900 கோடி ரூபாய் வசூல் பண்ணித் தருகிற அந்தத் துறை இன்று எப்படி கவனிக்கப்படுகிறது? ஒருவேளை, வரி என்று வந்துவிட்டாலேயே நீங்கள் அதை ஒதுக்கிவிடுகிறீர்களா? அதனாலேதான் அந்தத் துறை ஒதுக்கப்படுகிறதா? அதிலே சற்றேறத்தாழ எனக்குத் தெரிந்த தகவல்படி, இன்றைக்கு அந்தத் துறையில் இவ்வளவு வசூல் பண்ணியிருக்கிறீர்கள் என்றால், நான் தவறாகச் சொல்லவில்லை; ஏற்கெனவே நீங்கள் வரியை அதிகமாகப் போட்டிருக்கிறீர்கள்; அதன்மூலமாக வந்த வருவாய்தானே தவிர, இப்போது போடவில்லை. போன ஆண்டு போட்ட வரி, இந்த ஆண்டு வரும்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க.–வின் கடந்த கால ஆட்சியில் அதிக வரி போட்டு, அது தொடர்ந்த நிலை இருந்தபோதிலும், நம் நிர்வாகத் திறமையின் காரணமாக, நிர்வாகச் செம்மையின் காரணமாக, வரி ஏய்ப்பைத் தடுத்ததன் காரணமாக, (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது வருவாய் அதிகமாக வந்திருக்கிறது. வரி போட்டு வருவாய் பெருகவில்லை. வரி ஏய்ப்பைத் தடுத்த காரணத்தால், உங்களைப் போன்ற வணிகர்கள்— நீங்கள் நல்லவர்களாக இருக்கலாம்— வரியை ஏய்க்கின்ற வணிகர்கள் இருக்கிறார்கள், வரி ஏய்ப்பைத் தடுத்ததன் காரணமாக வரி வருமானம் பெருகி, தற்போது வருமானம் அதிகமாகி இருக்கிறது.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** Point of order. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வரியை அதிகமாகப் போட்டு, இந்த ஆண்டு நீங்கள் 13,907 கோடி ரூபாயை அதிகமாக வரியை வசூல் செய்திருக்கிறீர்கள் என்று சொல்கின்றார்கள். இதிலே நான் சொல்வது 2003 ஆம் ஆண்டு வரி வசூல் 11,757 கோடி ரூபாய். கடந்த ஆண்டு இந்த அரசு, அம்மாவினுடைய அரசு எந்தப் புது வரியையும் போடவில்லை. வரி இல்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) வரியே இல்லாமல், இந்த ஆண்டு 11,757 கோடி ரூபாய் இருந்த வரியை, வரியே போடாமல் இந்த ஓர் ஆண்டிலே மட்டும் 13,907 கோடி ரூபாய், அதாவது, இந்த ஓர் ஆண்டிலே மட்டும் 2,050 கோடி ரூபாய் அதிகமாக வரி வசூல் செய்யப்பட்டிருக்கின்றது. அது எப்படிச் செய்யப்பட்டது என்றால், அம்மா அவர்களுடைய நிர்வாகத் திறமையாலும், திறமையான நிர்வாகத்தின் காரணமாகத்தான், வரியே போடாமல் இந்த ஓர் ஆண்டிலே மட்டும் 2,050 கோடி ரூபாய் கூடுதலாக வரி வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** Point of order...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

பிற்பகல் 12–20

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அதிகப்படியான வரியை வசூல் செய்ததாக மாண்புமிகு அமைச்சர்கள் இருவரும் சொல்கிறார்கள். இப்போது இந்த ஆட்சி வந்த பிறகு, பல முனை வரியைப் போட்டிருக்கிறீர்கள். தி.மு.க. ஆட்சியிலே, எங்களுடைய தலைவருடைய ஆட்சியிலே ஒரு முனை வரி; இப்போது இந்த ஆட்சியிலே பல முனை வரி. இன்னொன்று, வருடா வருடம் பார்த்தோமானால், ratio–படியே விலைவாசி கூடக்கூட, வருடா வருடம் இந்த வரியினுடைய வருமானம் அதிகமாக வரும், அதுதான் கணக்கு. ஆகவே, பலமுனை வரியைப் போட்டுத்தான் கூட்டினீர்களே தவிர— வரி இல்லை என்று சொல்கிறீர்களேயொழிய, இந்த வருடம் புதிதாக வரி போடவில்லை. போன வருடம், மூன்றாம் வருடம் போட்ட வரியெல்லாம் இருக்கத்தானே செய்கிறது? நாங்கள் போட்ட வரிக்குப் பின்னாலே, பல முனை வரி போட்டு, அந்த வரியின்மூலமாக வருமானம் வருடா வருடம் ratio-படி உங்களுக்குக் கூடிக் கொண்டிருக்கிறது.



**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்வது re-sale tax. Re-sale tax மூலம் கிட்டத்தட்ட ரூ.170 கோடிதான் வரி வருகிறதே தவிர, அவர் சொல்வதுபோல, இந்த 2,000 கோடி ரூபாய், இந்த re-sale tax மூலம் வசூலிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.பி.எம். மைதீன்கான், இரண்டு மணித்துளிகளில் முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) அவர் சொன்னால் கேட்பார். திரு. வேலு மாதிரித் தகராறு பண்ணமாட்டார். (சிரிப்பு)

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், re-sale tax 170 கோடி ரூபாய் என்று சொன்னார்கள். எனக்குக் கிடைத்த தகவலின்படி 220 கோடி என்று— நான் கிடைத்த தகவலைத்தான் சொல்கிறேன். நான் ஒன்றும் audit report செய்து, நான் ஒன்றும் அந்தப் பொறுப்பிலே இல்லை. இருந்தாலும், அந்தத் தகவலைச் சொல்வது தவறா? இங்கே நம்முடைய அண்ணாச்சி கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள்கூட விவரம் சொன்னார்கள். நானும் அதையேதான் சொல்ல வருகிறேன். ஏற்கெனவே, இன்றைக்கு இருக்கிற பணவீக்கம், விலைவாசி கூடும்போது, தன்னாலேயே அந்த வரிகள் வந்துவிடும். அமைச்சர் அவர்கள், நாங்கள் வரி போடவில்லை என்றார்கள். வரியை இப்போதுதான் போடவில்லை. அது இனிமேல், அடுத்த ஆண்டிலேதான் கணக்கு வரும். இது, முந்தைய ஆண்டுக் கணக்கிலே போட்ட வரிதான் இப்போது வந்துகொண்டிருக்கிறது. (குறுக்கீடு) நான் வேறு ஒன்றும் சொல்லவில்லை. 13 ஆயிரம் கோடி...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகச் சொல்கிறார். 2003–2004–லே புதிதாக வரிகள் போடவில்லை. 2004–2005, இந்த ஓர் ஆண்டிற்குப் புதிதாக வசூலிக்கப்பட்ட, இப்போது வசூலிக்கப்பட்டிருக்கின்ற அந்த 13,907 கோடி ரூபாயிலே, இந்த ஓராண்டிலே எந்தப் புதிய வரிகளும் போடப்படவில்லை. புதிய வரிகளைப் போடாமலே 2,050 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கின்றது என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2005 ஏப்ரல் 5

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, வசூலிக்கப்பட்டிருக்கிறது. வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. வணிகர்கள் ஒத்துழைப்புக் கொடுத்தால்தான் அந்த வசூல் நடக்கும். அதே நேரத்திலே, இந்தப் பண வசூலிலே களப் பணியாளர்களை இறக்கிவிடுகிறீர்கள். நான் ஏற்கெனவே, ஆணையாளர் இல்லை என்று சொன்னேன், அது ஒரு பக்கத்திலே இருக்கட்டும். எனக்குக் கிடைத்த தகவலின்படி, சற்றொப்ப இன்றைக்கு உதவி விற்பனை வரி அதிகாரிகள் உள்ளிட்ட சுமார் 1500 களப் பணியாளர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருக்கின்றன என்பதுதான் உண்மை. என்ன காரணம்? இங்கேகூட, அந்தச் சம்பள விகிதத்தை உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலே— *(மணியடிக்கப்பெற்றது)* முடிந்து விட்டது, ஒரு நிமிடம். உங்களுடைய சாதனைப் புத்தகத்திலேகூட நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். எங்களுடைய செலவினங்களைக் குறைத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். களப் பணியில் பணியாளர்களே இல்லாவிட்டால், செலவு குறையத்தானே செய்யும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எங்களைப் பாராட்டவேண்டும். களப் பணியாளர்கள் ஆயிரக்கணக்கில் காலியிடம் என்று வைத்துக்கொண்டே, அகில இந்திய சாதனையை வரி வசூலில் அம்மா அவர்களுடைய ஆட்சி செய்திருக்கிறது என்றால், இது நிர்வாகத் திறமைக்கு ஒரு சான்று; நிர்வாகத் திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டு. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் அதிகம் இல்லை. நான் அடுத்த பிரச்சினைக்குப் போகிறேன். தொகுதிப் பிரச்சினைக்கு வந்துவிடுகிறேன். என்னுடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதிப் பிரச்சினையை எழுதிக் கொடுங்கள்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** இல்லை, இல்லை. நான்கே நான்கு. அதையும் நான் சொல்லிவிடுகிறேன். *(குறுக்கீடு)* இப்போது நாங்கள்கூட தொகுதிப் பிரச்சினையைச் சொல்லக் கூடாது என்ற முடிவிலேதான் வந்தோம். இருந்தாலும், மக்கள் தப்பாக நினைத்துவிடக் கூடாது. என்ன காரணம் என்றால், நான் பல நேரங்களில் சொல்லிப் பார்த்தாகிவிட்டது. ஒன்றும் நடக்கவில்லை. என்ன காரணம் என்றால், எதிர்க்கட்சி என்பதாலே பழி வாங்குகிறார்களோ என்று மக்கள் நினைக்கிறார்கள்.



2005 ஏப்ரல் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. தொகுதிப் பிரச்சினையைச் சொல்லுங்கள்.

பிற்பகல் 12–25

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** இல்லை, இல்லை. நான் சொல்கிறேன். இதே சபையிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள் சொன்னார்; 'எங்கள் தொகுதிக்கு 49 கோடி ரூபாய்க்கு முதலமைச்சர் நிறையப் பணிகளைச் செய்திருக்கிறார்' என்று சொன்னார். ரொம்ப சந்தோஷம், அது 100 கோடி ரூபாயாக இருந்திருந்தால் நான் வாழ்த்தியிருப்பேன். ஆனால், இன்றைக்கு நீங்கள் அதிலே மாற்றாந்தாய் மனப்பான்மையோடு பார்க்கக்கூடாது. நான் தி.மு.க.-காரன் என்பதாலே, என்னுடைய தொகுதி பழி வாங்கப்படுகிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். இந்த அவையிலேயே ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு, ஒரு கோயிலுக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் திருப்பணிக்காக அளிக்கப்படும் என்று அறிவித்தீர்கள். ஆனால், என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்கு இன்று வரை ஒரு கோயிலுக்குக்கூட அறிவிக்கப்படவில்லை. எனக்கு வாக்களித்த காரணத்தாலே, அவர்கள் ஆதி திராவிடர்களாக இருக்கிறார்களா அல்லது முற்பட்ட வகுப்பினராக மாறி விட்டார்களா என்ற சந்தேகம் இருக்கிறது. அதைக்கூட நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. *(மணியடிக்கப்பெற்றது)* எனக்குப் பக்கத்திலேயிருக்கிற அருமை நண்பர், மாண்புமிகு அமைச்சருடைய நெல்லை தொகுதியிலே, 78 கோயில்களுக்குக் கொடுத்ததாக, அவரே தன்னுடைய சாதனைப் பட்டியலிலே அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். இதிலே ஏன் பாகுபாடு? இருந்தாலும் நான் சொல்லி வைக்கிறேன். மேலப்பாளையத்திலே ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டும். குடிதண்ணீர்ப் பிரச்சினை— முன்னாலே இருக்கும்போது தினசரி 2 தடவை வந்தது போக, இப்போது மூன்று நாளைக்கு சில நிமிடங்கள்கூட வருவது கிடையாது. தொலைநோக்குப் பார்வையோடு, அந்தத் தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்கவேண்டும். வண்ணாரப்பேட்டையில் முன்னாள் பேரவைத் தலைவர் செல்லப்பாண்டியன் சிலை அருகேயுள்ள ரவுண்டானாவில், வாகனப் போக்குவரத்தைச் சீர் செய்யவேண்டும். வண்ணாரப்பேட்டை மற்றும் முருகன்குறிச்சிப் பகுதிகளில் சுரங்கப் பாதைகளை அமைக்கவேண்டும். கோரிக்கைகள் நிறைய இருந்தாலும்கூட, சொல்லவேண்டும் என்பதற்காக நான்கை மட்டும் சொல்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது.)*

நான் ஒன்றே ஒன்று சொல்லி விடைபெறுகிறேன். நெல்லை, வணிகர் சங்க விழாவிலே 30 ஆண்டுகளுக்கு முன்னாலே எங்கள் தலைவர் கலைஞர் மிக அருமையான ஒரு வார்த்தையைச் சொன்னார். இந்த வணிகர் சமுதாயத்தினரிடம் பேசுகிற காரணத்தால், வணிகர்களெல்லாம், ஒவ்வொரு வணிகரும் ஒவ்வொரு அரசியல் கட்சியில் இருக்கலாம். வணிகர்களெல்லாம் அரசியலில் இருக்கலாம்; ஆனால், அரசியலில் வாணிபம் இருக்கக்கூடாது என்ற கருத்தைச் சொன்னார். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பை மட்டும் நான் பார்த்த நேரத்தில், எனக்குத் தெரிந்த வரை, சுருக்கமாகச் சொல்வது என்றால், ** என்று நான் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசி நேரத்திலே ஏன் **

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பைத் தயாரிப்பதில் அரசு இயந்திரம் செயல்படுகிறது, அதிகாரிகள் செயல்படுகிறார்கள். அதனால் அவர் கூறியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மைதீன்கான் அவர்கள் கடைசியாகச் சொன்ன அந்தப் பொன்னான வாக்கியம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) திரு. ஏழுமலை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை'.

எல்லா உயிர்களிடத்தும் கருணை கொண்டு, அவற்றைக் காத்திடுவதைக் கடமையாகக் கொண்ட சான்றோர் தமது உயிரைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள் என்ற குறளுக்கு இலக்கணமாய்த் திகழும்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மைதீன்கான் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



** ஜனநாயக மரபுக்கு மீறிய அல்லது நாடாளுமன்ற மரபுக்கு மீறிய வார்த்தை இல்லை. (குறுக்கீடுகள்) இது ஏற்கெனவே மன்றத்திலே பயன்படுத்தப்பட்ட சொல். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. ** (குறுக்கீடு) ** என்று சொல்வது முறைகேடானது. (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு, எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், ஒரு கொள்கை விளக்கக் குறிப்பு என்பது, அதனுடைய விளக்கங்களைச் சொல்லி, புள்ளிவிவரங்களைச் சொல்லி, வைக்கப்படக்கூடிய ஒரு ஒட்டுமொத்தமான குறிப்பு. அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய பதிலைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்வது, அல்லது வேறு சில கருத்துகளைப் பரிமாறுகின்றபோது சொல்கின்ற கருத்து என்பது வேறு. ** அப்படிக் குறிப்பிடுவது சரியல்ல. ஆகவேதான், அதை அவைக் குறிப்பிலிருந்து நான் நீக்கியிருக்கிறேன். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ஒன்றை மட்டும் குறிப்பிட்டுச் சொல்கிறார். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒட்டுமொத்தமாக அப்படிச் சொல்வது தவறு. (குறுக்கீடுகள்) திரு. ஆற்காடு வீராசாமி .

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** Unparliamentary word–ஆக இருந்தால்தான் நீக்கமுடியும். மற்றதையெல்லாம் நீக்கமுடியாது. (குறுக்கீடுகள்)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் கொடுக்கின்ற தீர்ப்பிலே எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்ற நேரத்தில், அமைச்சரையோ அல்லது யாரையாவது குறிப்பிட்டுச் சொல்லியிருந்தால், அது உண்மையிலே நீக்கப்பட வேண்டியது. நேற்றையதினம் அமைச்சர் சொல்லும்போது, அதை நீங்கள் அவைக் குறிப்பிலே இருக்கலாம் என்றீர்கள். இன்று, அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, அமைச்சரையோ, இலாகாவில் இருக்கக்கூடிய அதிகாரிகளையோ, யாரையும் குறிப்பிடவில்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. யாரையும் குறிப்பிடவில்லை. ஒட்டுமொத்தமாக சகட்டுமேனிக்கு இப்படிச் சொல்வது எல்லாம் முறையற்றது. (குறுக்கீடு) அவைக் குறிப்பில் ஏறக்கூடாது என்று நான் முடிவு செய்கிறேன். அது அவைக் குறிப்பில் ஏறாது. திரு. ஏழுமலை. (குறுக்கீடுகள்)

***திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை'.

எல்லா உயிர்களிடத்தும் கருணை கொண்டு, அவற்றைக் காத்திடுவதைக் கடமையாகக் கொண்ட சான்றோர் தமது உயிரைப் பற்றி கவலைப்படமாட்டார் என்ற குறளுக்கு இலக்கணமாய்த் திகழும் அன்னையே! உங்களை வணங்கி, தந்தை பெரியாரின் துணிவு, அறிஞர் அண்ணாவின் அறிவு, புரட்சித் தலைவரின் அன்பு, மூன்றையும் ஒன்றாய்க் கொண்ட ஒருருவாம், எங்கள் திருவுருவாம் அன்னையே! அன்னைத் தமிழின் அணிகலனே! மாண்புமிகு இதய தெய்வம் தங்கத் தாரகை அம்மா அவர்களின் பொற்பாதங்களிலே என்னுடைய வணக்கத்தையும், பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியையும் முதலில் காணிக்கையாக்கி 2005--2006 ஆம் ஆண்டிற்கான வணிக வரித் துறை மானியத்தின்மீதான விவாதத்தில் பேசுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்கின்றபோது, இந்த நாட்டினுடைய நிதிநிலை, கஜானா காலி, களஞ்சியம் காலி, வணிக வரி ரூ.1,000 கோடி பாக்கி, வசூலிக்கப்படவில்லை. ஏராளமான கடன் சுமை. வணிக வரியினுடைய வசூல் விகிதம் 2.78 சதவிகிதம். ஆனால் கடந்த நான்கு ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான ஆலோசனையின்பேரில், பல்வேறு வகைகளில் ஏற்படுத்தப்பட்டு இருந்த தடைகளை எல்லாம் நீக்கி இன்றைக்கு வணிக வரித் துறையின் முனைப்பான நடவடிக்கையின்மூலமாக, 13,907 கோடி ரூபாய் அளவுக்கு வரி வருவாயை உயர்த்தி இருக்கிறார்கள் என்று சொன்னால் அது இந்த ஆட்சிக்குக் கிடைத்த, சிறந்த நிர்வாகத்திற்குக் கிடைத்த, தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைத்த பம்பர் பரிசு என்றே



சொல்லலாம். அதேபோன்று, வணிக வரி வசூல் 18.29 சதவிகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவையிலே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். எப்பேர்ப்பட்ட நிலையில் இந்த உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், மத்திய அரசு ஏழு, எட்டு முறை டீசல் விலையை உயர்த்திய இந்த நிலையிலும்கூட, மீனவர் சமுதாயத்தினுடைய நண்பனாக விளங்கிக்கொண்டிருக்கின்ற கழக அரசு, மாண்புமிகு அம்மா அவர்கள், இயந்திரப் படகின்மூலம் கடலிலே சென்று மீனைப் பிடிக்கின்ற அந்த மீனவர்களுக்கு விற்பனை வரியை ரத்துச் செய்து, அதன்மூலமாக ஏறக்குறைய ரூபாய் 51 கோடியை அவர்களுக்குத் தந்திருக்கின்றார்கள்.

அதோடு மட்டுமல்லாமல், திரைப்படங்களுக்கான டிக்கெட்டின் கேளிக்கை வரியைக் குறைத்திருக்கின்றார்கள். தொழில் தொடங்குபவர்களுக்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டிருக்கின்றது. ஏழைகள் பயன்படுத்தும் இரு சக்கர மோட்டார் வாகனம், டிராக்டர்ஸ், சைக்கிள் போன்ற வாகனங்களுக்குக் கூடுதல் வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. கணினி உதிரி பாகங்களுக்கு இடை மாநில விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புவது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 2004–2005 ஆம் ஆண்டு மற்றும் 2005–2006 ஆம் ஆண்டுகளில் புதிய வரி விகிதம் ஏற்றம் இல்லாமல் உயர் விகித வளர்ச்சி கண்டுள்ளது என்பதை— அம்மாவைத் தவிர இந்த நாட்டுக்கு யாராலும் இந்த விற்பனை வரித் துறையில் ஏற்றம் கண்டிருக்க முடியாது என்பதை— இந்த நேரத்திலே சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், அதிக முதலீடு செய்து தொழில் துறையில் முன்னேற்றம் கண்டிருப்பதாகச் சொன்னார்கள். நான் அவர்களிடத்திலே பணிவாகக் கேட்பதெல்லாம், தி.மு.க. ஆட்சியில் ஏறக்குறைய 179 ஆலைகள் மூடப்பட்டனவே தவிர, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பி & சி மில்லை மூடிய நிலையை அவர்கள் அரசு ஏற்படுத்தினார்களேயொழிய, வேறு ஒன்றும் இந்த முன்னேற்றத்தில் காணப்படவில்லை. அம்மா அவர்களின் நிர்வாகத் திறமை, சிறந்த ஆலோசனையின்படி, முறைப்படியான வசூலிப்பு நடவடிக்கையை மேற்கொண்டதால்தான் வரி வசூல் விகிதம் 18.29 சதவிகிதம் உயர்ந்துள்ளது என்பதை இந்த நேரத்திலே நான் இந்த அவையிலே கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தீர்க்க தரிசனத்தோடு, தொலைநோக்குப் பார்வையுடன் மதிப்புக் கூட்டு வரித் திட்டத்தின் சாதக, பாதகங்களைப் பல முறை ஆய்வு செய்து, உற்பத்தியாளர்கள், வணிகர்கள், பொது மக்கள் ஆகியோர் எந்த நேரத்திலும், எந்தவிதத்திலும், நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ, அறவே பாதிப்புக்குள்ளாகிவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றார் என்பதை இந்தப் பேரவை நன்கு அறியும். அனைத்துப் பிரிவினருடைய ஒட்டுமொத்தக் கருத்து உருவாக்கப்பட வேண்டுமென்பதில் அம்மா அவர்களின் அரசு உறுதியான நிலைப்பாடு கொண்டுள்ளது என்பதை அனைவரும் அறிவர். மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதால் மாநிலத்திற்கு நிகர வருவாய் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வரும். அவ்வாறு குறைகின்ற அந்த வருவாயை முதல் ஆண்டு 100 சதவிகிதமும், இரண்டாம் ஆண்டு 75 சதவிகிதமும், மூன்றாம் ஆண்டு 25 சதவிகிதமும் மத்திய அரசு வழங்கும் என்று மத்தியிலே நிதி அமைச்சராக இருக்கின்றவர் கூறியிருக்கின்றார். ஆனால் அவருடைய கூற்றை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்று சொன்னால், இந்த அவையிலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். டெல்லியிலே நடந்த கூட்டத்திலே கலந்து கொண்டபோது மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள் ஒன்றைச் சொல்கிறார், அவருடைய செயலாளர் மாறுபட்ட கருத்தைச் சொல்லுகின்றார், ஒரு நிலை ஏற்படவில்லை, அதனால்தான் அனைத்து மாநிலங்களுடைய வணிகப் பெருமக்களையும், உற்பத்தியாளர்களையும் அழைத்துப் பேசி, ஒட்டுமொத்தக் கருத்து வந்த பிறகு மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்த வேண்டுமென்று கோரியதாகச் சொன்னார்கள்.

மதிப்புக் கூட்டு வரியிலே, குறிப்பாக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், தமிழகத்திலே தங்கம், வெள்ளிக்கு விற்பனை வரி விலக்கு அளித்திருக்கின்றார்கள். ஆனால், மதிப்புக் கூட்டு வரியிலே ஒரு சதவிகிதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று, உணவு தானியங்களுக்கு 4 சதவிகிதம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு தானியங்களுக்கு 4 சதவிகிதம் என்று சொன்னால், அரிசியும் அதில் அடங்கும். ஆனால், மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள் கூறுகின்றபோது, உணவு தானியங்களுக்கு, முதல் ஆண்டு அந்த அரசே முடிவு செய்துகொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றார். நான் பணிவாகக் கேட்பது, தமிழகத்தில்



இருக்கின்ற ஏழையெளிய மக்கள் பயன்படுத்துகின்ற அரிசிக்குக்கூட, மதிப்புக் கூட்டு வரியிலே வரி விதிக்க வேண்டுமென்ற நிலை இருக்கின்ற காரணத்தினால்தான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அனைத்துப் பிரிவினர்களுடைய ஒருமித்த கருத்து உருவானதற்குப் பின்னால், மதிப்புக் கூட்டு வரியைத் தமிழகத்தில் கொண்டு வருவேன் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விற்பனை வரி ஈட்டுவதில் பெரும் பங்கேற்பது, போக்குவரத்து வாகனங்களாகும். வணிகத்திற்குப் பயன்படுகின்ற பொருட்களை, ஓரிடத்தில் உற்பத்தி செய்த பொருளை, வேறொரு இடத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று சொன்னால், வாகனங்கள் மிக, மிக முக்கியம். அந்த வாகனங்கள், நெடுஞ்சாலைத் துறையின்மூலமாக, நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைகள் வழியாகச் செல்ல வேண்டும். வட மாநிலங்களிலே உற்பத்தியாகின்ற பொருட்கள் தென் மாநிலங்களுக்கு வரவேண்டுமென்றாலும், தென் மாநிலங்களிலே உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் வட மாநிலங்களுக்குச் செல்ல வேண்டுமென்றாலுங்கூட, நெடுஞ்சாலைத் துறையின் தேசிய நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்தியாகவேண்டும். சென்னையிலே மிக முக்கியமான நெடுஞ்சாலைத் துறைக்குச் சம்பந்தப்பட்ட சாலையான செங்கல்பட்டு–திண்டிவனம் சாலை மிக முக்கியமான சாலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை தமிழகத்தில் இரு மொழிக் கொள்கை இருந்துகொண்டிருக்கின்றது. இந்தச் சாலையிலே இருக்கின்ற மைல் கற்களிலே இந்தியில் எழுதப்பட்டிருந்தது. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், "இந்தியில் எழுதப்பட்டிருக்கின்றது. தமிழகத்தில் இரு மொழிக் கொள்கைதான் இருக்கின்றது. நீங்கள் இங்கே இந்தியை நுழைய விட்டுவிட்டீர்கள். எனவே, தமிழகத்தில் ஆண்டாண்டுக் காலமாக இருக்கின்ற இரண்டு மொழிக் கொள்கையை வலியுறுத்த வேண்டும். அந்தக் கற்களிலே தமிழிலே எழுத வேண்டும்" என்று நாட்டினுடைய பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுக்குக் கடிதம் எழுதினார். அந்தத் துறையை வலியுறுத்தினார். ஆனால், நடந்தது என்னவென்று சொன்னால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் நாட்டினுடைய பிரதம மந்திரியிடத்திலே கேட்டதற்கு, அந்தத் துறையினுடைய அமைச்சராக இருக்கின்ற, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. டி.ஆர். பாலு அவர்கள் சொல்கின்றார்:—

தேசிய நெடுஞ்சாலைகளிலுள்ள கிலோ மீட்டர் கற்களில் தமிழ் மொழியில் ஊர்களின் பெயர் எழுதப்படவில்லை என்று தமிழக

முதல்வர் அம்மா அவர்கள் பிரதமருக்குக் கடிதம் எழுதியதோடு, நீண்ட ஓர் அறிக்கையையும் விடுத்து, திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கண்டனத்தையும் தெரிவித்தார். "இந்தப் பிரச்சினை குறித்து, நவம்பர் மாதம் முதல் வாரத்திலேயே, செஞ்சி தொகுதி சட்டப் பேரவை உறுப்பினரால் பேரவையில் எழுப்பப்பட்டவுடன், நான் துறையின் அதிகாரிகளிடம் அதுபற்றிப் பேசி, தமிழிலே பெயர் எழுதப்படாத கற்களில்..."— மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்லியிருக்கின்ற இந்த அறிவிப்பிலே, "தமிழிலே பெயர் எழுதப்படாத கற்களிலேயெல்லாம் உடனடியாகத் தமிழில் பெயரை எழுத வேண்டுமென்று கூறினேன்" என்று கூறுகின்றார். நான் பணிவோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே கேட்பதெல்லாம், நவம்பர் மாதம் முதல் வாரம் இந்தப் பேரவை நடைபெறவில்லை. இந்தப் பேரவையில் நான் கூறியதாக ஒரு தவறான கருத்தைச் சொல்லி, அந்தச் சாலையில் இன்றையதினம் இருக்கின்ற கற்களில், அந்தப் பலகைகளிலேயெல்லாம் தமிழிலும், இந்தியிலும், ஆங்கிலத்திலும் காட்சியளிக்கின்றது என்று சொன்னால், தமிழ்நாட்டினுடைய கொள்கை என்ன? இரு மொழிக் கொள்கை. இந்தியை எதிர்த்து ஆட்சிக்கு வந்தோம். அண்ணாவின் வழியைப் பின்பற்றுகிறோம், தந்தை பெரியாரின் வழியைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், இன்றையதினம் என்ன, மும்மொழிக் கொள்கைக்கு வழிவகுத்து விட்டார்களா என்பதை நான் பணிவோடு உங்களிடத்திலே கேட்கின்றேன்.

*(உறுப்பினர் புகைப்படங்கள் சிலவற்றைக் காட்டிக்கொண்டே பேசினார்.)*

*பிற்பகல் 12–40*

அதோடு மட்டுமல்லாமல், முதலிலே இந்தியிலே இருந்தது. இந்தி எழுதிய கற்களிலே தமிழில் எழுத வேண்டுமாம், ஏன்? இரு மொழிக் கொள்கை என்று இந்தச் சட்டப் பேரவையிலே 1968 ஆம் ஆண்டு அண்ணா அவர்களால், தமிழகத்தில் தமிழும், ஆங்கிலமும்தான் இருக்கும் என்று தீர்மானம் நிறைவேற்றி, மத்திய அரசுக்கு அனுப்பி, இன்று வரை மத்திய அரசில் தமிழ்நாட்டில் இரு மொழிக் கொள்கை என்று சொல்கிறார்கள். ஆனால் தமிழ், தமிழ் என்று சொல்லி, இந்த மக்களை ஏமாற்றி பிழைப்பு நடத்துகின்றவர்கள், இந்தியைத் தமிழகத்தில் நுழைய விட்டுவிட்டார்கள் என்பதைப் பார்க்கின்றபோது தமிழ்மீது அவர்களுக்கு மோகம் இல்லையா, தமிழுக்குப் பதிலாக தமிழை அழிக்கக்கூடிய ஒரு மொழி என்று சொன்னால் இந்தியாகத்தான் இருக்க



முடியும். ஆங்கிலம் தமிழை அழிக்காது, இந்தி ஆதிக்கம் வந்தால் தமிழ் அழிந்துவிடும். ஆனால் நாட்டிலே இருக்கின்ற மக்களை ஏமாற்றி, அரசியல் நடத்திக் கொண்டிருக்கிற அந்தத் தலைவர்களிடத்திலே நான் கேட்கின்றேன். தமிழ் தேவையில்லையா? இதுவரை நெடுஞ்சாலைத் துறைகளில் இருந்த மைல் கல்லிலே தமிழும், ஆங்கிலமும்தான் இடம் பெற்றிருந்தது. ஆனால் இப்போது மத்திய தரை வழிப் போக்குவரத்துத் துறையில் அமைச்சராக இருக்கின்றவர் இந்தியைக் கொண்டு வந்து விட்டாரா? எப்படி தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தது? இந்தி எதிர்ப்பு என்று சொல்லி எதிர்த்தவர்கள் பல பேர் சிறை சென்று, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, இவர்கள் எல்லாம் சிறைக்குச் சென்று, பல உயிர்களை இழந்து, அவர்களுக்கு எல்லாம் இப்போதுகூட நாம் வீர வணக்கம் செலுத்திக்கொண்டிருக்கிறோம். அப்பேர்ப்பட்ட அந்த மொழியை மிகக் கேவலமான முறையிலே, பதவி சுகத்திற்காக, மத்தியில் ஆளுகின்றவர்களைத் திருப்திபடுத்துவதற்காக நெடுஞ்சாலைத் துறைமூலமாக, மைல் கல்மூலமாக இந்தியைப் புகுத்திவிட்டார்கள் என்பதை நினைத்துப் பார்க்கின்றபோது, அவர்களுடைய தமிழ்ப் பற்று நமக்கு நன்றாகத் தெரிகின்றது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உண்மையிலேயே தமிழுக்காக ரொம்பப் போராடுகிறார், பாராட்டுகிறேன். எங்களைப் பொறுத்தவரையிலே இரு மொழிக் கொள்கைதான். அதிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை. எங்கேயாவது அப்படி மைல் கற்களிலே இந்தியில் இருக்குமானால், அதைச் சுட்டிக்காட்டுகின்ற நேரத்திலே, அந்த அமைச்சர் ஏற்கெனவே நடவடிக்கை எடுத்திருக்கிறார். இப்போதும் சொல்கிறேன், தமிழைச் செம்மொழியாக்க வேண்டுமென்று கலைஞர் சொல்லி, மத்திய அரசாங்கம் தமிழையே செம்மொழியாக்கியிருக்கிறது. ஆனால்... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை அதுவல்ல.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஆனால், இன்னும் பல பள்ளிகளில் இன்றைக்கும் பார்த்தால் தமிழுக்கு இடமில்லாமல், சில Convent பள்ளிக்கூடங்களில் ஆங்கிலமும், இந்தியும், ஃபிரெஞ்சும், இவைதான் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆற்காடு வீராசாமி அவர்கள், இந்தப் பிரச்சினை என்பது அதுவல்ல. மைல் கற்களில் இந்தியிலே எழுதப்பட்டிருக்கிறது என்பது உறுப்பினர் அவர்களுடைய குற்றச்சாட்டு.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அது தவறு, நான்தான் சொல்லிவிட்டேனே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னால் அவர் எடுத்த புகைப்படத்தையே என்னிடம் காட்டினார். இரண்டு நாட்களுக்கு முன்னால் எடுத்த ஒரு புகைப்படத்தை, மைல் கல் புகைப்படத்தை என்னிடத்திலே காட்டினார். அதிலே முழுக்க, முழுக்க இந்தியிலே மட்டும் எழுதியிருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, அப்படி எழுதியிருந்தால், அது தவறு. அதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு போய் அதை நிச்சயமாக நிவர்த்தி செய்வோம். அது வேறு... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏழுமலை, அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு போய், நிவர்த்தி செய்வார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** கேளுங்கள். அது மட்டுமில்லை. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சம்பந்தம் இல்லாமல் சொல்வது எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) குற்றச்சாட்டு, மைல் கற்களிலே இந்தி என்பதுதான் குற்றச்சாட்டு. இப்போதும் மைல் கற்களிலே இந்தி இருக்கிறது. இந்தி மட்டுமே இருக்கிறது என்பதற்கான புகைப்படத்தை என்னிடத்திலே காட்டினார். ஆகவே, அதைச் சரி செய்யச் சொல்லி, உங்களுடைய அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லுங்கள். அவ்வளவுதான்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அதை அவர் எங்கிருந்து எடுத்தார்? என்னவென்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அப்படியிருந்தால் அதை நாங்கள் மாற்றுவதற்கு அமைச்சர் அவர்களிடம் சொல்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தப் புகைப்படத்தை உங்களிடம் கொடுக்கச் சொல்கிறேன்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பிற்பகல் 12–45

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தான் ஆட்சியிலே இல்லாவிட்டாலும்கூட, அதிகாரம் இருக்கின்றது என்ற ஒரு தோற்றத்தை நாட்டு மக்களிடத்திலே ஏற்படுத்துவதற்காக, மத்திய அரசு கொண்டு வருகின்ற அந்தத் திட்டங்களிலே, இந்தத் தரை வழிப் போக்குவரத்துத் துறைமூலமாகத் திறக்கப்பட்ட அந்த விழாவில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டு திறந்து வைத்தார். அவர் திறந்து வைக்கின்ற அந்த இடத்திற்கு நேரே, சுங்கச் சாவடி என்று இந்தியிலே எழுதப்பட்டிருக்கிறது இன்றும் இருக்கிறது. காலையில் நான் வருகின்றபோதுகூட பார்த்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலே இருக்கின்ற சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரும்பான்மையானவர்கள் வாகனத்தில் வருகின்றார்கள். திண்டிவனத்திலிருந்து வருகிறார்கள். திண்டிவனத்திலிருந்து என்னுடைய தொகுதியான ஓங்கூர் முடிகின்ற வரை, ஏன், குறிப்பாகத் தமிழுக்காகப் பாடுபடுகின்றேன் என்று சொல்லி, பெயர்ப் பலகை வைக்க வேண்டும் என்று சொல்கின்றாரே, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர், அண்ணன் கணேசன்கூட அவர்களுடைய தலைவர் இல்லத்திற்குச் சென்று வந்திருப்பாரேயானால், அந்தக் கற்களிலே இந்தி எழுதப்பட்டிருப்பதைப் பார்த்திருக்கலாம்.

**திரு. தி. வேல் முருகன்:** தார் பூசியாகிவிட்டது. அழித்தாகிவிட்டது.

**திரு. வெ. ஏழுமலை:** இன்றும் இருக்கின்றது. நான் பணிவோடு கேட்கின்றேன், பேரவைத் தலைவர் அவர்களே, வணிகர் நல வாரியம்—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) வணிகர் நல வாரியத்தில் 16 வணிகர்களை அலுவல்சாரா உறுப்பினர்களாக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 27-6-2003-லே நியமனம் செய்து, 31–12–2004 வரை ஏறக்குறைய 393 நபர்களுக்குக் குடும்ப நல உதவி, மருத்துவ உதவி, கல்வி உதவி, விளையாட்டு உதவி, தீ விபத்து உதவி, ஊனமுற்றோருக்கான உதவி, உயர் மதிப்பெண் பெற்றவர்களுக்கான உதவி என ஏறக்குறைய 75 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் இதய தெய்வம் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்கள் வணிக் மக்களுக்கு, நலிந்த வணிக மக்களுக்கு நிதி உதவியைச் செய்திருக்கின்றார் என்பதை இந்தப் பேரவையிலே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

வணிக வரித் துறைக்கு முதுகெலும்பாக விளங்குபவர்கள் வணிகர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வணிகர்கள், அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுடைய மொழிக்கேற்ப பெயர்ப் பலகையை வைத்து வியாபாரம் செய்கின்றார்கள். ஆனால் இன்றையதினம் அதனுடைய நிலை என்ன? வணிக மக்கள் வைத்திருக்கின்ற பெயர்ப் பலகைகளையெல்லாம் தமிழில் இருக்க வேண்டும் என்று சொல்கின்றார்கள். நான் அவர்களிடத்திலே பணிவோடு கேட்பது, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை பிறப்பித்திருக்கின்றது. காலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வணிக நிறுவனங்கள்மீது 9,061 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்று சொன்னார். அது எனக்குத் தெரியும். ஆனால் நான் கேட்க விரும்புவது, தமிழிலே பெயர்ப் பலகை வைக்க வேண்டுமென்று சொல்கின்றவர்கள், அவருடைய மருத்துவமனை திண்டிவனத்தில் இருக்கின்றது. 3 பெயர்ப் பலகைகள் இருக்கின்றன. 3 பெயர்ப் பலகைகளிலும் எஸ்.ஆர்.எச். என்று அந்தத் தலைவரினுடைய பெயர் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதேபோல...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசுகின்ற நேரத்திலே தமிழில் பெயர்ப் பலகை வைக்கச் சொல்கிறார் என்று சொல்கிறார். இவர் வைக்க வேண்டாம் என்று சொல்கிறாரா என்பதை முதலிலே தெரிவிக்க வேண்டும். அதே நேரத்தில், திண்டிவனத்திலே என்ன பெயர் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து பேச வேண்டும். தெரியாமல் பேசக்கூடாது. சுத்தத் தமிழிலே இருக்கிறது; தூய்மையான தமிழிலே இருக்கிறது. இதை மாற்றி ஏறக்குறைய 5, 6 ஆண்டுகள் ஆகிவிட்டன. தவறான தகவலை அவைக்குச் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது. இப்பொழுது அந்த உறுப்பினர் பேசியதற்காக நான் கேட்கிறேன், இந்த அரசாங்கத்தைக் கேட்கிறேன். அரசால் 3 ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த ஆணைகளை நடைமுறைப்படுத்த வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் சொல்வதைக் கேளுங்கள். அவர் கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.





**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையில்லாமல் பேசுகிறார். அனுமதித்தீர்கள் என்றால், நாங்கள் பேச வேண்டியதாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கேட்டால், கேட்டதற்கு விளக்கம் சொல்லுங்கள். அவ்வளவுதான்.

**திரு. வெ. ஏழுமலை:** அந்த மருத்துவமனையில் 3 boards வைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பக்கம் தமிழிலே, மறு பக்கம் எஸ்.ஆர்.எச். என்று வைக்கப்பட்டிருக்கின்றது. இன்னொன்று, டாக்டர் இளையராஜா, பி.டி.எஸ்., எப்.ஆர்.எச்.எஸ்., டென்டல் டாக்டர் என்று வைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவையிலே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள்.

**திரு. வெ. ஏழுமலை:** வணிகர்கள் வைக்கின்ற அந்த board-களிலே தமிழிலே இருக்க வேண்டுமென்று நீங்கள் கூறுவதால், மருத்துவமனையை வியாபாரத் தலமாக அவர்கள் நடத்துவதால், அவர்களுக்குரிய அந்தக் கட்டடத்திலே தமிழிலே இல்லை. என்ன செய்ய வேண்டும்? அந்தப் பலகைகளையெல்லாம் தமிழில் ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். நான் திரு. ஜி.கே. மணியைப் பேசச் சொல்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையில்லாமல் பேசிக் கொண்டிருக்கிறார். உண்மையைப் பேச வேண்டும். உண்மைக்கு மாறாகப் பேசுகிறார். தமிழிலேதான் இருக்கிறது. ஏதோ இந்த அவையிலே சொல்ல வேண்டும், பதிய வைக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறார். ஆதாரத்தோடு சொல்லச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. ஜி.கே. மணி:** நாங்கள் ஆதாரத்தோடு, படம் வைத்துக்கொண்டு பேசுகிறோம். ஆதாரம் இருந்தும் அனுமதிக்க மாட்டேன் என்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, அவர் பேசினார், நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை, * உண்மைக்கு மாறாகச் சொன்னால் நன்றாக இருக்காது. ** வேண்டுமென்றே பேசினால், வம்புக்கு இழுப்பதற்காகப் பேசினால் நன்றாக இருக்காது. எச்சரிக்கையாகச் சொல்கிறோம். கடுமையாக எச்சரிக்கிறோம்.

*பிற்பகல் 12–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசினார். பேசியதற்குப் பிறகு உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். இதிலே ஆத்திரப்படுவதற்கு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) ஜி.கே. மணி, அவர் பேசினார், பேசியதற்கு உங்களுடைய விளக்கத்தைச் சொல்லிவிட்டீர்கள். அதோடு முடிந்தது, பிரச்சினை முடிந்தது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று, ஆங்கிலத்தில் இருக்கிற சொற்களுக்கு எல்லாம் (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் செய்து இருக்கிற தவறுக்கு என்னிடம் ஆதாரம் இருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பணிவோடு கேட்பதெல்லாம், தமிழ், தமிழ் என்று சொல்லி ஒரு தலைவர் (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. இது வேறுதான். (குறுக்கீடுகள்) வேறு கருத்தைத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். தாமோதரன். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஒரே ஒரு கோரிக்கை. (குறுக்கீடு) ஒரே ஒரு கோரிக்கை, தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எழுதிக் கொடுத்து விடுங்கள். ஏழுமலை, மற்ற பிரச்சினைகளை எழுதிக் கொடுங்கள். (குறுக்கீடு) பரிதி, சொல்லுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** அது இல்லை. இது வேறு. (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னது இது? ஜி.கே. மணி, என்ன, சாமி வந்த மாதிரி இப்படிப் பேசுகிறீர்கள். ஜி.கே. மணி, ஒரு உறுப்பினர்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



ஒரு கருத்தைச் சொன்னார், அதற்கு விளக்கம் சொல்வதற்கு உங்களுக்கு வாய்ப்பு அளித்தேன். இந்த மாதிரி நீங்கள், ஒரு முன்வரிசைத் தலைவர் இப்படி நடந்துகொள்வது சரி அல்ல. ஒரு கட்சியினுடைய தலைவர், நீங்கள் ஒரு கட்சியினுடைய தலைவர்; ஒரு கருத்தைச் சொல்கிறார் என்றால், அந்தக் கருத்து தவறு என்பதற்கு நீங்கள் விளக்கம் சொல்லலாம், அதிலே ஒன்றும் இல்லை. அதற்காக ஒட்டுமொத்தமாக, ஏன் இப்படி? சாமி வந்ததுபோல, இப்படி ஆட வேண்டிய அவசியமே இல்லை. திரு. பரிதி, சொல்லுங்கள். (குறுக்கீடு) பரிதி. ஜி.கே. மணி சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. தாமோதரன். (குறுக்கீடு) பரிதி, உட்காருங்கள், முடிந்து விட்டது. (குறுக்கீடு)

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கடைசி வாக்கியத்தைச் சொல்லி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் மிகவும் முக்கியமான பிரச்சினையான குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்த அம்மா அவர்களுக்கு நன்றியைச் சொல்கிற இந்த நல்ல வேளையிலே, நீண்ட நெடுங்காலமாக நரசின்னராயன்பேட்டை ஊராட்சி, எம்.ஜி.ஆர். நகரில், 500 குடும்பங்கள், 2,000 மக்கள் தொகை கொண்ட அந்தப் பகுதியில் அரசால் அனைத்து கட்டுமான வசதிகளும் செய்யப்பட்டு இருக்கின்றன. அந்த இடம் சத்திரப் புறம்போக்கு என்று சொல்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்தப் பொற்கால ஆட்சியிலே அந்த மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'மங்கையராய்ப் பிறப்பதற்கோர் நல்ல மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா' என்று பெண்களைப் பெருமைபடுத்திய கவிமணி, உலக மங்கையரெல்லாம் செய்த தவப் பயனாய்த் தோன்றிய மங்கையர் திலகமே! மகளிர் நலனுக்காக வாழும் மாமணியே! மகளிர் திட்டங்களுக்காக மாபெரும் விருது பெற்ற தங்கத் தாரகையே! உலக மகளிருக்கு எல்லாம் எடுத்துக்காட்டாய் விளங்கும் வாழ்நாள் சாதனையாளரே! கூர்மையான மதிநுட்பத்தால், கடுமையான உழைப்பால், நிதிநிலையைச் செம்மைப்படுத்திய நவயுகச் சிற்பியே! தமிழக மக்களை மட்டுமல்லாமல், தமிழ் மொழியை அன்றும், என்றும் காக்கும் அன்னையே! அகில இந்தியாவில் அனைத்திலும் முதலிடம் நம் தமிழகம்; அத்தனை பெருமைகளையும் அரவணைக்கும் அன்னையே, சந்தியா தாய் எமக்களித்த சத்தியத் தாயே! வீரம் விளைந்த

செஞ்சி மண்ணின் சார்பாகப் பேச வாய்ப்பளித்த, எங்கள் உள்ளமும், எங்கள் வாழ்வும் புரட்சித் தலைவி, புரட்சித் தலைவி, புரட்சித் தலைவி என்று, எம் உயிருடன் இயங்கும் தாயை வணங்கி, உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமோதரன். (குறுக்கீடு) திரு. பரிதியா? (குறுக்கீடு)

***திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில உலகமே புகழும் அன்னை சோனியா காந்தி அவர்களையும், தமிழகக் காங்கிரஸ்...

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, அவருக்கு ஏற்பட்ட தமிழ் உணர்வை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். ஏதோ, இந்திக்கு நாங்கள் நடைபாவாடை விரிப்பதுபோல அவர் இங்கே பேசினார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி, அதற்கு திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** ஒன்றே ஒன்று. நான் சொல்வது தவறாக இருந்தால் எடுத்து விடுங்கள். ஒன்றே ஒன்று, உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். **

*பிற்பகல் 12–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை ஏற்கெனவே ஆற்காடு வீராசாமி அவர்கள் சொன்னார். அது முடிந்து விட்டது. திரு. எஸ். தாமோதரன்.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில உலகமே புகழும் அன்னை சோனியா காந்தி அவர்களையும், தமிழகக் காங்கிரஸ் தலைவர்...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விட்டது. (குறுக்கீடு) அமைச்சர் அவர்களே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



***திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில உலகமே புகழும் அன்னை சோனியா காந்தி அவர்களையும், தமிழகக் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.கே. வாசன் அவர்களையும், தமிழ்நாட்டிற்குக் கல்விக் கண் தந்து, விவசாய, தொழிற்புரட்சியை ஏற்படுத்திய பாரத ரத்னா அமரர் காமராசர் அவர்களையும் வணங்கி, காங்கிரஸ் கட்சி சார்பில் என் கருத்துகளை வணிக வரித் துறை மானியக் கோரிக்கையிலே பதிவு செய்யும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழ்நாட்டின் சொந்த வருவாய் 2005-2006-ல் ரூ.27,411.39 கோடியில், விற்பனை வரி வசூல் மட்டும் ரூ.14,360 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது தமிழக வருவாயில் 51.5 சதவிகிதம் ஆகும். இது மைய அரசின் சீரான தொழில் கொள்கைகளாலும், மாநில அரசின் நடவடிக்கைகளினாலும், தொழில் அதிபர்கள் நேர்மையான வரி செலுத்துவதன்மூலமும் ரூ.16,000 கோடி வரை உயரும் என நான் கருதுகிறேன். இதன் முக்கியத்துவம் குறித்து எனது தொடர் கோரிக்கைகளை ஏற்று, வணிக வரித் துறை மானியத்திற்கு முழு நாள் ஒதுக்கியதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபோல 2001-லிருந்து நான் தொடர்ந்து வலியுறுத்தி வரும், தாமிரபரணி ஆற்று நீரை விருதுநகருக்கு குடிநீருக்காகக் கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கையையும், விருதுநகரிலே செவிலியர் பள்ளி ஆரம்பிக்க வேண்டும், விருதுநகரிலே உள்ள கௌசிகா நதியை விருதுநகர் எல்லையிலே முற்றிலும் ஆழப்படுத்தி சுத்தம் செய்யவேண்டும் என்ற கோரிக்கையையும் ஏற்றமைக்கு தமிழக அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, சிவகாசியிலே வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வரும் 6 வணிக வரித் துறை அலுவலகங்களுக்கு நாங்கள் ரூ.100 கோடி வரை வரி கட்டுகிறோம் என்பதைக் கூறி, இதற்காகக் கட்டடங்களை 52 இலட்சத்தில் கட்டித் தர முன்வந்ததற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபோல, மதுரை–திருநெல்வேலி இடைப்பட்ட பகுதியில் மருத்துவக் கல்லூரி இல்லை. அதை விருதுநகரிலே ஆரம்பித்திட வேண்டுகிறேன். கர்நாடகா, ஆந்திரா, கேரளாவிலே, ஒவ்வொரு மாநிலத்திலும் 30-க்கும் மேற்பட்ட மருத்துவக் கல்லூரிகள், பாண்டிச்சேரியிலே 5 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன என்பதை நான் நினைவுபடுத்துகிறேன்.

நமது பாரத நாடு சுதந்திரம் அடைந்த பின்பு கொண்டு வந்த சட்டங்களுக்கு எல்லாம் தலையாயதாகக் கருதப்படும் மதிப்புக் கூட்டு வரியை 1-4-2005 முதல் தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி அமல்படுத்திடக் கேட்டுக்கொள்கிறேன். இது ஏற்கெனவே 130 நாடுகளில், சைனா உட்பட செயல் முறையில் இருந்து வருகிறது. இந்தியாவில் பெரும்பாலான மாநிலங்களில் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டமாகும். மதிப்புக் கூட்டு வரி அமலில் உள்ள ஹரியானாவில் அரசு வருவாய் கூடியுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதிப்புக் கூட்டு வரியில் நஷ்டம் ஏற்பட்டால் முதல் ஆண்டு 100%-ம், இரண்டாம் ஆண்டு 75%-ம், மூன்றாம் ஆண்டு 50%-ம் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும். இது அதிகரிக்கவும் வாய்ப்பு உள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மைய அரசு அரிசியை VAT வரி விலக்கிற்கு உட்பட்ட பட்டியலில் சேர்த்துள்ளது. VAT மேல் மட்டக் குழு அறிக்கைகளின்படி நம் தமிழகம் ஏற்காதபட்சம், மைய அரசு வழங்கும் மானியத்தைக் குறைத்தாலோ, ரத்துச் செய்தாலோ நம் தமிழகம் பாதிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் சிறு வியாபாரிகளுக்கு...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. ஒன்றே ஒன்று. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள், அவர் மைய அமைச்சரிடமும் எடுத்துச்சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். முதல் ஆண்டிலே 100 சதவிகிதம் இழப்பை ஈடுசெய்கிறார்கள். இரண்டாம் ஆண்டிலே 75 சதவிகிதம். மூன்றாம் ஆண்டிலே 50 சதவிகிதம். நமது மாநிலத்தைப் பொறுத்த வரைக்கும், ஏற்கெனவே வரி விதிப்புகள் எல்லாம் 13 சதவிகிதம், 14, 15, 16, 17 என உச்சக்கட்ட வரி விதிப்பில் உள்ள மாநிலமாகத் தமிழகம் இருக்கிறது. VAT நடைமுறைக்கு வருகிறபோது நான்கு சதவிகிதம், 12½ சதவிகிதம் என வந்துவிடும். அப்போது வரிக் குறைப்பு பெரும்பான்மையான பொருட்களில் ஏற்படுகின்றபோது, இழப்பு நிறைய ஏற்படுகிறது. 1,300 கோடி ரூபாய் VAT-லே இழப்பு ஏற்படுகிறது. C.S.T.-லே ஒரு 1,500 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. இப்படி ஏற்படுகிறபோது நமது மாநிலத்தைப் பொறுத்த வரைக்கும் ஒரு வளர்ந்த மாநிலம். Manufacturing sector—உற்பத்தித் தொழிலிலே நாம் அதிகமாக இருக்கின்ற ஒரு முன்னிலை மாநிலமாக இருக்கிறோம். Input credit-தந்து, அவர்களுக்குத் தரவேண்டிய நிலை வந்துவிடுகிறது. இந்த இழப்பை ஈடுகட்ட VAT-ஐ



நடைமுறைப்படுத்திவிட்டால் மறுபடியும் நாம் Tax போடமுடியாது. அது ஒரு நிலவரம். அப்போது 75 சதவிகிதம் மைய அரசு தருவதாக ஒத்துக்கொள்கிறார்கள், இரண்டாம் ஆண்டு. மூன்றாம் ஆண்டு 50 சதவிகிதம். அதற்குப் பிறகு இல்லை என்ற நிலை. அப்படி வருகிறபோது நமக்கு ஒருவேளை தொடர்ந்து நட்டம் ஏற்பட்டால், Manufacturing State-க்குத் தொடர் நட்டம் ஏற்படும் என்ற ஒரு அச்சத்தை வல்லுநர்கள் கூறுகிறார்கள். அப்போது இழப்பை எப்படி ஈடுகட்டுவது? அதற்கு மைய அரசு ஒரு உத்தரவாதம் தரவேண்டும் அல்லவா? அதைத் தர மறுக்கிறார்கள். அதற்காகத்தான் 1998-ல், Service Tax என்பதே Residuary List of the Constitution-ல் இருக்கிறது. அதை மாநிலப் பட்டியலுக்குத் தர வேண்டும் என்ற ஒரு கோரிக்கை அன்று முதலமைச்சர்களால் வலியுறுத்தப்பட்டது. ஆனால் கொள்கை அளவில் ஒத்துக்கொள்ளப்பட்ட அதை, தற்போது, ஆறு மாதங்களுக்கு முன்னால், மைய அரசு மாற்றி, Service Tax-ஐ Union List-க்கு எடுத்துச் சென்றுவிட்டார்கள். இதனால் மாநில அரசினுடைய வருவாய் பெரிதும் பாதிப்புக்குள்ளாகிவிடும் VAT நடைமுறைக்கு வந்தால், என்ற அச்சத்தை நமது அரசின் சார்பில் டெல்லியிலே சொல்லியிருக்கிறோம். தொழில் துறையிலே, Developed States என்று சொல்லக்கூடிய மகாராஷ்டிரா, குஜராத், தமிழ்நாடு போன்ற மாநிலங்களும் வலியுறுத்தி வருகிறார்கள். இதற்கு ஒரு பரிகாரம் வேண்டும். அப்படி இழப்பு ஏற்பட்டால் பரவாயில்லை, எப்படிச் சரி செய்துகொள்ளலாம் என்று சொல்லுங்கள், VAT-ஐக் கொண்டு வந்துவிடலாம்.

பிற்பகல் 1-00

**திரு. எஸ். தாமோதரன்:** இதுகுறித்து மேல் மட்டக் குழு ஏற்கெனவே தெரிவித்துள்ளபடி, 2005-2006-ல் மேல் மட்டக் குழு மறுபடியும் கூடி, சிரமங்களை நிவர்த்தி செய்யும் எனக் கூறியுள்ளார்கள். ஆகையால் நாம் இதை மறுபடியும் பேசி, நமது வரி பாதிக்காவண்ணம் ஏற்பாடு செய்துகொள்ள முடியும் என்று நான் திண்மையாகக் கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் அவர்கள் சொல்கிறார்கள், ஆறு மாதம் கழித்து, ஓராண்டு கழித்துப் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்று. பேசித் தீர்ப்பதில் இந்த அரசுக்கு நம்பிக்கையில்லை. சட்ட ரீதியாக மாற்றங்கள் வேண்டும். Service Tax-ஐ மாநில அரசினுடைய பட்டியலுக்குக் கொண்டுவர வேண்டும். இதுதான் எங்கள் அரசினுடைய வற்புறுத்தல்.

**திரு. எஸ். தாமோதரன்:** மேலும் VAT முறையிலே சிறு வியாபாரிகளுக்கு 10 இலட்சம் வரை வணிக வரி விலக்கும், 50 இலட்சம் வரை 0.25% எனவும் மேல் மட்டக் குழு கூறுகிறது. விரிவான கணக்கும் வைக்கத் தேவையில்லை. ஆகையினால் இது வியாபாரிகளுக்கும், வணிகப் பெருமக்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும் மிகவும் ஒரு அனுசரணையான சட்டம் ஆகும். இதை விரைவிலே கொண்டுவர ஏற்பாடு செய்யும்படி நமது தமிழக அரசை நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

VAT–ஐ ஏற்காதபட்சம், தொழில்கள் குறைந்த வரி உள்ள இதர மாநிலங்களுக்கு டிப்போ முறையில் ஸ்டாக் டிரான்ஸ்ஃபர் என்று சென்றுவிடும். மேலும் ஆந்திரா, கேரளா, கர்நாடகா மற்றும் பாண்டிச்சேரிக்கு நடுவில் உள்ள தமிழ்நாடு ஒரு தீவுபோல் ஆகிவிடும் என்பதை எச்சரிக்கைப்படுத்த விரும்புகிறேன். வணிகர்களுக்கும், தொழில்களுக்கும் கூடுமான வரை சலுகைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் வர்த்தகம் கண்டிப்பாகப் பாதிக்காது. ஆகையால் VAT வரியை உடனடியாக அமல்படுத்தினால் தமிழ்நாட்டுக்கு நன்மை பயக்கும் என்று நான் கருதுகிறேன். உலக வங்கியும் VAT முறையை சிபாரிசு செய்கிறது. VAT–ஐ அமல்படுத்தாதபட்சம் உலக வங்கியில் கடன் வாங்குவதில் சிக்கல்கள் வரலாம். VAT–ன் நன்மைகளை நமது கொள்கைக் குறிப்புப் புத்தகத்தில் 21, 22, 23, 24 ஆம் பக்கங்களில் நமது அரசே மிகவும் தெளிவாகக் கூறியுள்ளது. அரசுக்கும் இதில் எந்தவிதமான ஆட்சேபமும் இல்லையென்று நான் கருதுகிறேன்.

மேலும் உண்மையான வணிக வரியில் 80% பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், மதுபான வகைகள், வாகன உற்பத்தியாளர்கள், சிமெண்ட், இரும்பு, உரக் கம்பெனிகள் கட்டுகிறார்கள். இவர்களுக்கு அனேகமாக செட்–ஆஃப் கிடையாது. ஆகவே மாநில வரி வசூல் எந்த வகையிலும் பாதிக்காது. 100% தொழில் செய்பவர்களும், அதிகப்படியாக வணிகர்களும் விரும்பும் VAT முறையை உலக வழக்கிற்கேற்ப அமல்படுத்திட வேண்டுகிறேன்.

தமிழ்நாட்டை வளம் கொழிக்கச் செய்தவர், கல்விக் கண் கொடுத்தவர் பாரத ரத்னா காமராசர் அவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்தும் வகையில் அவர்கள் பிறந்த தினமான ஜூலை 15–ஐ மாணவர் தினமாக அறிவிக்க தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசுக்கு கற்பகத் தருபோல வருவாய் தரும் வணிக வரித் துறையைப் பேணிக் காப்பது தமிழக அரசின் கடமையாகும். 6¼ கோடி



தமிழக மக்களின் நலன் கருதி, கீழ்க்காணும் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். இதில் கழிவு மிகக் குறைவாக வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலும், வணிக வரியும் பின்னிப் பிணையப்பட்டது. மக்கள் பொதுவாக உபயோகிக்கும் உணவு எண்ணெய்ப் பொருட்கள் தொழில் சிறக்க, இதன்மீதான 4% விற்பனை வரியை நீக்கிட வேண்டுகிறேன். உணவு விடுதிகளுக்கு விற்பனை வரி போடுவதன்மூலம் விற்பனை வரி ஏய்ப்பு குறையும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். உணவு எண்ணெய்ப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் தமிழகத்தில் பரவலாக உள்ளன. இவர்களுக்கு எண்ணெய் வித்துக்கள் சீரான விலையில் கிடைக்கவும், வெளிநாட்டில் இருந்து இறக்குமதியாகும் எண்ணெயிலிருந்து பாதுகாத்திடவும், எண்ணெய் வித்துக்கள், கடலை, எள், சூரியகாந்தி, தென்னை, மக்காச் சோளம், உணவு தானிய உற்பத்தியை 10 மடங்காவது நாம் கூட்ட வேண்டும். தமிழகத்திலே மூன்றில் ஒரு பகுதியான ஹரியானா நம்மைவிட மூன்று மடங்கு உணவு உற்பத்தி செய்கிறது. அவர்கள் சென்ற ஆண்டு 280 இலட்சம் டன் உற்பத்தி செய்தார்கள். ஆனால் நம்முடைய உணவு உற்பத்தியோ வெறும் 90 இலட்சம் டன்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. நாம் 281 இலட்சம் டன் உணவு உற்பத்தி செய்தால் நம் மாநிலம் உணவு உற்பத்தியில் முதலிடம் பிடிக்கும் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

. . பிற்பகல் 1–05

விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கவும், அதன்பொருட்டு வணிக வரி கூடவும் மாவட்டத்திற்கு (மணியடிக்கப்பெற்றது) இல்லை, இல்லை மூன்று நிமிடம். (குறுக்கீடு) மாவட்டத்திற்கு 100 குளிர் சாதன சேமிப்புக் கிடங்குகள் கட்ட வேண்டும். இதன்பொருட்டு, தக்காளிப் பழம் ரூபாய் கிலோ ஒன்றுக்கும், பின்பு ரூ.30/–க்கும் விற்பதைத் தவிர்க்கலாம். கடந்த பெரிய கார்த்திகை அன்று கத்தரிக்காய் கிலோ ரூ.80/–க்கு விற்றது என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன். 50 per cent மக்கள் செய்யும் விவசாயத் தொழில் மேன்மையடைய திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டம் பயன்பெற பம்பா—அச்சன்கோவில்—வைப்பாறு இணைப்புத் திட்டத்தைத் தொடர்ந்து வலியுறுத்த வேண்டுகின்றேன்.

அடி மேல் அடி வைத்தால் அம்மியும் நகரும் என்பது தங்களுக்குத் தெரியாதது அல்ல. காமராசர் ஆட்சியில் கேரள எல்லைக்குள்

மதிநுட்பத்துடன் கட்டிய பரம்பிக்குளம் அணையை நினைவுகூர்கின்றேன்.

தமிழ்நாட்டில் கட்டுமானப் பணிகளுக்கும், தட்டுமுட்டுச் சாமான்கள் செய்வதற்கும் தேவையான மரம் 95 per cent–க்கு மேல் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. மேலும் தமிழகத்தைப் பசுமையான தமிழகமாக ஆக்க, மரம் வெட்டுவதைத் தவிர்க்கவும், மாசு கட்டுப்பாடு பாதிக்கப்படாமல் இருக்கவும், இயற்கைச் சூழல் மேன்மை அடையவும், நல்ல மழை பெய்விக்க வேண்டியும், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் மரம் மற்றும் மர சைஸ்களுக்கு உண்டான தற்பொழுதுள்ள 10 per cent வரியிலிருந்து 4 per cent வரி விதித்து தமிழகத்தில் உள்ள காடுகளையும், ஆயிரக்கணக்கான கட்டுமானப் பொருட்கள் தயாரிக்கும் தொழில்களையும், பல இலட்சக்கணக்கான கட்டடத் தொழிலாளர்களின் நலத்தையும் காத்திட வேண்டுகின்றேன். மேலும் இரும்பு, மணல் விலை ஏற்றத்தால் கட்டுமானத் தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

விருதுநகர் சட்டமன்றத் தொகுதியிலும், சிவகாசி சட்டமன்றத் தொகுதியிலும் உள்ள கிராமங்களில் பட்டாசுத் தொழிலில் $3\frac{1}{2}$ இலட்சம் தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றார்கள். இவர்களில் 80 சதவிகிதம் பேர் பெண்கள். கடந்த 6 வருட காலமாக பல்வேறு காரணங்களால் பட்டாசு விற்பனை வரி 12 per cent மற்றும் சுங்க வரி 14 per cent உள்ளதால், இத்தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் விருதுநகர் மாவட்டம் வறட்சி மிகுந்த மாவட்டமாக உள்ளதால், இப்பட்டாசுத் தொழிலை நம்பி பல இலட்சக்கணக்கான மக்கள் பயனடைந்து வருகின்றார்கள். எனவே பாதிக்கப்பட்ட இந்தப் பட்டாசுத் தொழில் மேன்மை அடையவும், வறட்சி மாவட்டமாக விளங்குகின்ற எங்கள் மாவட்டத்திலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கவும் பட்டாசுக்கு உண்டான விற்பனை வரியை 12–லிருந்து 4 சதவிகிதமாக்கக் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாட்டில் முந்திரி விவசாயம் பரவலாக நடைபெறுகிறது. தமிழ்நாட்டில் பண்ருட்டி, கடலூர், கந்தர்வக்கோட்டை, ஜெயங்கொண்டம், மதுரை, நாகர்கோவில் ஆகிய இடங்களில் முந்திரிப் பருப்பு செய்யும் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளன. இத்தொழிலை நம்பி இலட்சக்கணக்கான மக்கள் பயனடைந்து வருகின்றார்கள். முந்திரிக் கொட்டைக்கு 10 per cent வரி கொடுத்து கொள்முதல் செய்து, அதிலிருந்து தயாரித்த பொருளான முந்திரிப் பருப்புக்கு மேலும் 10 per cent விற்பனை வரி உள்ளது. இதனால் இந்தத் தொழில் மிகவும்



பாதிக்கப்படுகிறது. எனவே முந்திரிக் கொட்டைக்கு கொள்முதல் வரியை 4 per cent ஆகவும், முந்திரிப் பருப்புக்கு 4 per cent ஆகவும் ஆக்கும்படிக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் விலை மலிவானதும், வைட்டமின் இரும்புச் சத்து மிக்கதும், கர்ப்பிணிப் பெண்களுக்குத் தேவையானதுமான பேரீச்சம்பழத்திற்கு விற்பனை வரியை எடுத்திடக் கேட்டுக்கொள்கின்றேன். மாணவர்களுக்கு சத்துணவில் இதைச் சேர்த்திடவும் கேட்டுக்கொள்கின்றேன்.

குடும்ப நல உதவித் திட்டத்தில் வணிக உறுப்பினர்கள் இறந்தால் வாரிசுகளுக்கு ரூபாய் 20 ஆயிரம் கொடுக்கப்படும் என்று கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டுள்ளது. இதை 50 ஆயிரமாக ஆக்கக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் ரூ. 50 இலட்சம் வணிகம் செய்பவர்களுடைய அலுவலகங்களில் வணிக வரித் துறையினர்–enforcement செல்வதைத் தவிர்க்க வேண்டும் எனவும் நான் கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் இரண்டே நிமிடங்கள்தான். இதேபோல மகாராஷ்டிரா மற்றும் கோவாவில் VAT Act–ன்கீழே தப்பிதமாக ஆர்டர்கள் போடும் அதிகாரிகளின்மீது நடவடிக்கை எடுக்கச் சட்டமுள்ளது. Similar to assessees, the Assessing Officers should also be made subject to the penal action. Same scale of punishment should be applied to the officers also as to the assessees.

விருதுநகர் சட்டமன்றத் தொகுதி, அர்ஜுனா ஆற்றின் கூடமுடையார் கோயில் அருகில் ஒரு தடுப்பணையும், கன்னிசேரி அருகே ஒரு தடுப்பணையும் கட்டும்படி நான் கேட்டுக்கொள்கின்றேன்.

விருதுநகருக்கு ஆனைக்குட்டம் அணையிலிருந்து வரும் 18 கிலோ மீட்டர் பைப்புகள் 50 வருடங்களுக்கு முன்பு..(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, எழுதிக் கொடுத்து விடுங்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 1–10

**திரு. எஸ். தாமோதரன்:** இல்லை, ஒன்றே ஒன்றுதான். (குறுக்கீடு) ஒன்றுதான். 801 அருமருந்துகள் கொண்ட பனையையும், பனைத் தொழிலையும் காப்பது தமிழக அரசின் கடமையாகும். பூரண மதுவிலக்கை அமல்படுத்த முடியாதபட்சம், 20 இலட்சம் பனைத் தொழிலாளர் நலன் கருதி, நமக்கு அருகிலுள்ள மாநிலங்களில் கள்

இறக்கி அரசு விற்பனை செய்கிறது. அதுபோல் நம் அரசும் செய்யலாம். இதன்பொருட்டு, நம் குடிமக்களுக்கு குறைந்த விலையில் கள் கிடைக்கும். உடல் நலனுக்கும் அவ்வளவாக கேடு விளைவிக்காது. இதைக் கருத்தில் கொண்டு, அரசே கள் இறக்கி விற்பனை செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் நாடார் சமுதாயத்தில் 90%–க்கும் மேல் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளனர். இவர்கள் நலன் கருதி நாடார் சமூகத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மேலும், (குறுக்கீடு)...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சந்தானம். (குறுக்கீடு) முடித்துவிடுகிறார். (குறுக்கீடு) முடித்துவிட்டார். வணக்கம் என்று சொல்லி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ். தாமோதரன்:** நமது Tamil Nadu Paper Limited தயாரிக்கும் பேப்பர்கள் (மணியடிக்கப்பெற்றது) தமிழ்நாட்டிலே கிலோ 41 ரூபாய்க்கும், டில்லியிலே 38 ரூபாய்க்கும் விற்கிறார்கள். நமது தமிழ்நாட்டிலே உற்பத்தியாகும் இந்தப் பேப்பரை, தமிழ்நாட்டிலும் ரூபாய் 38–க்கே விற்பனை செய்தால், நமது அச்சகங்கள் மிகவும் பயன் அடையும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதேபோல, ரூ.30,000, ரூ.50,000 மூலதனத்துடன் செய்யும் வார்னிஷ் கோட்டிங் ஒர்க்ஸ் கான்டிராக்ட் தொழிலுக்கு 4–5–1998–லிருந்து விற்பனை வரி விலக்கு உள்ளது. G.O. 150–ஐ 1986–ல் இருந்து அமல்படுத்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி. (குறுக்கீடு)

**திரு. லா. சந்தானம்:** ஒரு நிமிடம். ஒரு Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** முக்கியமானது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் இந்த அவையிலே உரை நிகழ்த்திய காங்கிரஸ் உறுப்பினர்கள் அத்தனை பேரும் இந்த மாநிலத்திற்குப் பூரண மதுவிலக்கு வேண்டும் என்கின்ற கொள்கை எங்களுடையது என்பதைப் பதிவு செய்திருக்கிறார்கள். நமது அன்பிற்குரிய சகோதரர் இங்கு பேசுகின்றபோது கள்ளுக் கடையைத் திறக்க வேண்டுமென்று பேசியிருக்கின்றார்கள். காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே சில முரண்பாடுகள் இருப்பதாகத் தோன்றுகிறது. அந்தக் கட்சியினுடைய உண்மையான கொள்கை என்ன என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, மதுவிலக்கு அமல்படுத்தப்படவேண்டும் என்பதுதான் எங்களுடைய நோக்கம். கட்சியினுடைய நிலையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. மதுவிலக்கு அமலில் இல்லாத காரணத்தாலே, வேறு மதுக்களை விற்கிறீர்கள், ஏன் இதையும் விற்கக் கூடாது என்ற தன்மையில் அவர் எழுப்பியிருக்கலாம் என்றாலும்கூட, பூரணமான மதுவிலக்குதான் எங்களுடைய நிலை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி.

**திரு. எஸ். தாமோதரன்:** முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கார்த்தி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. கார்த்தி, பேசுங்கள். அவர் சும்மா உட்கார்ந்திருக்கிறார், (குறுக்கீடு) பேசுங்கள், நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ். தாமோதரன்:** இதுபோல, எங்கள் ஊர் அருகிலுள்ள ஆலங்குளம் சிமென்ட் ஆலை (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கார்த்தி, பேசுங்கள்.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணிக வரி மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கும், எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் ஐயா அவர்களுக்கும், எங்களுடைய தலைவர் அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும், எனது மனமார்ந்த நன்றியினை முதலிலே தெரிவித்துக்கொள்கின்றேன். சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏழுமலை அவர்கள் பேசும்பொழுது, திண்டிவனத்திலே எங்களது மருத்துவர் ஐயா அவர்களுடைய மருத்துவமனையிலே பெயர்ப் பலகையிலே ஆங்கிலச் சொற்கள் இருப்பதாக இங்கே குறிப்பிட்டார்கள். நாங்கள் ஒன்றும் ஆங்கிலச் சொற்களுக்கு எதிரானவர்கள் அல்ல. இரண்டாவது, ஆங்கிலத்திலே பெயர் வைக்கக் கூடாது என்று எங்களுடைய மருத்துவர் ஐயா அவர்களும் எங்கேயும் கூறவில்லை. தாய் மொழியான தமிழ் மொழியிலே முதலிலே பெரிய எழுத்திலே தமிழில் போட்டுவிட்டு, இரண்டாவது எழுத்தாக ஆங்கிலத்தில் இருக்கலாம் என்றுதான் கூறியிருக்கிறார்களே தவிர, ஆங்கிலச் சொற்களே எழுதக் கூடாது என்பது எங்களுடைய கொள்கையல்ல. அதேபோலத்தான் இன்றைக்கு எங்களுடைய மருத்துவர் ஐயா அவர்கள், தமிழ் மொழிக்கு, தாய் மொழிக்கு முதல் உரிமை கொடுக்கவேண்டுமென்று

கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

விற்பனை வரி என்பது மாநில அரசுக்கு வருவாயை ஈட்டிக் கொடுப்பதற்கு மூதறிஞர் இராஜாஜி அவர்களாலே, அவர் முதலமைச்சராக இருந்தபோது கொண்டுவரப்பட்ட உரிய வரி விதிப்பாகும். இதற்கு முந்தைய காலத்தில் விற்பனை வரியே இருந்ததில்லை. இராஜாஜி காலத்தில் பூரண மதுவிலக்கு நடைமுறைக்கு வந்தபோது, மாநில அரசிற்கு ஆயத்தீர்வைமூலம் வந்த வருவாய் இல்லாமலே போனது. இந்த வருவாய் இழப்பை ஈடுகட்டுவதற்காக, மூதறிஞர் இராஜாஜி அவர்களால் கொண்டுவரப்பட்டதுதான் புதிய மாநில விற்பனை வரியாகும். இன்று மாநில மொத்த வருவாயின் மூலம் கிடைக்கப்பெறும் திட்ட வருவாய் 20,650 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்ட தொகையில், 14,361 கோடி ரூபாய் வருவாய் விற்பனைமூலம் வசூல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அதாவது, மொத்த வரி வருவாயில் 69 சதவிகிதம் விற்பனை வரிமூலம் கிடைக்கின்றது. அன்று கைவிடப்பட்ட மாநில ஆயத்தீர்வையும் மீண்டும் இப்பொழுது வசூல் செய்யப்பட்டு வருகிறது. மாநில ஆயத் தீர்வை மூலம் 2,478 கோடி ரூபாய் வசூல் செய்திட 2005–2006 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது. ஆக, இன்றைய தேதியில் கைவிடப்பட்ட ஆயத்தீர்வைமூலம் ஒரு ரூபாய் வருமானம் என்றால், புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட விற்பனை வரிமூலம் ஆறு ரூபாய் வருமானம் எனக் கணக்கிடப்படுகிறது. இப்படி ஆயத்தீர்வை, விற்பனை வரி, வாகன வரி, முத்திரைத்தாள் தீர்வை என மேலும், மேலும் வரிகள் விதிப்பதன்மூலம் மக்கள்மீது வரிச் சுமையை ஏற்படுத்தும் ஒரு அரசு பெரும்பான்மை மக்கள் ஆதரவைப் பெற்றிருக்காது என்று சொல்ல முடியும்.

*பிற்பகல் 1-15*

2004–2005 ஆம் ஆண்டில் மட்டும் விற்பனை வரிமூலம் கிடைக்கக்கூடிய வருவாய் 18.49 விழுக்காடு வளர்ச்சி கண்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1938 முதல் 1939 வரை விற்பனை வரியே இருந்ததில்லை. 1967 முதல் 1968 வரை விற்பனை வரி 1.33 கோடி ரூபாய். 1977 முதல் 1978 வரை விற்பனை வரி 242 கோடி ரூபாய். 1990 முதல் 1991 வரை விற்பனை வரி 2,066 கோடி ரூபாய். 2005 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை விற்பனை வரி 14,361 கோடி ரூபாய். 1967–68 ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது இது எத்தனை சதவிகிதம் என்பதை நீங்கள் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். இந்த



வளர்ச்சி விகிதத்தை வேறு விதத்தில் நாம் பார்க்கலாம். கடந்த 1991 முதல் 1996 வரை ஐந்து ஆண்டுகள் விற்பனை வரிமூலம் வருவாய் 16,998 கோடி ரூபாய். 1996 முதல் 2001 முடிய ஐந்து ஆண்டுகளில் வருமானம் 32,279 கோடி ரூபாய். 2001–2006 முடிய ஐந்து ஆண்டுகளில் 55,997 கோடி ரூபாய். ஆக, முதல் ஐந்து ஆண்டு காலம், அதாவது, 1991 முதல் 1996 வரை, இரண்டாவது, 1996 முதல் 2001 வரை ஒப்பிடும்போது 89 சதவிகிதம் வளர்ச்சி அடைந்துள்ளது. அதேபோல, இரண்டாவது ஐந்து ஆண்டு, அதாவது 1996 முதல் 2001 வரை, மூன்றாவது ஐந்தாண்டு காலம், அதாவது 2001 முதல் 2006 வரை ஒப்பிடும்போது 73 சதவிகிதம்தான் வளர்ச்சி விகிதம் உள்ளது. ஆகவே, 1996–2001, தி.மு.க. ஆட்சியில் மாநில விற்பனை வரி வருவாய் உயர்ந்த அளவிற்கு 2001–2006 ஆண்டு காலத்தில் உயரவில்லை என்பதுதான் உண்மை. 2005–2006 ஆம் ஆண்டிற்கான வணிக வரிகள் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் பக்கம் 21–ல் மதிப்புக் கூட்டு வரி—VAT தயார் நிலையில் உள்ளது என்ற தலைப்பில் சில செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. இந்த இடத்தில், 1–4–2005 அன்று முதல் இந்த வரி முறையை அமல்படுத்துவதற்கு பெரும்பான்மை முறையில் தீர்மானித்துள்ளது எனச் சொல்லப்பட்டுள்ளது. இந்தப் பெரும்பான்மைத் தீர்மானத்திற்குத் தமிழ்நாடு அரசு ஆதரவாக இருந்ததா, இல்லையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே தெரிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, VAT Committee–ஐப் பொறுத்தவரைக்கும், அதிலே நாங்கள் தெளிவுபடுத்தியிருக்கிறோம். Service Tax–ஐ மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வர வேண்டும், அரசியல் சட்டத்திலே என்று தெளிவுபடுத்தியிருக்கிறோம். Compensation-ஐப் பொறுத்தவரைக்கும், தொடர்ந்து முதலாண்டு, இரண்டாமாண்டு, மூன்றாமாண்டு மட்டுமல்ல, VAT loss stabilise ஆகிற காலம் வரைக்கும் கட்டாயமாக நட்ட ஈட்டை அவர்கள் தர வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தியிருக்கிறோம்.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 31–1–2005 அன்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இந்த அவையில் உரையாற்றியபோது, 'மதிப்புக் கூட்டு வரி—VAT குறித்து எட்டப்பட்ட ஒருமித்த கருத்தின் அடிப்படையில், மதிப்புக் கூட்டு வரித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குச் சட்டம் கொண்டுவர இந்த அரசு உத்தேசித்துள்ளது' என்று கூறியிருக்கிறீர்கள். ஆக, தமிழ்நாடு அரசினுடைய நிலைப்பாடு, இந்த ஆண்டு VAT திட்டத்தை இந்த அரசு

நிறைவேற்றுமா அல்லது தள்ளிப் போடுமா என்பதை நீங்கள் தெளிவாக மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்து அரசியல் கட்சிகளும் VAT-ஐக் கொண்டு வரலாம் என்று ஒத்துக்கொண்டால், மைய அரசு VAT compensation, அந்த நட்ட ஈட்டை தொடர்ந்து 100% தரும் என்று ஒத்துக்கொண்டால், Service Tax-ஐப் பொதுப் பட்டியலிருந்து மையப் பட்டியலுக்கு எடுத்துச் சென்ற மத்திய அரசு, மீண்டும் மாநிலப் பட்டியலுக்குத் தந்து, மாநில அரசுகளுக்கு அதிக வருவாய் வரக்கூடிய சூழலை உருவாக்கும் என்ற நிலை வந்தால், நாம் அனைவரும் சேர்ந்து ஒருமித்த ஒரு கருத்தை எடுத்தால், கட்டாயம் VAT-ஐக் கொண்டு வந்துவிடலாம்.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று மதிப்புக் கூட்டு வரி— VAT அறிமுகப்படுத்தப்பட்டு 20 மாநிலங்களில் 1-4-2005 முதல் அமல் செய்ய ஒப்புக்கொண்ட நிலையில், தமிழ்நாடு அரசு மட்டும் இன்றைக்கு அனைத்து அரசியல் கட்சிகளுடைய ஒத்துழைப்போடு நிறைவேற்றுவோம் என்று கூறிக்கொண்டிருக்கிறீர்கள். இதிலே அரசு முதலிலே, நீங்கள் உங்களுடைய கருத்தை, VAT system-ஐ நீங்கள் அறிமுகப்படுத்துகிறீர்களா, இல்லையா என்பதை மட்டும் மக்கள் மத்தியிலே— எதிர்க்கட்சிகளுடைய கருத்து எதுவாக இருந்தாலும் இன்றைக்குப் பல்வேறு எதிர்க்கட்சிகளுடைய குரல்களை நீங்கள், வீராணம் திட்டம் உட்பட அனைத்தும் நாங்கள் இன்றைக்கு எங்களுடைய எதிர்பார்ப்பு இல்லாமல்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, VAT என்பது தமிழகத்தினுடைய எதிர்கால ஒட்டுமொத்த வருமானத்தைப் பொறுத்தது. VAT நடைமுறைக்கு வந்துவிட்டால், பிறகு வரி உயர்வு என்பதையே நாம் எந்தக் காலத்திலும் போட முடியாது. வளர்ச்சித் திட்டங்களுக்குப் பணம் கிடைக்காது. எதிர்காலத் தமிழகத்தின் நலன் கருதி, அனைத்துக் கட்சிகளுடைய ஒற்றுமையோடு, ஒத்த உணர்வோடு, இணக்கமாக இதை நடைமுறைப்படுத்துகிறபோதுதான் இதில் வெற்றி பெற முடியும். அதற்காகத்தான் அதை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூன்று நிமிடங்களில் பேசி முடித்துவிடுங்கள்.



**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படியென்றால் நீங்கள் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, அனைத்துக் கட்சித் தலைவர்கள் மத்தியிலே முதலிலே VAT சம்பந்தமாக நீங்கள் ஒரு ஒத்த கருத்தை...

பிற்பகல் 1-20

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்றை மாண்புமிகு மைய நிதி அமைச்சர் சிதம்பரம் அவர்களே கூட்டினார். அதை நீங்கள் boycott செய்துவிட்டீர்கள். பலர் அதிலே வரவில்லை. C.P.M. மட்டும்தான் வந்தது. அதனால்தான் இந்த நிலையை அரசு எடுத்து இருக்கிறது.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் அகில இந்திய அளவில் சொல்லவில்லை. தமிழ்நாட்டில் VAT-ஐ அமல்படுத்தவேண்டுமென்றால், தமிழ்நாட்டிலே இருக்கின்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தை, தமிழக அரசு ஏற்பாடு செய்து, அனைத்துக் கட்சியினுடைய ஒருமித்த கருத்தை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசும், மைய அரசும், VAT Committee எல்லாம் இணைந்து Le Meridien Hotel-ல் இங்குதான் அந்தக் கூட்டம் நடந்தது. நானும் அதில் கலந்துகொண்டேன்.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. 2005-2006 கொள்கை விளக்கக் குறிப்பில், பக்கம் 7 மற்றும் 8-ல், சட்டவாரியான, நடப்பு மற்றும் கடந்த நான்கு ஆண்டுகளில் வருவாய் என்ற தலைப்பில் வருவாய் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் பக்கம் 8-ல், இனம் 3-ல் கேளிக்கை வரிச் சட்டம்மூலம் வருவாய் 2000-2001 ஆம் ஆண்டு தொடங்கி கடந்த 5 ஆண்டுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் கேளிக்கை வரிச் சட்டம் வாயிலாக வருவாய் முறையே ரூ.74 கோடி, ரூ.68 கோடி, ரூ.71 கோடி, ரூ.75 கோடி, ரூ.55 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

பக்கம் 9-ல், கேளிக்கை வரி விகிதங்கள் குறைக்கப்பட்டன எனச் சொல்லப்பட்டுள்ளது. திரைப்படக் கொட்டகை சங்கத்தின் உரிமையாளர்கள், ஒரு சீட்டுக்கு 1 ரூபாய், 2 ரூபாய் என பராமரிப்புக் கட்டணம் வசூலித்துக் கொள்ளலாம் என ஆணையிடப்பட்டு

சொல்லப்படவில்லை. இப்படிப்பட்ட கேளிக்கை வரிக் குறைப்பு... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 2 மணித்துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. மு. கார்த்தி:** புதிய பராமரிப்புக் கட்டணம் விதித்தல் ஆகியவற்றால் பொது மக்களுக்கு என்ன நன்மை? திரையரங்குகளில் நுழைவுக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதா? ஓர் இருக்கைக்கு எவ்வளவு ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது? இதற்கு மாறாக, திரையரங்கு உரிமைதாரர்கள் பெற்ற இலாபம் என்ன? இந்த அரசு அடைந்த இழப்பு என்ன? அரசின் வருவாயில் 20 கோடி ரூபாய் இழப்பு என்பதுதான் உண்மை. இதனால், உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் பங்குத் தொகை பாதிக்கப்பட்டுள்ளது என்பதுதான் உண்மை.

2005–2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு, பக்கம் 1–ல் குறிப்பிட்டுள்ளீர்கள். 2003–2004–ல் 107 கோடி ரூபாய், 2004–2005–ல் திருத்திய மதிப்பீடு 60 கோடி ரூபாய், 2005–2006 திட்ட மதிப்பீட்டில் 50 கோடி ரூபாய் எனவும் கூறப்பட்டுள்ளது. இதில் 90 சதவிகிதம் உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிடைக்க வேண்டிய தொகை. 2003–2004–ல் 96 கோடி ரூபாய், 2004–2005–ல் 54 கோடி ரூபாய், 2005–2006–ல் 45 கோடி ரூபாய் எனக் குறைந்துகொண்டே வருகிறது. ஒரு பக்கம், பொது மக்களுக்கு திரையரங்குகளில் அனுமதிக் கட்டணத்தில் குறைப்பு இல்லை. மறு பக்கம், உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் இழப்பு. ஆக இந்த அரசின் கொள்கை என்ன என்பதற்கு இது எடுத்துக்காட்டாக இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம், பக்கம் 9–ல், தமிழகத் துறைமுகங்கள் வழியாக வந்து செல்லும் வெளிநாட்டுக் கப்பல்களுக்குப் பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்களால் விற்கப்படும் உயர் வேக டீசல் மதிப்புக் கூட்டு வரி 29–12–2004 முதல் 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டு உள்ளது. இதனால் தமிழ்நாடு அரசுக்கு என்ன இலாபம் அல்லது என்ன நஷ்டம்? இதனால் இலாபம் பெறுபவர்கள் வெளிநாட்டுக் கப்பல் உரிமையாளர்களா, அல்லது அரசுக்குச் சொந்தமான பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்களா என்பதை...



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்தக் கப்பல்கள் அதிகமாக இருக்கிற காரணத்தினால், பிற மாநிலத் துறைமுகங்களுக்கு, அங்கு சென்றுவிடுகின்றன. குறைக்கின்றபோது அந்தக் கப்பல்கள் எல்லாம் நமது மாநிலத்திலேயே அந்த எரிபொருளை எடுத்துக்கொள்கிறபோது வருவாய் பெருகும். அந்தக் கணக்கில்தான் இது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி, ஒரு மணித்துளியில் முடித்துக்கொள்ளுங்கள். இன்னும் இரண்டு பேர் பேசவேண்டும். அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. மு. கார்த்தி:** அதேபோல, தங்க ஆபரணங்கள்மீது விதிக்கப்பட்டிருந்த ஒரு விழுக்காடு ஆடம்பர வரி 29–12–2004 முதல் ரத்துச் செய்யப்பட்டதால் அரசுக்கு என்ன இலாபம், என்ன நஷ்டம் என்பதை நீங்கள் இங்கே தெரிவிக்க வேண்டும். அதேபோல, ஆடம்பர வரி என்பது பெரும் பணக்காரர்கள்மீது அவர்கள் செய்யும் செலவினங்கள்மீது விதிக்கப்பட்ட வரிதானே? இதனைக் குறைப்பதால் இந்த அரசு யாருக்கோ சாதகமாகச் செயல்பட்டு வருகிறது என்பதை அடையாளம் காட்டத்தான் என இது தெரிகிறது.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளி, தங்கம்மீதான ஆடம்பர வரியை, யாருக்கோ இலாபம் தேடுவதற்காகக் குறைத்ததாக இங்கு ஒரு தவறான குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றார்கள். அந்தத் தங்கம், வெள்ளி, ஏழை எளிய மக்கள் வாங்குகின்ற, தங்களுடைய திருமணத்திற்காக வாங்குகின்ற மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, சிறிய ஏழை மக்கள் வாங்கவேண்டும் என்பதற்காக அந்த ஆடம்பர வரியைத்தான் குறைத்து இருக்கின்றோமே தவிர, யாரும் ஆதாயம் அடைவதற்கு என்பதல்ல. ஏழை மக்களுடைய நன்மைக்காக அந்த வரி விலக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தவறான ஒரு குற்றச்சாட்டை இங்கே சொல்லவேண்டாம் என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

**திரு. மு. கார்த்தி:** என்னுடைய தொகுதி குறித்து ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு இடத் தேர்வுப் பணிகள் தற்போது நடந்து

கொண்டிருக்கின்றன. இது சம்பந்தமாக நம்முடைய பொதுப் பணித் துறை மற்றும் நிதி அமைச்சரிடம் கேட்டிருக்கிறேன். சேலம் மாநகராட்சிப் பகுதி, ஏற்காடு மெயின் ரோட்டில் உள்ள T.S. No.1-ல் சேலம் மாவட்ட ஆட்சியர் இல்லப் பகுதியில் சுமார் 30 ஏக்கர் பரப்பளவில் நிலம் உள்ளது. அந்த நிலத்தை...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கை ஏற்கெனவே என்னிடம் தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கலந்து, அதுகுறித்து தக்க நடவடிக்கை எடுக்க அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கார்த்தி, முடித்துவிடுங்கள். திரு. நன்மாறன்.

*பிற்பகல் 1-25*

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டிலே அந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டும்போது, அதை முடிந்த அளவுக்கு மாவட்ட ஆட்சியர் இல்லப் பகுதியிலே கட்டினால், கண்டிப்பாக அனைத்தும் ஒரே பகுதியிலே அமைந்து, மக்களுக்கு ஏதுவாக இருக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே சேலம் மாநகராட்சியில்தான் இதுவரையில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படாமல் உள்ளது. அரசு இந்த நிதியாண்டில் நிதியை ஒதுக்கியிருக்கிறது. ஆனால் அதற்கு இடம் தேர்வு செய்வதிலே சேலம் மாநகராட்சிக்கும், வருவாய்த் துறைக்கும் சில பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே உடனடியாக இந்த அரசு இதில் தலையிட்டு, சேலம் மாநகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உடனடியாக நீங்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக இரண்டே இரண்டு கோரிக்கைகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. மற்ற கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். திரு. என். நன்மாறன். (குறுக்கீடு) மற்றவற்றை எழுதிக் கொடுத்துவிடுங்கள். இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும், அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். நேரம் முடியப் போகிறது. (குறுக்கீடு)



**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சியில் மிட்டா அய்யம்பெருமாள்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்காக 1980 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. சென்ற நிதியாண்டிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிலங்களை எல்லாம், நிர்வாகச் செலவுகளைப் பெற்றுக்கொண்டு திருப்பி ஒப்படைப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் உள்ளது. இதனாலே 20 ஆண்டு காலத்திற்கு மேலாக, அந்த நிலங்களைக் கொடுத்துவிட்ட அந்த விவசாயப் பெருமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்களால் அதை விற்கவும் முடியவில்லை, அவர்களால் வங்கிகளில் கடன் பெறவும் முடியவில்லை. ஆகவே அரசு உடனடியாகத் தலையிட்டு, அரசு அறிவித்ததுபோல, அந்த நிர்வாகச் செலவைப் பெற்றுக்கொண்டு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் நிலங்களைக் கையகப்படுத்தி 20 ஆண்டுகளாகியும், தன் சுவாதீனத்தில் இல்லாத இடங்களை உடனடியாகக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

இறுதியாக, சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலப் பகுதியில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பது கடந்த 6 ஆண்டு காலமாக நிலுவையில் உள்ளது. அந்தப் பகுதியில் இன்றைக்கு மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. சிறைச்சாலைக்குச் சொந்தமான இடம் அனுமதிக்காக அரசிடம் கோப்பு நிலுவையில் உள்ளது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்தி, அந்தத் துணை மின் நிலையம் அமைவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினைத் தந்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு வழங்கியமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் முன்னுரை துவங்கும்போதே, மாநில வருவாய் குறித்து ஒரு விவரத்தைத் தெரிவித்திருக்கிறது. துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் கடின உழைப்பின்மூலம் இத்துறையின் வருவாய் சிறப்பாக, குறிப்பிடத்தக்க அளவில் 18.40 விழுக்காடு வளர்ச்சி கண்டுள்ளது, 2001-2002-ல் மொத்த வருவாய் ரூபாய் 8,905 கோடியாக இருந்தது, இப்போது இந்த ஆண்டின் முதல் 11 மாதங்களில் மட்டும்,

பிப்ரவரி 2005 வரை ரூபாய் 12,575 கோடி என ஏற்றம் கண்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. துறை அலுவலர்கள், பணியாளர்களுடைய கடின உழைப்பு என்று ஏற்றுக்கொண்டதற்கு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அதே சமயத்தில், 1,500 பணியிடங்கள் அதிலே நிரப்பப்படாமல் உள்ளன. ஆணையர், இணை ஆணையர் உட்பட ஏராளமான பணியிடங்கள் காலியாக இருப்பதைப் பூர்த்தி செய்தால், மேலும் வரி வருவாய்க்கு அது உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, வணிக வரித் துறையின் ஏராளமான அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. அரசுக்கு இடம் இருந்தாலும்கூட, அரசு இடங்களில் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு உரிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலையில் சில அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அது தமிழகம் முழுவதற்கும் சொந்தக் கட்டடம் என்கிற முறையிலே அமைவது உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவிக்கிறேன்.

வரி செலுத்துவதற்கு வணிகர்கள் வந்தால், அவர்கள் உட்காருவதற்குக்கூட இடம் கிடையாது. அவர்களுடைய இயற்கை உபாதைகளுக்கும் இடம் கிடையாது. ஆகவே வணிகர்கள் வருகிறபோது, அவர்கள் அமர்வதற்கு உரிய வசதியைச் செய்து தரவேண்டும். அதற்கான furnitures, மரச் சாமான்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் சுகாதார வசதி செய்யப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, வணிக வரித் துறை அலுவலகங்களில் கணினி உண்டு. ஆனால் ஊழியர்களுக்கான பயிற்சி என்பது போதிய அளவுக்கு இல்லை. எனவே கணினிமயமாக்குகிற அதே நேரத்தில், ஊழியர்களுக்கான பயிற்சியையும் முறைப்படுத்த வேண்டும், கூடுதல் நாட்கள் பயிற்சி இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. என். நன்மாறன்:** இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 8–ல், 'வருவாயும் செலவும்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.



2000–2001 ஆம் ஆண்டின் வருவாய் 8,664 கோடி ரூபாய். செலவின விழுக்காடு 1.14 சதவீதம். அதே சமயத்திலே 2004–2005 ஆம் ஆண்டு ஜனவரி முடிய வருவாய் ரூ.11,351 கோடி. செலவின விழுக்காடு 0.80 சதவீதம். எனவே, இதில் நிர்வாகச் செலவு என்பது மிக, மிகக் குறைந்து வருவதைச் சுட்டிக்காட்டி, இந்த இடைவெளி போக்கப்பட வேண்டுமென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, VAT வரி குறித்து அனைத்து உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். தமிழ்நாடு தொழில் வர்த்தகச் சங்கத்தினர் மதுரையிலிருந்து ஒரு மனுவை அனுப்பியிருக்கிறார்கள். அதிலே ஒன்றைக் கூறியிருக்கிறார்கள். அதிலே மாண்புமிகு நிதிஅமைச்சர் அவர்களுடைய பெருமையைப் பற்றியும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மதிப்புக் கூட்டு வரியினுடைய மேற்கண்ட நன்மைகளைப் பற்றியும், சிறு வணிகர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் குறித்தும் பல்வேறு விவரங்களை மிகத் தெளிவாக தமது பட்ஜெட் உரையில் குறிப்பிட்ட நிதிஅமைச்சர் அவர்கள், மிகச் சிறந்த வரிச் சீர்திருத்தம் என்று குறிப்பிட்டார்கள். மதிப்புக் கூட்டு வரி முறைக்கான சட்டமுன்வடிவை சட்டமன்றத்தில் தாக்கல் செய்யாதது மிகவும் ஏமாற்றமாக உள்ளது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

கேரளா, ஆந்திரா, கர்நாடகா, பாண்டிச்சேரி ஆகிய நமது அண்டை மாநிலங்கள் உட்பட, 21 மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் மதிப்புக் கூட்டு வரி முறையை அமலாக்க உறுதி செய்யப்பட்டுவிட்டது. மதிப்புக் கூட்டு வரி விதிப்பு முறையை அண்டை மாநிலங்களில் அமல்படுத்தும் சூழ்நிலையில், நம் மாநிலம் மட்டும் நிறைவேற்றாமல் தனித்து நின்றால், அண்டை மாநிலங்களில் VAT வரி முறையில் பொருட்களுக்குக் குறைந்த வரி விகிதம் விதிக்கப்படும் காரணத்தினால், நம் மாநிலத் தொழில் வணிகம் அம்மாநிலங்களுக்குச் சென்றுவிடும் அபாயம்—அதாவது, diversion of trade—இருக்கிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இதை நான் அவையின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகம் தனித் தீவாக மாறிவிட வேண்டாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தணிக்கைச் சாவடிகள். அதனுடைய எண்ணிக்கை விரிவாக்கப்பட வேண்டும். ஏற்கெனவே இருந்து, இயங்கி, மூடப்பட்ட தணிக்கைச் சாவடிகள் மீண்டும் திறக்கப்பட வேண்டும்.

ஒருங்கிணைந்த சாவடி. அதற்கான அறிவிப்பு இருக்கிறது. அது விரைவில் உருவாக்கப்பட வேண்டுமென்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வரி வசூலில் ஈடுபடக்கூடிய அதிகாரிகள், ஊழியர்களுக்குச் சில இடங்களில் துன்பம் ஏற்படுகிறது. போதிய பாதுகாப்புத் தேவை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

வரி மேல்முறையீடு என்கிற பெயரில் மேல்முறையீடு செய்யப்பட்டு, ஏராளமான வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. அவற்றை விரைவில் பைசல் செய்வதற்கு, நீதித் துறையில் விரைவு நீதிமன்றம் இருப்பதைப்போல, இதிலேயும் விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கு உரிய வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வணிகர் நல வாரியம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த வணிகர்கள் பாதுகாக்கப்படுகிற அதே வேளையில், வணிகத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர் பாதுகாப்பிற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை, நான்கு மாசி வீதிகளிலும், ஏராளமான வணிகத் தெருக்களிலும் உள்ள நிறுவனங்களில் ஏராளமான இளைஞர்கள் ஊழியர்களாக இருக்கிறார்கள். வணிகத் தொழிலாளர் நல வாரியம் அமைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பயறு, பருப்பு வகைகளிலிருந்து பெறப்படுகிற மாவு வகைகளுக்கு 2 per cent வரி விதிப்பு இருக்கிறது. அதற்கு வரி விலக்கு அளிக்க வேண்டும்.

வீடு கட்டத் தேவையான மணல், செங்கல், கருங்கல்மீதான வரியை ரத்துச் செய்ய வேண்டும்.

சிட்டா நூலுக்கு விதிக்கப்படுகிற 2 per cent வரியை ரத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வரி ஏய்ப்பு என்கிற வகையில், குமரி மாவட்டத்திலிருந்து இரப்பர் பிற மாநிலங்களுக்குக் கடத்தப்பட்டு, அதன் விளைவாக 10 கோடி ரூபாய் வரையிலும் ஆண்டுதோறும் இழப்பு ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதிலேயும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



வரி வசூல் செய்வதில் வணிக வரித் துறை ஊழியர் சங்கங்களோடு கலந்து பேசி, அவர்களுடைய ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டு, இதிலே குறிப்பிலே இருக்கிற ஆலோசனைக் குழு என்கிற அந்தத் தலைப்பின்கீழ் சங்க நிர்வாகிகளுடைய ஆலோசனைகளையும் பெற வேண்டுமென்பதையும் இணைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

முக்கியமான முடிவுகள் எடுக்கப்படுகிறபோது, வணிகர் சங்கங்களுடைய தலைவர்களையும் அழைத்துப் பேசுவது உறுதுணையாக இருக்கும் என்று தெரிவிக்கிறேன்.

அதே நேரத்திலே, வணிக வரியை முறையாகச் செலுத்துகிறவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்து, இச்செயலை ஊக்கப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். திரையரங்குகளில் அண்மைக் காலமாக, சில முக்கியமான படங்கள் வருகிறபோது, அதிலே தாள்களிலே இருக்கக்கூடிய தொகை ஒன்றாக இருக்கிறது. இவர்கள் ஒரு seal அடிக்கிறார்கள், வேறு ஒரு தொகை வாங்குகிறார்கள் என்று பெரிய புகார் வருகிறது. ஆகவே, சம்பந்தப்பட்ட திரையரங்குகளில் raid நடத்தி, இந்த முறையை ஒழுங்கமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நாட்டின் வரி வருவாயைப் பெருக்குகிற வணிக வரித் துறை பாதுகாக்கப்பட வேண்டும். ஊழியர் நலன்கள் பேணப்பட வேண்டும். வரி வருவாய் பெருகி, வளம் பெருக உரிய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு, விடைபெறுகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரிகள் மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். ஒரு அரசினுடைய முக்கிய வருவாயாக விளங்குகின்ற வணிக வரி கடந்த, முடிந்த ஆண்டில் கிட்டத்தட்ட 68 சதவிகிதம் வசூலிக்கப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்று அவையிலே அறிவித்தார்கள். ரூ.13,907 கோடி அளவிற்கு வணிக வரி வசூலில் சாதனை படைத்திருக்கின்றோம் என்று இங்கு அறிவித்தார்கள். ஆனால், அவ்வாறு அந்தத் துறையில் பணிபுரிகின்ற அந்த ஊழியர்கள், போதிய ஊழியர்கள் இல்லாமல், ஒரு ஊழியர், இரண்டு, மூன்று ஊழியர்களுக்கு

இணையான வேலைப் பளுவுடன் இருக்கின்ற சூழ்நிலையில், இந்த வரி வசூல் சாதனையை அவர்கள் புரிந்திருக்கின்றார்கள்.

ஆகவே, அரசு பொதுவாக அனைத்துத் துறைகளிலும் வேலை நியமனத் தடைச் சட்டத்தை ரத்துச் செய்து, இதுபோன்ற வருவாயை ஈட்டுகின்ற இந்தத் துறைகளிலே போதிய ஊழியர்களை நியமிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்த மாதிரி ஊழியர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதன்மூலமாக, வரி வருவாயைப் பெருக்குவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படும். அதை அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வசூலிக்கப்பட வேண்டிய நிலுவையில் உள்ள வரிகளை வசூலிக்க அரசு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மதிப்புக் கூட்டு வரியைப் பொறுத்தமட்டிலும், இன்று கிட்டத்தட்ட 20 மாநிலங்களில், பல்வேறு மாநிலங்களில் எதிர்ப்புகள் இருந்தாலும்கூட, இன்று அமலாக்கப்பட்டிருக்கின்றது. 2005–2006 ஆண்டுகளில் 100 சதவிகிதம், அதேபோல 2006–2007–ல் 75 சதவிகிதம், 2007–2008–ல் 50 சதவிகிதம் வருவாய் இழப்பை ஈடு செய்யும் அடிப்படையில் 1–4–2005 முதல் மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்த மத்திய அரசு தீர்மானித்துள்ளது.

தமிழக அரசைப் பொறுத்தமட்டிலும், மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்த அரசு அனைத்துத் தரப்பு வணிகர்களையும் அழைத்து, அதேபோல, சர்வ கட்சிகள் அடங்கிய தலைவர்களை அழைத்துப் பேசி, ஒரு கருத்தொற்றுமையை உருவாக்குவதன்மூலமாக தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பெரும் பகுதியான விவசாயிகள் வாழ்நாள் முழுவதும், ஒன்று வறட்சியினால் பாதிப்புக்குள்ளாகின்றார்கள்; அல்லது பெருவாரியான மழை பெய்வதன் காரணமாக, விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது. அந்த விவசாயிகள் பயன்படும்வண்ணம், வேளாண்மை இடுபொருட்களுக்கு விதிக்கப்படுகின்ற விற்பனை வரி என்பது முழுவதுமாக ரத்துச் செய்யப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, நெசவாளர்கள் பயன்பெறுகின்ற வகையில் சிட்டா நூலுக்கு விதிக்கப்படுகின்ற அந்த விற்பனை வரி 2 சதவிகிதத்தை ரத்துச் செய்ய வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இங்கு நான் வைக்கின்றேன்.



பிற்பகல் 1–40

அதேபோல, தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் பயன்படுத்தக்கூடிய பேப்பர் பைகளுக்கான வரியை முழுமையாக ரத்துச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, குறிப்பிட்ட ஒரு சில கூட்டுறவுச் சங்கங்கள், பொதுவாக விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன என்ற ஒரு நியதி இருந்தாலும்கூட, எட்டையபுரத்தில் இயங்குகின்ற பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், 1986 ஆம் ஆண்டு முதல் ஒரு தேநீர் விடுதியை நடத்தி, அந்தத் தேநீர் விடுதியில் நுகர்வோர்களுக்கு தரமான பால், டீ, பால்பேடா போன்ற பொருட்களை விற்பனை செய்கின்றார்கள். நுகர்வோர்கள் பயன்பெறுகின்ற அந்தத் தேநீர் விடுதியில் 1996–97 ஆண்டுகளிலிருந்து வருமான வரி என்ற அடிப்படையிலே, விற்பனை வரி விதிக்கப்பட்டிருக்கின்றது. அந்த விற்பனை வரியை--கூட்டுறவுச் சங்கங்களுக்கு முழுமையாக விதிவிலக்கு இருக்கின்றது என்ற அடிப்படையில், அரசு போதிய நடவடிக்கை எடுப்பதன்மூலம் அந்த விற்பனை வரியை ரத்துச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, விற்பனை வரிக்குப் போடப்படுகின்ற அபராத வட்டி என்பது, அந்த விற்பனை வரிக்கு மேலாக இரண்டு மடங்கு விதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. ஆகையால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, அதிலும் குறிப்பாக, பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு இந்த வரி விலக்கு அளிக்க அரசு தேவையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, சில பிரச்சினைகள் என்னவென்றால், கடந்த ஒரு வாரம் தென் பகுதியில் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் ஓடுகின்ற தாமிரபரணி ஆற்றில், அந்தப் பகுதியிலிருந்து எடுக்கப்படுகின்ற குடிதண்ணீர் நான்கு மாவட்டங்களுக்குப் பயன்படும்வண்ணம்— நெல்லை, தூத்துக்குடி, இராமநாதபுரம், விருதுநகர் போன்ற மாவட்டங்களில் பயன்படும்வண்ணம்—அந்த ஆற்றிலே குடிநீர் எடுக்கப்படுகின்றது. அந்த ஆற்றின் அருகில் உள்ள கங்கைகொண்டான் பகுதியில் அமையவிருக்கின்ற SIPCOT வளாகத்திற்கு, நாள் ஒன்றிற்கு 45 இலட்சம் லிட்டர் தண்ணீர் எடுப்பதற்காக, ஆழ்குழாய்கள் மூலமாக எடுப்பதற்காக அனுமதி அளித்திருக்கின்ற சூழ்நிலையில், அந்த SIPCOT வளாகத்தில் அயல்நாட்டுக் கம்பெனி குடிநீர் விற்பனை, அதாவது பாக்கெட் விற்பனையை நடத்துவதற்காக அயல்நாட்டு குளிர்பானக் கம்பெனிக்கு

தினந்தோறும் 5 இலட்சம் லிட்டர் அனுமதி அளித்து, உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக நான் அறிகின்றேன். அது சம்பந்தமாக, அந்தப் பகுதியிலே கடந்த வாரம்கூட மக்கள் எல்லாம் போராடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்தக் குடிநீர்ப் பிரச்சினை என்பதும், அந்தத் தென் பகுதியிலுள்ள பல்வேறு மாவட்டங்களுக்குப் பயன்படுகிற வகையிலேதான் இதை...

*__மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கங்கைகொண்டான் SIPCOT வளாகத்தில் அமைந்திருக்கின்ற Coca Cola கம்பெனிக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. வெகுநாட்களாக அந்தத் தொழிற்பேட்டை அமைக்கப்பட்டும், அந்த இடத்தில், ஆலங்குளம் தொகுதியில் இருக்கின்ற கங்கைகொண்டான் பகுதியில் தொழிற்சாலைகளே வராமல் இருந்த சூழ்நிலைகளெல்லாம் மாறி, அதனுடைய விற்கக்கூடிய rate— விலையை இப்பொழுது தளர்த்தி, யாரேனும் வரவேண்டும் என்பதற்காக விலையைத் தளர்த்தி, Coca Cola கம்பெனிக்குத் கொடுக்கப்பட்டிருக்கிறது. தண்ணீருக்கும் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அங்கு தண்ணீர் கொடுப்பதனால், அந்தப் பகுதியில் இருக்கின்ற எந்த கிராமங்களுக்கும் குடிநீர்ப் பிரச்சினை இதுவரைக்கும் ஏற்படவில்லை, இனிமேலும் ஏற்படாது என்ற உத்தரவாதத்தின் அடிப்படையிலேதான் அந்தக் கம்பெனிக்கு, அந்தத் தண்ணீருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைக் கூறியிருக்கின்றார்கள். ஆனால் குறிப்பாக, அந்தப் பகுதியிலே இருக்கின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் இப்பொழுது தண்ணீர் பல்வேறு பகுதிகளுக்குக் குறைவாக supply செய்யக்கூடிய நிலை இருக்கின்றது. அதைப்போல, அரசின் சார்பாக அறிவிக்கப்பட்ட திட்டங்கள், சங்கரன்கோவில்–மானூர்–குருவிகுளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், கயத்தாறு–கழுகுமலை–எட்டயபுரம் போன்ற கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுவதற்கான அந்தப் பணிகளெல்லாம் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நிலத்தடி நீர் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையைத்தான் நான் இங்கு வைத்திருக்கின்றேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன், இரண்டு மணித்துளிகளில் முடித்துவிடுங்கள். மற்ற கோரிக்கைகள் இருந்தால் எழுதிக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு)



**திரு. சோ. இராசேந்திரன்:** SIPCOT நிர்வாகம் தொழில் தொடங்குவதற்காக, தொழில் துறையில் வளர்ச்சி ஏற்படுத்துவதற்காக அரசு அறிவித்திருந்தாலும்கூட, அந்தத் தண்ணீர்ப் பிரச்சினையைப் போக்க ஓரளவு நிலத்தடி நீர் பாதுகாக்கப்படவேண்டும் என்பதால்தான் நான் இந்தக் கோரிக்கையை வைக்கின்றேன். அதைப்போல, கோவில்பட்டியில் கட்டப்படுகின்ற இரண்டு இரயில்வே மேம்பாலங்கள். அதன் பயனாக, இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்காக, போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக, தற்காலிகமாக ஒரு பஸ் நிலையம்--அந்தப் பகுதியிலே நகருக்குத் தொடர்பில்லாத மூன்று கிலோ மீட்டருக்கு அப்பாற்பட்டு ஒரு தற்காலிக பஸ் நிலையம்--இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதன் தொடர்ச்சியாக, தற்காலிக பஸ் நிலையத்திற்கு, கோவில்பட்டிக்கு வருகின்ற அனைத்துப் பேருந்துகளும் மாற்றியதன் அடிப்படையில், கோவில்பட்டியில் வாழ்கின்ற மக்கள் வெளியூர்களுக்குப் பிரயாணம் செய்வதற்குத் தேவையான வசதி இல்லாத சூழ்நிலை அங்கே நிலவுகின்றது. மேலும், தற்காலிக பஸ் நிலையம் செயல்படுகின்ற சூழ்நிலையில் அதை நிரந்தரமாக்குவதற்கான ஒரு முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்ற தகவல்களெல்லாம் வருகின்றன. ஆனால், மேம்பாலங்கள் முடிக்கப்பட்ட பின்பு, போக்குவரத்து நெரிசல் என்பது முற்றிலுமாக அங்கு தவிர்க்கப்படும் என்பதை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் மற்ற பிரச்சினைகளை எல்லாம் நீங்கள் எழுதிக் கொடுத்துவிடலாம். முடித்துவிடுங்கள். வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

**திரு. சோ. இராசேந்திரன்:** கூறிக்கொண்டு, அந்த மேம்பாலப் பணிகளைத் துரிதமாக நடத்துவதன்மூலமாக, மேம்பாலப் பணிகள் முடிவடைந்த பின்பு, போக்குவரத்து நெரிசல் என்பது கோவில்பட்டி நகரிலே வராத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், இதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, எட்டயபுரத்தை ஒரு சுற்றுலாத் தலமாக அறிவிக்கவேண்டுமென்ற ஒரு கோரிக்கையை நான் தொடர்ந்து வலிறுத்திக் கொண்டிருக்கின்றேன்...

பிற்பகல் 1–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவற்றையெல்லாம் மற்ற நேரங்களில் பேசலாம். அவற்றை எழுதிக்கொடுங்கள். (குறுக்கீடு) மற்ற நேரங்களில் பேசலாம்.

**திரு. சோ. இராசேந்திரன்:** பேச்சை முடித்துவிடுகிறேன். சுற்றுலாத்தலமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னையும், என் குடும்பத்தையும் வாழ வைத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மாவினுடைய பாதம் பணிந்து, இந்த வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி, இந்த உரையை ஆரம்பிக்கின்றேன்.

தூய உள்ளம், அன்புள்ளம், பெரிய உள்ளம், உலக மக்கள் எல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, இதுவரை எந்த அரசும் எட்டாத சாதனையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு சாதித்திருக்கின்றது. வானமும், காவிரியும் வறண்டு போனதால், விவசாயம் நின்று போனது. இயற்கையின் சீற்றம், சுனாமி என்று தமிழ்நாட்டிற்குத் தொடர்ந்து சோதனைகள் வந்தன. புதிய வரிகள் இல்லை, பழைய வரிகளை வசூலிக்கவும் சிக்கல். இத்தகைய சோதனையிலும் சாதனை படைத்திருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைச் (மேசையைத் தட்டும் ஒலி) சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் வணிக வரித் துறை குறிப்பிட்ட இலக்கினை அடைந்ததோடு நிற்கவில்லை. இலக்கினைக் கடந்தும் சென்று சாதனை படைத்திருக்கின்றது. வணிக வரித் துறையில் இப்படி ஒரு சாதனை இதற்கு முன்பு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, 1993 ஆம் ஆண்டில்தான் நடந்திருக்கின்றது. அதுவும், அதற்குப் பின் வந்த அரசால் இதை எட்ட முடியவில்லை. ஆனால் தனது முந்தைய சாதனையையும் தானே முறியடித்து, புதிய சாதனையை மீண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுதான் படைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாநில அரசின் வருவாயில் ஏறத்தாழ 68 விழுக்காடுகள் ஈட்டித் தருவது வணிக வரித் துறை. இந்த நிதியாண்டில் வரி வருவாய், 31-3-2005 வரை, முன் எப்போதும் இருந்திராத அளவில் ரூ.13,907 கோடியை எட்டியுள்ளது. இதுவரை எந்தக் காலத்திலும் வரி வருவாய்



இந்த அளவிற்கு இருந்ததில்லை என்பதை இந்த மாமன்றத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது சென்ற ஆண்டைக் காட்டிலும் 18.29 விழுக்காடு உயர்வு என்பது மட்டுமல்ல, இவ்வாண்டு வருவாயின் இலக்கான 13,500 கோடி ரூபாயையும் மிஞ்சி, இந்தச் சாதனையைப் படைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1995-96 ஆம் ஆண்டில் ரூபாய் 5,023 கோடியாக இருந்த வரி வருவாய் அடுத்த 4 ஆண்டுகளில், அதாவது, 1999-2000 ஆம் ஆண்டுகளில் ரூபாய் 7,381 கோடி என்ற அளவை எட்டியிருந்தது. இது சுமார் 47 சதவிகிதம் உயர்வாகும். ஆனால், 2001-2002 ஆம் ஆண்டில் 8,664 கோடியாக இருந்த வரி வசூல் 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.13,907 கோடி என்ற அளவில், (மேசையைத் தட்டும் ஒலி) 4 ஆண்டில் 61 சதவிகிதம் உயர்ந்துள்ளதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலே காரணமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த விழுக்காடு உயர்வினை மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்தி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், அவர் பேசும்போது தவறான ஒரு புள்ளிவிவரத்தைச் சொன்னார். அதாவது, திராவிட முன்னேற்றக் கழக 4 ஆண்டு ஆட்சிக் காலத்தில்தான், விழுக்காடு அதிகமாக இருந்தது என்று கூறினார்கள். அது தவறு. அவர்கள் 5 ஆண்டுக் காலத்திலே 47 சதவிகிதம் உயர்வு. ஆனால் அம்மா அவர்களின் ஆட்சியிலே 4 ஆண்டுக் காலத்தில் 61 சதவிகித உயர்வை எட்டியுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதுமட்டுமல்லாமல், இந்த ஓராண்டிலே மட்டும்— சென்ற ஆண்டுக்கும், இந்த ஓராண்டிலே, புதிய வரிகளே போடாமல் இந்த ஓராண்டிலே மட்டும்— 2,050 கோடி ரூபாய் அதிகமான வரி இன்றைக்கு வசூலிக்கப்பட்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2003-2004, 2004-2005 ஆகிய இரண்டு வருடங்களிலும் புதிய வரிகள் அல்லது வரி விகித உயர்வு ஏதும் இல்லாத நிலையிலும் இந்தச் சாதனை எட்டப்பட்டுள்ளது. புதிய வரி உயர்வு இல்லாதது மட்டுமல்ல. நுகர்வோர்களுக்கும், வணிகர்களுக்கும், தொழில் வணிகப் பெருக்கத்திற்கும், முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும் பல்வேறு வரிச் சலுகைகளை வழங்கிய பின்னரும் இந்த அளவிற்கு வரி வசூலிலே சாதனை அடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாமல், உயர் நீதிமன்றத்திலே பல்லாயிரக்கணக்கான வரி வழக்குகள் தேங்கி நிற்கும் நிலை. அவ்வழக்குகளில் சிக்கி, பல நூறு கோடி ரூபாய் வரி வசூல் செய்யப்படாமல் இருப்பதை உணர்ந்து,

எதிர்காலத்தில் வணிகர்களுக்கு ஏற்படக்கூடிய தண்டம் மற்றும் வட்டி ஆகிய பிரச்சினைகளைத் தீர்க்க ஓர் ஏற்பாடாக, 1995 ஆம் வருடம் உயர் நீதிமன்றத்திற்கு இணையான அதிகாரம் பெற்ற தமிழ்நாடு வணிக வரி சிறப்புத் தீர்ப்பாயம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், அந்தத் தீர்ப்பாயத்தின் தீர்ப்பு, உயர் நீதிமன்றத்தினுடைய எல்லைக்கு உட்பட்டது என்று உச்ச நீதிமன்றத்தால் தீர்ப்பு அளிக்கப்பட்ட பிறகு, அந்தத் தீர்ப்பாயம் உருவாக்கப்பட்டதனுடைய நோக்கமே அடிபட்டதன் காரணமாக, அந்தத் தீர்ப்பாயம் இப்போது கலைக்கப்பட்டு, வரி வசூல் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–50

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையோடும், சீரிய வழிகாட்டுதலின்படியும் துறையின் செயல்பாட்டினை நவீனப்படுத்துவதற்கு கணினிமயமாக்குதல் திட்டம் 1, 2, 3 ஆகிய மூன்று நிலைகளாகத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, இரண்டு நிலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. தற்போது 3 ஆம் நிலையில் அனைத்து அலுவலகங்களிலும் கணிப்பொறி நிறுவப்பட்டுள்ளது. முழுமையான மின் ஆளுமை–e-governance, முழுமையான அம்சங்களாக மின் வழிப் பதிவு–e-Registration, மின் வழி நமூனா சமர்ப்பித்தல்–e-return filing, மின் வழி பணம் செலுத்துதல்– e-payment ஆகியவற்றை நடைமுறைப்படுத்தத் தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சுருங்கச் சொன்னால், சட்டரீதியான ஆணைகளைத் தவிர, மற்ற எல்லாப் பணிகளையும் காகிதமில்லாப் பணிகளாக மாற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. துறையின் சட்ட அறிவிக்கைகள், விதிமுறைகள், ஒவ்வொரு பொருளுக்கான வரி விகித அட்டவணை, வணிகர்கள் தாக்கல் செய்ய வேண்டிய பல்வேறு நமூனாக்களின் மாதிரிப் படிவங்கள் ஆகியவற்றை வணிகர்கள் தங்கள் கணிப்பொறிகள்மூலமாக அறிந்து உபயோகிக்க வழிமுறை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மதிப்புக் கூட்டு வரி அமைப்பினைச் செயல்படுத்துவது பற்றி இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதற்கு முன்னால் அனைத்துத் தரப்பினருடைய கருத்தொற்றுமையை உருவாக்க வேண்டியுள்ளது. அத்தகைய ஒருமித்த கருத்தை எய்துவதற்கு அம்மாவின் அரசு முயற்சித்து வருகிறது.



இத்துறையில் வரி நிலுவைகளை வசூலிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் குறித்து சில விவரங்களை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். அம்மாவின் அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, பழைய வரி நிலுவை ரூபாய் 8,871 கோடியே 2.5 இலட்சம் ஆகும். மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, துறை அலுவலர்களின் திறமையான செயல்பாட்டின்படி, வரி நிலுவை வசூலிக்கப்பட்டு, தற்போதைய நிலவரப்படி அது ரூ. 7,666 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால், இதிலே காலந்தாழ்த்தி செலுத்துகின்ற வரி, அதுவும் இந்த நிலுவை வரியில் சேர்க்கப்பட்டிருக்கிறது. Deferral Scheme—காலந்தாழ்த்தி செலுத்துகின்ற வரி கிட்டத்தட்ட 2,154.41 கோடி ரூபாயும் இதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. அதைக் கழித்தால், மீதம் உள்ள தொகை 5,511.82 கோடிதான் வரி வசூல் நிலுவையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே நீதிமன்றங்களிலே தடையாணைகளால் வசூலிக்க இயலாத நிலையில் உள்ள தொகை 1,062.27 கோடி ஆகும்.

அதுமட்டுமல்லாமல், இங்கே குறிப்பிட வேண்டியது என்னவென்றால், தங்களுடைய கடந்த 5 ஆண்டு காலத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் திறமையான நிர்வாகத்தினை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்கிற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 5 ஆண்டு காலத்திலே, அவர்கள் 2001–ல் ஆட்சிப் பொறுப்பை விட்டு இறங்கும்போது அந்த ஆண்டினுடைய வரி வருவாய் 8,664 கோடி ரூபாய் ஆகும். ஆனால் அன்றைக்கு இருந்த வரி வசூலாக வேண்டிய தொகை ரூ. 8,871 கோடி ஆகும். அதாவது ஆண்டினுடைய வருவாயைவிட, அந்த ஆண்டிற்கான வரி பாக்கி 207 கோடி ரூபாய் கூடுதலாக இருக்கின்றது. இதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியின் நிர்வாகத் திறமை. குறிப்பாக அந்த நிர்வாகத்தை அன்றைக்குத் தன் கையில் வைத்திருந்த அன்றைய முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள்தான் வணிக வரித் துறை அமைச்சராக இருந்தார். அவர்களுடைய நிர்வாகத்திலே வரி வருவாயைவிட, வரியினுடைய வசூல் பாக்கி 207 கோடி ரூபாய் கூடுதலாக இருந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-55

வணிக வரித் துறையினைக் கணினிமயமாக்குதலின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு வணிக வரி அலுவலகங்கள், தணிக்கைச் சாவடிகள், செயலாக்கப் பிரிவு அலுவலகங்கள் ஆகியவற்றிற்குக் கணிப்பொறிகள் வழங்கப்பட்டு, வணிகம் தொடர்பான தேவையான புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு உள்ளன. அத்தகவல்களைக் கொண்டு வரி ஏய்ப்புகள் பெருமளவு கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வரி ஏய்ப்புகள் தொடர்பான தகவல்கள் ஆணையரிடமே நேரடியாகச் சென்றடைய தகவல் பரிமாற்றக் குரல் பதிவு செய்யும் கருவி ஒன்று வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களால் கடந்த 20-2-2005 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் கிடைக்கப்பெறும் அனைத்துத் தகவல்கள்மீதும் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு, வரி ஏய்ப்பு பெருமளவு தடுக்கப்பட்டுள்ளது.

வணிகர்கள் நலனைப் பேணுவதற்காக மருத்துவ உதவி உள்ளிட்ட பல்வேறு உதவிகளை வழங்க வணிகர் நல வாரியம் இயங்கி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இறந்துபோன உறுப்பினர்களின் வாரிசுகளுக்குக் குடும்ப நல உதவி, உறுப்பினர்களுக்கு மருத்துவ உதவி, உறுப்பினர்களின் குழந்தைகளுக்குக் கல்வி, விளையாட்டு உதவிகள், உயர் மதிப்பெண்கள் ஊக்கத் தொகை உதவி மற்றும் ஊனமுற்ற உறுப்பினர்களுக்கு நிதியுதவி, தீ விபத்து உதவி ஆகிய பற்பல நிதியுதவிகளை வாரியம் வழங்கி வருகிறது. இதுவரை மொத்தம் 395 நலிவடைந்த உரிய வணிகர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர்.

நடப்பு நிதியாண்டில் 17 இனங்களில் வணிகர் நல உதவிக்கான காசோலைகள் விரைவில் வழங்கப்படும். வரி ஏய்ப்பு குறித்த முக்கியத் தகவல் அளிப்போருக்கு வெகுமதியும், சிறப்பாகப் பணிபுரியும் அலுவலருக்குப் பாராட்டு இதழும் மற்றும் வெகுமதி அளிக்கும் திட்டங்களும் நடைமுறைபடுத்தப்படுகின்றன.

வரி வசூலில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்குச் சாதனை படைத்துள்ள வணிக வரித் துறையின் சிறப்பான செயல்பாட்டினையும், சிறந்த நிர்வாகச் சேவையினையும் கருத்தில் கொண்டு, வணிக வரித் துறை அலுவலக வளாகத்தில் உள்ள காலியிடத்தில் புதிதாக ஒரு கட்டடம் கட்டப்படும் என்று இந்த மாமன்றத்தில் அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வணிக வரித் துறையின் சார்பாக



மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவிப்புகள்:— நிலுவையில் இருக்கின்ற வரியை வசூலிப்பதற்காக புதியதாக ஒரு சமாதானத் திட்டம் இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்படும் என்பதை அறிவிக்கின்றேன்.

வணிகர் நல வாரியம். குடும்ப நலத் திட்டம்:— வணிகர் நல வாரிய உறுப்பினர்களுக்கு இயற்கை மரணம் ஏற்படின், அவர்களது வாரிசுதாரர்களுக்கு உதவித் தொகையாகத் தற்போது ரூபாய் 20,000 வழங்கப்பட்டு வருகிறது. இதனை மாண்புமிகு அம்மா அவர்கள் ரூபாய் 50,000 ஆக உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வணிகர் நல வாரிய உறுப்பினர்களின் பிள்ளைகள் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்குத் தற்போது ரூபாய் 3,000 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதனை கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்பிற்கு ரூபாய் 5,000 ஆக உயர்த்தியும், தொழிற்கல்விப் படிப்பிற்கு ரூபாய் 10,000 ஆக உயர்த்தியும் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வணிகர் நல வாரிய உறுப்பினர்களுக்கு இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரகப் பாதிப்பு மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சைக்காகத் தற்போது வழங்கப்படும் ரூபாய் 25,000-ஐ ரூபாய் 50,000 ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நலிவுற்ற வியாபாரிகள் என்ற உதவி கோரும் வாரிய உறுப்பினருக்கு, மிகவும் பின்தங்கிய மாவட்டமான திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்ட நகரங்களில் மட்டும் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. இதை, தமிழகம் முழுவதும் இருக்கின்ற நலிவுற்ற வியாபாரிகளுக்கு ரூபாய் 10,000 வழங்கலாம் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற அந்த வெட்டுத் தீர்மானங்களை அம்மாவினுடைய அரசு சிந்திக்கும்; அதைச் செயல்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(இ) கோரிக்கை எண் 10—வணிக வரித் துறை—வணிக வரிகள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 10 – வணிக வரித் துறை–வணிக வரிகள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. அ.இரா. மலையப்பசாமி. (குறுக்கீடு)

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளைக்குப் பேசுங்கள். கல்வி அமைச்சர்தான் இதற்கும்.

திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை. திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை. டாக்டர் ஆர். கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.





**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை. திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர்., ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை. திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே.வி. முரளிதரன், இருக்கையில் இல்லை. திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ். தாமோதரன்.



**திரு. எஸ். தாமோதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். தாமோதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை. திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை. திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எ.எஸ். மஹேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.426,64,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (6–4–2005) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–59 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

94. 13–4–1995 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சித் துறையின் அறிவிக்கை எண் II (2) ஆர்.யு. எல்/1439 (b-11) /95–க்குத் திருத்தம் செய்தும், (ii) 28–1–2004 முதல் நடைமுறைக்கு வருமாறு குறிப்பிட்ட ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய கிருஷ்ணகிரி மாவட்ட ஊராட்சியினை ஏற்படுத்தியும், (iii) புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்ட ஊராட்சிக்குப் பொதுத் தேர்தல் நடந்த பின்னர் இதனுடைய முதல் கூட்டத்தினைக் கூட்டும் வரை கிருஷ்ணகிரி மாவட்ட ஊராட்சியின் பொறுப்புகள் மற்றும் கடமைகளை ஆற்ற கிருஷ்ணகிரி மாவட்ட ஊராட்சிக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரை சிறப்பு அலுவலராக நியமனம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சி (C1) துறையின் 28–1–2004 ஆம் நாளிட்ட 18 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

95. 1999–2000 வரையிலான கால அளவிற்கு திருவாளர்கள் தமிழ்நாடு கைத்திறப் பொருட்கள் மேம்பாட்டு நிறுவனம், சென்னை, அரசுத் துறைகளுக்கு விற்பனை செய்த பித்தளை சலவைப் பெட்டிகள் மீது செலுத்த வேண்டிய வரி வேறுபாட்டுத் தொகை மற்றும் அபராதத் தொகையினைத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 7–1–2005 ஆம் நாளிட்ட 5 (D) ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

96. திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டிலுள்ள திருவாளர்கள் க்ஷேமா மறுவாழ்வு பயிற்சி மையம் 1–7–2003 முதல்

[2005 ஏப்ரல் 5

31–3–2006 வரையிலான கால அளவில் நடத்தும் பயிற்சி வகுப்பின்போது தயாரிக்கும் பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரிகள் துறையின் 19–1–2005 ஆம் நாளிட்ட 5 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

97. திருவாளர்கள் தமிழ்நாடு சிமென்ட் நிறுவனத்தின் பொருட்களான சிமென்ட், ஆஸ்பெஸ்டாஸ் சிமென்ட் தகடுகள் அல்லது ஆஸ்பெஸ்டாஸ் சிமென்ட் மடிப்புத் தகடுகள், சிமென்ட் பொருட்கள், ஆஸ்பெஸ்டாஸ் பொருட்கள், ஆஸ்பெஸ்டாஸ் சிமென்ட் பொருட்கள் ஆகியவற்றை சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் நிவராணப் பணிகளுக்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலமாக விற்பனை செய்யும்போது, அந்த விற்பனைத் தொகைக்கு இவ்வறிவிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் உறுதிமொழியினை அளிக்க வேண்டும் என்கிற அடிப்படையில் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்து வணிக வரிகள் துறையின் 7–2–2005 ஆம் நாளிட்ட 11 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

98. திருவாளர்கள் இந்தோ–பர்மா பெட்ரோலியம் லிமிடெட் நிறுவனம், மாநிலங்களுக்கிடையே வர்த்தகம் அல்லது வணிக நடைமுறையில் செய்யப்படும் நேரடி விற்பனை அல்லது கொள்முதல் நீங்கலாக, (i) முதல் விவர அட்டவணையில் பகுதி–D, பகுதி–E, பகுதி–F மற்றும் பகுதி–G-இல் குறிப்பிட்ட சில இனங்கள் குறித்த பொருட்கள் (ii) முதல் விவர அட்டவணையில் பகுதி G-இல் குறிப்பிட்டுள்ள பெட்ரோலிய உற்பத்திப் பொருட்கள் மற்றும் (iii) உயர் வேக டீசல் மற்றும் பெட்ரோல் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து மாநிலத்திற்கு வெளியே அனுப்பியவற்றிற்கு விற்பனை வரிச் சட்டம், 7–A பிரிவின்கீழ் செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்து வணிக வரித் துறையின் 25–1–2005 ஆம் நாளிட்ட 8 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. மேற்குறிப்பிட்ட இனம் (i) 12–3–1993 ஆம் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும், இனங்கள் (ii) மற்றும் (iii) 1–4–2002 ஆம் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும்



2005 ஏப்ரல் 5]

செயலுக்கு வரும். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

99. 25–1–2005 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II (1) (வவ)/6 (e–1)/2005 ஆம் எண்ணிட்ட வணிக வரித் துறையின் அறிவிக்கையை ரத்துச் செய்தும், இந்தோ–பர்மா பெட்ரோலியம் கம்பெனி லிமிடெட் நிறுவனம், மாநிலங்களுக்கிடையே மேற்கொள்ளும் வர்த்தக அல்லது வணிக நடைமுறையில் செய்யப்படும் விற்பனை அல்லது கொள்முதலின் நேரடிப் பலன் நீங்கலான, முதலாவது விவர அட்டவணையில் பகுதி D, பகுதி E, பகுதி F மற்றும் பகுதி G-இல் குறிப்பிட்ட சில இனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைக் கொள்முதல் செய்து, அவற்றை மாநிலத்திற்கு வெளியே அனுப்புவதற்கு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 7–A பிரிவின்கீழ் செலுத்தத்தக்க வரியைக் குறைத்தும், இது 12–12–1990 ஆம் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும் என்று வணிக வரித் துறையின் 14–2–2005 ஆம் நாளிட்ட 13 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

100. தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 2003–2004 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை. [1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1996) 109 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

190. மானியக் கோரிக்கை எண் 10–வணிக வரித் துறை–வணிக வரிகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

191. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை. (2003–2005)

192. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பதினான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

## இணைப்பு

(410 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 10

## வணிக வரித் துறை–வணிக வரிகள்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005-2006

### 1. முன்னுரை

மாநில வருவாயில் பெரும் பகுதியை ஈட்டித் தருகின்ற வணிக வரித் துறை, வரிச் சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட வரி வசூல் முறை ஆகியவற்றின்மூலம் இந்த நிதியாண்டின் வருவாய் வசூலில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் கண்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் புதிய வரி விதிப்புகள் எதுவுமில்லை. இருப்பினும், துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் கடின உழைப்பின்மூலம் இத்துறையின் வருவாய் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க அளவில் 18.49 விழுக்காடு வளர்ச்சி கண்டுள்ளது. 2001-2002-ல் மொத்த வருவாய் ரூபாய் 8,905 கோடியாக இருந்தது. இப்போது இந்த ஆண்டின் முதல் 11 மாதங்களில் மட்டும் (பிப்ரவரி 2005 வரை) ரூபாய் 12,575 கோடி என ஏற்றம் கண்டுள்ளது.

### 2. துறையின் அமைப்பும், செயல்பாடுகளும்

வணிக வரித் துறையின் நிர்வாகம், ஆணையர் அவர்களால் திறம்பட நடத்தப்படுகிறது. ஆணையருக்கு உதவியாக தலைமையகத்தில் இணை ஆணையர்களும், துணை ஆணையர்களும், இணை இயககுநர் (புள்ளியியல் மற்றும் ஆய்வுத் துறை), உதவி ஆணையர்களும், நிர்வாக அலுவலர்களும் உள்ளனர். வணிக வரித் துறையின் பல்வேறு பிரிவுகள் விவரம் வருமாறு:

### 2.1 வரி விதிப்புப் பிரிவு

வணிக வரி அலுவலர், துணை வணிக வரி அலுவலர் மற்றும் உதவி வணிக வரி அலுவலர் ஆகியோர் வரி விதிப்பு அலுவலர்களாக உள்ளனர். மாநிலத்தில் மொத்தம் 323 வரி விதிப்பு வட்டங்கள் உள்ளன. அவற்றில் 236 வட்டங்களுக்கு வணிக வரி அலுவலர்

தலைமை அலுவலராகவும், 81 வட்டங்களுக்கு துணை வணிக வரி அலுவலர் தலைமை அலுவலராகவும் உள்ளனர். இவை தவிர, சென்னையில் நான்கும், கோவையில் இரண்டும், ஆக, ஆறு விரைவு வழி வரி விதிப்பு வட்டங்கள், உதவி ஆணையர்களை தலைமைத் அலுவலராகக் கொண்டு இயங்குகின்றன. வரி விதிப்பு அலுவலர்களின் பணி, மாவட்ட அளவில் உதவி ஆணையராலும், கோட்ட அளவில் துணை ஆணையராலும் கண்காணிக்கப்படுகின்றது.

**2.2 தணிக்கைப் பிரிவு**

ஒவ்வொரு வணிக வரி மாவட்டத்திலும், ஒரு உள்ளீட்டுத் தணிக்கைக் குழு உள்ளது. வணிக வரி அலுவலர் ஒருவர் மற்றும் துணை வணிக வரி அலுவலர் ஒருவர் கொண்ட இக்குழு உதவி ஆணையரின்கீழ் செயல்படுகிறது. இக்குழு ஒவ்வொரு காலாண்டிற்கும், வரி விதிப்பு ஆணைகள், வருவாய் வரவுகள், திருப்பியளித்த இனங்கள் ஆகியவற்றில் உள்ள குறைகளை, வரி விதிப்பு வட்டவாரியாக அறிக்கை தயாரிக்கின்றது. இந்தக் குழுவிற்கான தணிக்கை நிகழ்ச்சி நிரல் துணை ஆணையரால் வகுத்து, கண்காணிக்கப்படுகிறது. அவற்றின்மீதான குறை நிவர்த்திப் பணிகளை சம்பந்தப்பட்ட வரி விதிப்பு உதவி ஆணையர் மற்றும் துணை ஆணையர் கண்காணிக்கின்றனர்.

இது தவிர, மாநிலக் கணக்காயர், ஆண்டுக்கு ஒரு முறை தனது தணிக்கைக் குழுவினை ஒவ்வொரு வரி விதிப்பு வட்ட அலுவலகத்திற்கும் அனுப்பி, வரி விதிப்புக் கோப்புகள் மற்றும் திரும்ப அளித்தல் தொடர்பான தணிக்கைக் குறிப்பினைத் தயாரித்து அனுப்புகிறார். அதன்மீது குறை நிவர்த்தி செய்ய வேண்டிய முக்கியப் பணி, வரி விதிப்பு அலுவலர்களிடம் உள்ளது. மாநிலக் கணக்காயர் தணிக்கைக் குறிப்பின்மீதான குறை நிவர்த்தி என்னும் முக்கியப் பணியினை மாநில அளவில் ஆணையர் அலுவலகத்தில் உள்ள இணை ஆணையர் (தணிக்கை) அவர்கள் கண்காணிக்கிறார்.

**2.3 மேல்முறையீட்டுப் பிரிவு**

முதல் மேல்முறையீடு, மேல்முறையீட்டு உதவி ஆணையரிடம் தாக்கல் செய்யப்படுகிறது. இத்துறையில் இருபது மேல்முறையீட்டு உதவி ஆணையர்களும், இரண்டு மேல்முறையீட்டு துணை ஆணையர்களும் உள்ளனர். ஒவ்வொரு மேல்முறையீட்டு அலுவலர் முன்பும் துறை சார்பாக ஆஜராக, வணிக வரி அலுவலர் நிலையில்





ஒரு துறைப் பிரதிநிதி நியமிக்கப்பட்டுள்ளார். விற்பனை வரி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் இரண்டாவது மேல்முறையீடு செய்யப்படுகிறது. சென்னையில் முதன்மை நீதியர் ஆயமும், சென்னை, கோவை, மதுரையில் கூடுதல் ஆயங்களும் உள்ளன.

சட்ட எண் 34/2004–ன்மூலம் தமிழ்நாடு வணிக வரி சிறப்புத் தீர்ப்பாயம் கலைக்கப்பட்டது.

**2.4 செயலாக்கப் பிரிவு**

செயலாக்கப் பிரிவு ஏழு துணை ஆணையர்கள் கட்டுப்பாட்டில் இயங்குகின்றது. இதுதவிர, இடை மாநில ஆய்வுப் பிரிவில் ஒரு துணை ஆணையரும் உள்ளார்.

துறையின் செயலாக்கப் பிரிவில், பத்து உதவி ஆணையர்களும், பதினான்கு வணிக வரி அலுவலர்களும் உள்ளனர். உதவி ஆணையர் மற்றும் வணிக வரி அலுவலர்களின்கீழ் துணை வணிக வரி அலுவலர் மற்றும் உதவி வணிக வரி அலுவலர் அடங்கிய குழு அலுவலர்கள் உள்ளனர். இவை தவிர சுற்றும் படை, புகைவண்டி நிலையங்கள் மற்றும் சரக்குப் பிரிவுகளிலும் அலுவலர்கள் பணிபுரிகின்றனர்.

வரி ஏய்ப்பினைக் கண்டுபிடிக்கும் பொருட்டு செயலாக்கப் பிரிவு அலுவலர்கள் கடைத் தணிக்கை மற்றும் வீடு சோதனைப் பணியில் ஈடுபடுகின்றனர். சுற்றும் படை, புகைவண்டி நிலையம் மற்றும் சரக்குப் பிரிவுகளில் பணிபுரியும் அலுவலர்கள் வாகனத் தணிக்கையின்மூலம் பெறப்படும் கொள்முதல் பில்கள் மற்றும் இதர நடத்துச் சீட்டுகளை உரிய வணிகர்கள் வைத்துள்ள கணக்குப் புத்தகங்களுடன் சரிபார்ப்பதன் மூலம் வரி ஏய்ப்பினைத் தடுக்கின்றனர். இடை மாநில ஆய்வுக் குழு அலுவலர்கள், பிற மாநிலங்களில் இருந்து பெறப்பட்ட வடிப்பு நகல்களை இம்மாநில வணிகர்களிடம் சரிபார்ப்பதன்மூலம் வரி ஏய்ப்பினைக் கண்டுபிடித்து வருகின்றனர்.

கடந்த 2003–2004 ஆம் ஆண்டில் 6,466 வணிகத் தலங்கள் தணிக்கையிடப்பட்டு, அதில் 5,094 இனங்களில் வரி ஏய்ப்புகள் கண்டறியப்பட்டன. அதன்மூலம் அரசுக்கு ரூ.35.18 கோடி வரி மற்றும் தண்டத் தொகையாக வசூலிக்கப்பட்டது. நடப்பாண்டு 2004–2005–ல் பிப்ரவரி 2005 முடிய 6,830 வணிகத் தலங்கள் தணிக்கையிடப்பட்டு, ரூபாய் 26.88 கோடி வரி மற்றும் தண்டத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 5

### 2.5 தணிக்கைச் சாவடிகள்

மாநில எல்லையில், இருபத்தாறு எல்லைத் தணிக்கைச் சாவடிகளும், மூன்று இடை மாநில தணிக்கைச் சாவடிகளும் உள்ளன. எல்லைத் தணிக்கைச் சாவடிகளில், பத்து பெரிய தணிக்கைச் சாவடிகளும், பதினாறு சிறிய தணிக்கைச் சாவடிகளும் அடங்கும். மூன்று இடை மாநில தணிக்கைச் சாவடிகளும் பெரிய தணிக்கைச் சாவடிகள் ஆகும். வணிக வரி அலுவலர்கள் ஐந்து பெரிய எல்லைத் தணிக்கைச் சாவடிகளின் தலைமை அலுவலர்களாக உள்ளனர். உதவி வணிக வரி அலுவலர்கள் சோதனைச் சாவடி அலுவலர்களாகவும், உடன் பணிபுரிய உயர் பிரிவு ஆய்வாளர்கள், பதிவுரு எழுத்தர்கள், அலுவலக உதவியாளர்கள், பளுதூக்கிகள் ஆகியோர் உள்ளனர். தணிக்கைச் சாவடியில் வாகனத் தணிக்கையின்போது நடப்பு 2004-2005 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2005 முடிய, ரூபாய் 33.97 கோடி முன் வரி மற்றும் தண்டத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

### 2.6 புள்ளிவிவரம் மற்றும் ஆய்வுத் துறை

தலைமையகத்தில் உள்ள புள்ளியியல் மற்றும் ஆய்வுத் துறையை புள்ளியியல் இணை இயக்குநர் வழிநடத்துகிறார். ஒவ்வொரு வணிக வரி மாவட்டத்திலும், ஒரு புள்ளியியல் ஆய்வாளரும், ஒவ்வொரு கோட்டத்திலும் ஒரு இளநிலை ஆய்வு அலுவலரும் உள்ளனர்.

புள்ளியியல் (ம) ஆய்வுக் குழு, 'வணிக வரித் துறை-ஒரு கண்ணோட்டம்', 'வணிக வரித் துறை-தேர்வுநிலை அறிக்கை' ஆகிய இரு வருடாந்திர அறிக்கைகளை ஆண்டுதோறும் வெளியிடுகின்றது. இவை தவிர, சிறப்புக் காலமுறை அறிக்கைகளையும் வெளியிடுகின்றது. மேலும், இக்குழு ஒவ்வொரு மாதத்திலும் 100 முக்கிய வணிகர்கள் மற்றும் முதன்மையான 50 வணிகப் பொருட்களில் ஏற்படும் வருவாய் இழப்பின் காரணத்தினை ஆய்வு செய்யும் பணியினையும் மேற்கொண்டுள்ளது.

### 3. வணிக வரித் துறையில் நிருவகிக்கப்படும் சட்டங்கள்

வரி வசூலுக்கென கீழ்க்கண்ட சட்டங்கள் வணிக வரித் துறையின்கீழ் நிருவகிக்கப்படுகின்றன :-

1. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959
2. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970



2005 ஏப்ரல் 5]

3. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956
4. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், 1939
5. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935
6. தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981
7. தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகன நுழைவு மீதான வரிச் சட்டம், 1990
8. தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் பொருட்கள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001
9. தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம், 1983

### 4. கடந்த 4 ஆண்டுகளில் வரி வருவாய் நிலவரம்

கடந்த நான்கு ஆண்டுகளில் அனைத்து விற்பனை வரிச் சட்டம் மூலம் ஈட்டிய வரி வருவாய் விவரம் வருமாறு:

| ஆண்டு | வரி வருவாய் (ரூபாய் கோடியில்) | வளர்ச்சி விகிதம் (%) |
|---|---|---|
| 2000-2001 | 8664 | 17.38 % |
| 2001-2002 | 8905 | 2.78 % |
| 2002-2003 | 10200 | 14.55 % |
| 2003-2004 | 11757 | 15.27 % |
| 2004-2005 (பிப்ரவரி முடிய) | 12575* | 18.49 % |

* கருவூலத் தொகையுடன் சரிபார்க்கப்படவில்லை.

[2005 ஏப்ரல் 5

## 5. சட்டவாரியாக நடப்பு மற்றும் கடந்த நான்கு ஆண்டு வருவாய்

சட்டவாரியாக வருவாய் விவரம் வருமாறு :-

(ரூபாய் கோடியில்)

| சட்டம் | 2000–2001 | 2001–2002 | 2002–2003 | 2003–2004 | 2004–2005 (பிப்ரவரி முடிய) |
|---|---|---|---|---|---|
| 1. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் | 7354 | 7541 | 8507 | 9790 | 10371 |
| 2. மத்திய விற்பனை வரிச் சட்டம் | 862 | 904 | 982 | 1186 | 1344 |
| 3. கேளிக்கை வரிச் சட்டம் | 74 | 68 | 71 | 75 | 55 |
| 4. பந்தய வரிச் சட்டம் | 6 | 6 | 5 | 5 | 5 |
| 5. ஆடம்பர வரிச் சட்டம் | 92 | 89 | 82 | 63 | 71 |
| 6. நுழைவு வரிச் சட்டம் (வாகனம் மற்றும் பொருட்கள்) | 276 | 297 | 553 | 638 | 729 |
| **மொத்தம்** | **8664** | **8905** | **10200** | **11757** | **12575*** |

* கருவூலத் தொகையுடன் சரிபார்க்கப்படவில்லை.

## 6. வருவாயும் செலவும்

வணிக வரித் துறையின் வருவாயும் செலவும் வருமாறு :-

(ரூபாய் கோடியில்)

| தலைப்பு | 2000–2001 | 2001–2002 | 2002–2003 | 2003–2004 | 2004–2005 (சனவரி முடிய)* |
|---|---|---|---|---|---|
| 1. வரி வருவாய் | 8664 | 8905 | 10200 | 11757 | 11351 |
| 2. செலவுகள் | 98.57 | 94.23 | 93.27 | 93.70 | 90.94 |
| 3. செலவின் விழுக்காடு | 1.14% | 1.06% | 0.91% | 0.80% | 0.80% |

* கருவூலத் தொகையுடன் சரிபார்க்கப்படவில்லை.



2005 ஏப்ரல் 5]

## 7. 2004–2005–ல் வரி விதிப்பில் செய்யப்பட்ட மாறுதல்கள்

- திரைப்படத் துறையினரின் துயர் துடைக்கும்பொருட்டு, கேளிக்கை வரி செலுத்தும் இணக்க வரி முறையினை ரத்துச் செய்ததுடன், கேளிக்கை வரியின் வரி விகிதங்கள் முறையே புதிய மற்றும் பழைய திரைப்படங்களுக்கு 25 மற்றும் 15 விழுக்காட்டிலிருந்து 20 மற்றும் 10 விழுக்காடாக 4–10–2004 முதல் குறைக்கப்பட்டது. தவிரவும் திரைப்படத் தயாரிப்புக் கருவிகளின் வாடகைமீதான ஒப்பந்த வரி விதிப்பிலிருந்து சம்பந்தப்பட்ட உரிமையாளர்களுக்கு வருங்காலத்திற்கு வரி விலக்கு வழங்கியதோடல்லாமல் முந்தைய ஆண்டுகளுக்கும் வரி விலக்கு வழங்கப்பட்டது. இதனால் அவ்வரியின்மீதான தண்டத் தொகை மற்றும் வட்டி ஆகியவற்றிலிருந்தும் மேற்படி உரிமையாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.
- மீனவ சமுதாயத்திற்கு உதவிடும்பொருட்டு, அவர்கள் எந்திரப் படகுகளில் பயன்படுத்தும் டீசல் எண்ணெய்மீதான விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- தமிழகத் துறைமுகங்கள் வழியாக வந்து செல்லும் வெளிநாட்டுக் கப்பல்களுக்கு பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்களால் விற்கப்படும் உயர்வேக டீசல் எண்ணெய் மற்றும் டீசல் எண்ணெய், எரி உலை எண்ணெய்மீதான விற்பனை வரி 29–12–2004 முதல் 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- இம்மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் பொருட்டு இரு சக்கர மோட்டார் வாகனங்கள், டிராக்டர்கள் மற்றும் மிதிவண்டிகளை இம்மாநிலத்தில் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு கூடுதல் வரி செலுத்துவதில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.
- தங்க ஆபரணங்கள்மீது விதிக்கப்பட்டிருந்த 1 விழுக்காடு ஆடம்பர வரி 29–12–2004 முதல் ரத்துச் செய்யப்பட்டது.
- மாநிலத்தின் தகவல் தொழில்நுட்ப உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும்பொருட்டு, கணினி மற்றும் அதன் உபரி பாகங்களின் இடைமாநில விற்பனைமீதான விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக 29–12–2004 முதல் குறைக்கப்பட்டது.

[2005 ஏப்ரல் 5

- தமிழக அரசின் புதிய தொழிற்கொள்கை அறிவிப்பின்படி இம்மாநிலத்தில் உள்ள உற்பத்தியாளர்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் நுழைவு வரி அட்டவணைப் பட்டியலில் உள்ள பொருட்களுக்கு நுழைவு வரி செலுத்துவதில் இருந்து 1-10-2004 முதல் விலக்களிக்கப்பட்டுள்ளது.
- தமிழக அரசின் புதிய தொழிற்கொள்கை அறிவிப்பின்படி, தமிழகத்தில் உள்ள 100 விழுக்காடு ஏற்றுமதி நிறுவனங்கள் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் உள்ள நிறுவனத் தயாரிப்பாளர்கள், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் நுழைவு வரி அட்டவணைப் பட்டியலில் உள்ள பொருட்களுக்கு நுழைவு வரி செலுத்துவதிலிருந்து 1-10-2004 முதல் விலக்களிக்கப்பட்டுள்ளது.

**8. வணிக வரி பணியாளர் பயிற்சி மையம்**

வணிக வரித் துறையில், அலுவலர் மற்றும் பணியாளருக்குப் பயிற்சி அளிக்க வணிக வரி பணியாளர் பயிற்சி மையம் 1982 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்துறையில் பணிபுரியும் ஊழியர் மற்றும் அலுவலர்களுக்கு வரி விதிப்பு தொடர்பான துல்லியமான நடப்பு விவரங்களையும், அனைத்து வரி விதிப்புச் சட்டங்களின்படியான வரி விதிப்பு முறைகளையும் குறித்த பயிற்சி அளிப்பதே இந்தப் பயிற்சி மையத்தின் நோக்கமாகும். வணிக வரித் துறை கணினிமயமாக்கப்படுவதால் இத்துறையின் அனைத்துப் பிரிவுப் பணியாளர்களுக்கும் கணினிப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

இப்பயிற்சி மையத்தில் துறை அலுவர்களுக்கு கீழ்க்கண்ட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன:-

| பயிற்சியின் பெயர் | பயிற்சி பெறும் அலுவலர்கள் | கால அளவு |
|---|---|---|
| வரி விதிப்புக் கோட்பாட்டின் அடிப்படைப் பயிற்சி | 1. பதவி வழி மற்றும் நேரடி நியமன உதவி வணிக வரி அலுவலர்கள்<br>2. பதவி வழி நியமன துணை வணிக வரி அலுவலர்கள்.<br>3. நேரடி நியமன வணிக வரி அலுவலர்கள் | 30 பணி நாட்கள் |
| வரி விதிப்புக் கோட்பாட்டின் பணியிடைப் பயிற்சி | 1. வணிக வரி அலுவலர்கள்<br>2. துணை வணிக வரி அலுவலர்கள் | 12 பணி நாட்கள் |
| புள்ளியியல் பயிற்சி | 1. புள்ளியியல் ஆய்வாளர்கள்<br>2. புள்ளியியல் இளநிலை ஆய்வு அலுவலர்கள் | 5 பணி நாட்கள் |
| கணினிப் பயிற்சி | 1. உதவி ஆணையர்கள்<br>2. வணிக வரி அலுவலர்கள்<br>3. துணை வணிக வரி அலுவலர்கள்<br>4. உதவி வணிக வரி அலுவலர்கள்<br>5. புள்ளியியல் ஆய்வாளர்கள்<br>6. உதவியாளர்கள்<br>7. இளநிலை உதவியாளர்கள் | — |



2005 ஏப்ரல் 5]

பயிற்சி மையத்தில் மேற்கண்ட பயிற்சிகள் அனைத்தும், உதவி ஆணையர் பணி நிலையில் உள்ள இரு முதுநிலை விரிவுரையாளர்களாலும், ஒரு வணிக வரி அலுவலர் மற்றும் ஒரு உதவி இயக்குநர் (புள்ளியியல் துறை) ஆகியோராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2004-2005-ல் பலதரப்பட்ட பொறுப்புகளில் உள்ள மொத்தம் 493 அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இந்தப் பயற்சி மையத்தில், இந்தத் துறையில் உள்ள துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் வணிக வரி அலுவலர்களுக்கு சிறப்புப் பயிற்சி, முறையே மின்னணு ஆளுமை மற்றும் மின்னணு வணிகம் (E-Governance மற்றும் E-Commerce) அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் வணிகத்தில் ஈடுபட்டுள்ள பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து அனுப்பப்படும் பணியாளர்களுக்கு குறுகிய காலப் பயிற்சியாக (இரு நாட்களுக்கு) அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 5

## 9. வணிக வரித் துறையைக் கணினிமயமாக்குதல்

1973 ஆம் ஆண்டிலேயே இத்துறையில் கணினி அறிமுகப்படுத்தப் பட்டது. 1988-ல் சொந்தமாக இத்துறைக்கு கணினி மையம் சென்னை, கிரீம்ஸ் சாலை வணிக வரி கட்டடத்திலும், 1994-ல் திருச்சி, மதுரை மற்றும் கோவை ஆகிய 3 துணை மையங்களிலும் ஆரம்பிக்கப்பட்டன.

### முதல் நிலை (I)

துறையைக் கணினிமயமாக்க அரசாணை (நிலை) எண் 421, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 8-10-1997-ல் ரூ.357.74 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது. முதற்கட்டமாக 140 வரி விதிப்பு வட்டங்கள், 18 மண்டல உதவி ஆணையர் அலுவலகங்கள், 5 துணை ஆணையர் அலுவலகங்கள், 9 எல்லை சோதனைச் சாவடிகள், செயலகத் துறை மற்றும் ஆணையர் அலுவலகங்கள் கிரீம்ஸ் சாலையிலுள்ள கணினி மையத்துடன் இணைக்கப்பட்டன.

### இரண்டாம் நிலை (II)

துறையின் கணினிப் பயன்பாட்டின் முன்னேற்றத்திற்குத் திருவாளர்கள் பல்லவன் டிரான்ஸ்போர்ட் கன்சல்டன்ட் சர்வீஸ் என்ற நிறுவனத்தை கலந்தறிதற்குரிய நிறுவனமாக அரசு நியமித்துள்ளது. இந்த இரண்டாம் நிலையில்,

| | |
|---|---|
| 781 | கணினிகள் |
| 21 | தலைமை கணினிகள் |
| 425 | கணினி அச்சுப் பொறிகள் |
| 313 | தடையில்லா மின்வழங்கிகள் |

கொள்முதல் செய்யப்பட்டு 483 இடங்களில் இணைக்கப்பட்டுள்ளன.

கீழ்க்கண்ட பணி நிலைகளில் கணினி மென்பொருள் உருவாக்கப்பட்டு, உரிய தளங்களில் நிறுவப்பட்டுள்ளது:

(அ) வணிகர் விவரப் பட்டியலில் மென்பொருள் (323 வரி விதிப்பு வட்டங்களில் நிறுவப்பட்டுள்ளது).

(ஆ) தணிக்கைச் சாவடி மென்பொருள் (29 தணிக்கைச் சாவடிகளில் நிறுவப்பட்டுள்ளது)

(இ) செயலாக்கப் பிரிவு மென்பொருள் (23 உதவி ஆணையர், வணிக வரி அலுவலர் (செயலாக்கப் பிரிவு) அலுவலகங்களில் நிறுவப்பட்டுள்ளது)



2005 ஏப்ரல் 5]

(ஈ) மேல்முறையீட்டுப் பிரிவு மென்பொருள் (26 துறைப் பிரதிநிதி, மாநிலப் பிரதிநிதி மற்றும் கூடுதல் மாநிலப் பிரதிநிதி அலுவலகங்களில் நிறுவப்பட்டுள்ளது)

(உ) மாவட்ட வணிக வரித் துறை மென்பொருள் (மாநில முழுவதும் வரி விதிப்பு வட்டங்களில் நிறுவப்பட்டுள்ளது)

விரிவாக்கப்பட்ட தொடரமைப்பு (WAN) வணிக வரித் துறையின் தனி உபயோகத்திற்கு நிறுவப்பட்டுள்ளது. வலைதளப் பிரிவில் வணிக வரித் துறை தனது சொந்த வலைதளத்தினை "www.tnsalestax.com" என்ற பெயரில் அமைத்துள்ளது. வணிகர்களுக்குத் தேவையான பயனுள்ள தகவல்கள் இந்த வலைதளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. துறைசார்ந்த படிவங்கள், பதிவு விண்ணப்பம் போன்றவற்றை மேற்படி வலைதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். பொருட்களின்மீதான வரி விகிதம் அகர வரிசைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

### மூன்றாம் நிலை (III)

29 தணிக்கைச் சாவடிகளிலும், குறு வட்டில் முனையம் (VSAT) இணைப்பு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அனைவரும் பயன்பெறும் வகையில் உரிய கணினி மென்பொருள் கொள்முதல் செய்யப்படும். சட்டபூர்வ செயல்பாடுகள் தவிர மற்ற அலுவலக நிர்வாகப் பணிகள் காகிதமில்லாப் பணியாக இந்த மூன்றாம் நிலையில் மாற்றப்படும்.

## 10. வணிகர் நல வாரியம்

வணிகர் நலன் கருதி வணிகர் நலத் திட்டங்களை அமல்படுத்துவதற்கான வணிகர் நல வாரியம், அரசாணை (நிலை) எண் 725, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 25-9-89-ல் அமைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்டு அரசாணை (நிலை) எண் 74, வணிக வரித் துறை, நாள் 27-6-2003-ன்படி இவ்வாரியம் திருத்தி அமைக்கப்பட்டது. வாரியத்தின் உறுப்பினர்களாக அலுவலர் உறுப்பினரன்றி வணிகர்கள் சார்பாக 16 அலுவல்சாரா உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வாரியத்தின் உறுப்பினராகும் தகுதி எல்லா பதிவு பெற்ற வணிகர்களுக்கும் உண்டு. இதற்கு ஒவ்வொரு உறுப்பினரும்

ரூபாய் 2.50/– ஆண்டுக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். 31–12–2004 முடிய 40,881 உறுப்பினர்கள்மூலம் ரூபாய் 74.38 இலட்சம் பதிவுக் கட்டணமாகப் பெறப்பட்டுள்ளது.

**31–12–2004 வரை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவி விவரம்**

| வரிசை எண் | உதவி விவரம் | எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | **குடும்ப நல உதவி** ரூ.20,000/– வீதம் இறந்து போன உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு உதவி | 252 | 65.15 |
| 2. | **மருத்துவ உதவி** ரூ.25,000/– வரை உறுப்பினர்களுக்கு மருத்துவ உதவி | 29 | 6.46 |
| 3. | **கல்வி உதவி** ரூ.3,000/– வீதம் உறுப்பினர்களின் குழந்தைகளுக்குக் கல்வி உதவி | 73 | 1.86 |
| 4. | **விளையாட்டு உதவி** ரூ.3,000/-லிருந்து ரூ.25,000/- வரை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு விளையாட்டு உதவி | 2 | 0.15 |
| 5. | **தீ விபத்து உதவி** ரூ.5,000/- வீதம் உறுப்பினர்களின் கடைகள் மற்றும் கிடங்குகளுக்குத் தீ விபத்து உதவி | 29 | 1.45 |
| 6. | **ஊனமுற்றோருக்கான உதவி** ரூ.20,000/- வரை உடல் ஊனமுற்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உதவி | 2 | 0.15 |
| 7. | **உயர் மதிப்பெண் பெற்றவர்களுக்கான உதவி** ரூ.5,000/- வரை உயர் மதிப்பெண் பெற்ற உறுப்பினர்களின் குழந்தைகளுக்கான உதவி | 6 | 0.20 |
| | **மொத்தம்** | **393** | **75.42** |



**11. விற்பனை வரி ஆலோசனைக் குழுக்கள்**

ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் ஒரு மாவட்ட விற்பனை வரி ஆலோசனைக் குழு அரசாணை (நிலை) எண் 19, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 2-1-1997-ன்படி நியமிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் அக்குழுவின் தலைவராகவும், அம்மாவட்ட வணிக வரி உதவி ஆணையர் செயலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். குழுவின் உறுப்பினர்களை, பல்வகைப்பட்ட வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வணிகர்களிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் நியமிக்கிறார். அந்தந்த மாவட்டத்தில் வணிகர்களின் இடர்கள் குறித்து விவாதிக்க, இக்குழு காலாண்டிற்கு ஒரு முறை கூடுகிறது. கொள்கை தொடர்பான கருத்துகள் அரசின் முடிவுக்கு அனுப்பப்படும்.

மாநில விற்பனை வரி ஆலோசனைக் குழு, அரசாணை (நிலை) எண் 17, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 11–1–96–ன்படி, மாண்புமிகு முதலமைச்சரைத் தலைவராகவும், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சரைக் கூடுதல் தலைவராகவும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. வணிக வரித் துறைச் செயலர் இக்குழுவின் செயலராகவும், வணிக வரி ஆணையர் அமைப்பாளராகவும் செயல்படுகின்றனர். வணிகர்கள், வணிகச் சங்கங்கள் மற்றும் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் ஆகியோர்களைக் குழு உறுப்பினர்களாக அரசு நியமிக்கிறது. தொடர்புடைய பிற துறை அமைச்சர்கள் மற்றும் செயலர்கள் கூடுதல் உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

## 12. உள்ளாட்சி அமைப்புகளுக்கான உதவி

உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலையை உயர்த்த, கேளிக்கை வரி வருவாயில் இடத்திற்குத் தகுந்தவாறு 60 முதல் 70 விழுக்காடு, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் ஆகிய உள்ளாட்சி அமைப்புகளுக்கு 31-3-1997 வரை வழங்கப்பட்டு வந்தது. அந்த உதவி 1–4–1997 முதல் 90 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில், உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கொடுக்கப்பட்ட நிதி உதவி ரூபாய் 58.28 கோடியாகும். (31–3–04–ல் உள்ளபடி)

## 13. குறை தீர்க்கும் பிரிவு

வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் குறை தீர்க்கும் பிரிவு ஒன்று 1999 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. வணிகர்களின் குறைகள் மற்றும் புகார்களைப் பெறுகின்ற பிரிவாக அது இயங்கி வருகின்றது. இணை ஆணையர் (நிர்வாகம்) அப்பிரிவின் தலைவராகவும், இணை ஆணையர் (மக்கள் தொடர்பு) மற்றும் இணை ஆணையர் (சுய சீராய்வு மனு) ஆகியோர் அதன் உறுப்பினர்களாகவும் செயல்படுகின்றனர்.

### 13.1 தகவல் பரிமாற்றக் குரல் பதிவு முறை

துறையின் நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில், பொது மக்களின் ஆலோசனைகள், குறைபாடுகள் மற்றும் வணிகர்களின் வரி ஏய்ப்பு விவரங்கள் குறித்த தகவல்களை உடனுக்குடன் பெறும் பொருட்டு, 'தகவல் பரிமாற்றக் குரல் பதிவு செய்யும் கருவி' ரூ.2,00,000/– செலவில், அரசாணை (நிலை) எண் 246, வணிக வரித் துறை, நாள் 17–12–2003 மூலம் வணிக வரி ஆணையர் அவர்களின் அறையில் பொருத்தப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களால் 20-02-2004 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இவ்வசதிக்கென தனியாக 044–28520535 என்ற எண் கொண்ட நேரடித் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 14. வணிக வரித் துறையின் சிறந்த நிர்வாகத்திற்கென எடுக்கப்பட்ட சில சிறப்பு நடவடிக்கைகள்

### 14.1 ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி

தமிழகத்தில் வரி ஏய்ப்பினைத் தடுக்கவும், சோதனைச் சாவடிகளின் வழியாக எடுத்துச் செல்லப்படும் பொருட்களைக் கண்காணிக்கவும், முதற்கட்டமாக, ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகள்





அமைக்கப்படலாம் என அரசாணை (நிலை) எண் 60, வணிக வரித் துறை, நாள் 17–6–2002-ல் அறிவித்ததைத் தொடர்ந்து, அதற்கான நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளன. தமிழகத்தில் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகள் அமைப்பதற்கு, கலந்தறிதற்குரியர் (Consultant) நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 14.2 ரொக்கப் பரிசு

வணிக வரித் துறையில் பணிபுரியும் அலுவலர்களின் திறமையை ஊக்குவிக்கவும், மேம்படுத்தவும், துறையில் சிறப்பாகச் செயல்படும் 6 அலுவலர்களுக்குத் தலா ரூ.25,000/– ரொக்கப் பரிசும், பாராட்டுச் சான்றும் வழங்கும் திட்டம் நவம்பர் மாதம் 2003 முதல் தொடங்கப்பட்டது. 2003–2004 ஆம் ஆண்டில் துறையைச் சார்ந்த அலுவலர்கள் இத்திட்டத்தின் வாயிலாக கௌரவிக்கப்பட்டனர்.

### 14.3 வரி ஏய்ப்பு குறித்து தகவல் அளிப்பவர்களுக்கு ரொக்கப் பரிசு

ரூ.1 இலட்சம் நிதித் தொகுப்புடன்கூடிய ரொக்கப் பரிசு, வணிக வரி ஆணையரால், வரி ஏய்ப்பவர் பற்றிய மதிப்புமிக்க தகவல்களைத் துறைக்கு அளிக்கும் துறைசாரா நபர்களுக்கு வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் தகவல்கள் செயலாக்கப் பிரிவினரால் பரிசீலிக்கப்பட்டு, பின்னர் வரி விதிப்பாக முடிய வாய்ப்பாக உள்ளது. அளிக்கப்பட்ட தகவல்கள் இரகசியமாகப் பாதுகாக்கப்படுகின்றது.

## 15. மதிப்புக் கூட்டு வரி ( VAT ) – தயார் நிலை

1999 ஆம் வருடம் நவம்பர் 16 ஆம் நாள் அன்றைய மத்திய நிதி அமைச்சரால் கூட்டப்பட்ட அனைத்து மாநில முதல்வர்களின் முக்கியமான கூட்டம் மாநிலங்கள் அளவில் மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்துவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடிவு செய்தது. அதன்படி அனைத்து மாநில நிதி அமைச்சர்களைக் கொண்ட அதிகாரம் அளிக்கப்பட்ட குழு (Empowered Committee) அமைக்கப்பட்டது. இந்த அதிகாரம் அளிக்கப்பட்ட குழு பல சுற்று விவாதங்களுக்குப் பின் மத்திய அரசு அறிவித்த, 2005–2006 ஆம் ஆண்டில் 100%, 2006–2007 ஆம் ஆண்டில் 75%, 2007–2008 ஆம் ஆண்டில் 50% என்ற வருவாய் இழப்பு ஈடுசெய்யும் ஏற்பாட்டின் அடிப்படையில், 1–4–2005 முதல் இந்த வரி முறையை அமல்படுத்த பெரும்பான்மை முறையில் தீர்மானித்துள்ளது.

[2005 ஏப்ரல் 5

இது வரி அமைப்பில் ஒரு மிகப் பெரிய சீர்திருத்தம் என்பதால், சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரிடையே ஒருமித்த கருத்து உருவாக்கப்பட வேண்டும். உத்தேசிக்கப்பட்ட மதிப்புக் கூட்டு வரியின் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு:

- வரிமீது வரி என்பது இருக்காது
- கொள்முதல்மீது செலுத்தப்பட்ட வரி உள்மாநில, வெளிமாநில விற்பனைமீதான வரியிலிருந்து முழுமையாக ஈடு செய்யப்படும்.
- உள்மாநிலக் கொள்முதல்மீது செலுத்திய வரி வெளிமாநில சரக்கு மாற்றம் (branch transfer) அல்லது முகவர்மூலமான விற்பனை (consignment sale) ஆகியவற்றின்மீது 4 சதவிகிதத்திற்கு மேற்பட்ட தொகை அளவிற்கு ஈடு செய்யப்படும்.
- ஏற்றுமதியாளர்கள், இடுபொருட்கள்மீது உள்மாநிலத்தில் செலுத்திய வரி திருப்பி அளிக்கப்படும்.
- மதிப்புக் கூட்டு வரி அமலுக்கு வரும்போது, கூடுதல் விற்பனை வரி, மேல் வரி, மறு விற்பனை வரி ஆகியவை நீக்கப்படும்.
- தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தில் தற்போது நடைமுறையில் உள்ள சுமார் எட்டு வரி விகிதங்களுக்குப் பதிலாக மதிப்புக் கூட்டு வரி முறையில் 1%, 4% மற்றும் 12.5% ஆகிய மூன்று வரி விகிதங்கள் மட்டுமே இருக்கும்.
- தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தில் பதிவு பெறுதற்குரிய விற்பனைத் தொகையான ரூபாய் 3 இலட்சம் என்பது மதிப்புக் கூட்டு வரி முறையில் ரூபாய் 5 இலட்சமாக உயர்த்தப்படும். இதனால் சுமார் 76,000 சிறு வணிகர்கள் பயனடைவர்.
- மதிப்புக் கூட்டு வரி முறையில் வருடாந்திர விற்பனைத் தொகை ரூபாய் 50 இலட்சம் வரை உள்ள மறு விற்பனை செய்யும் வணிகர்கள் இணக்க முறை வரியாக 1% செலுத்தினால் போதும். இதனால் சுமார் 74,000 சிறு வணிகர்கள் பயனடைவர்.



2005 ஏப்ரல் 5]

- மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்தப்படும்போது அனைத்து வணிகர்களும் சுய வரி விதிப்பு முறையில் வரி விதிப்பு செய்யப்படுவர்.
- பல்வேறு குற்றங்களுக்குரிய தண்டனைகள் தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தில் உள்ளதுபோன்றே இருக்கும்.
- மதிப்புக் கூட்டு வரி அமலுக்கு வரும் நாளில் உள்ள ஆரம்ப இருப்புச் சரக்கின்மீது ஏற்கெனவே உள்மாநிலத்தில் செலுத்தப்பட்ட வரி முழுமையும், செலுத்த வேண்டிய மதிப்புக் கூட்டு வரியிலிருந்து கழித்துக் கொள்ளப்படும்.
- மதிப்புக் கூட்டு வரி முறையில் உற்பத்தியாளர்களும், வணிகர்களும் உள்மாநிலத்தில் மூலதனப் பொருட்கள்மீது செலுத்தும் வரி முழுமையாக ஈடுசெய்து கொள்ளப்படும்.
- பொருட்கள் மற்றும் வாகனங்கள்மீது செலுத்தும் நுழைவு வரி உற்பத்தியாளர் மற்றும் வணிகர்கள் செலுத்தவேண்டிய மதிப்புக் கூட்டு வரியிலிருந்து முழுமையாகக் கழித்துக் கொள்ளப்படும்.
- பெட்ரோல் (Petrol), டீசல் (Diesel), இலகுரக டீசல் எண்ணெய் (Light Diesel Oil), பொது விநியோக முறைக்கு அப்பாற்பட்ட மண்ணெண்ணெய் (kerosene), கரும்பு மற்றும் இந்தியாவில் தயாராகும் வெளி நாட்டு மது வகைகள் (IMFL) ஆகியவை மதிப்புக் கூட்டு வரி முறைக்கு உட்படாது. இவை தனியான வரி விகிதங்களைக் கொண்டிருக்கும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள மதிப்புக் கூட்டு வரி முறையில் அரிசி உட்பட, நம் மாநிலத்திற்கு முக்கியமான 46 பொருட்களுக்கு வரி விலக்கு உண்டு. அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் முடிவின்படி அரிசியின்மீதான இந்த வரி விலக்கு மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்திய ஓராண்டிற்குப் பிறகு மறு ஆய்வு செய்யப்படும். இதுதவிர, சுமார் 88 பொருட்கள் 4% வரிக்கு உட்பட்டவையாகவும், மதிப்புக் கூட்டு வரி முறைக்கு உட்படாத பொருட்களைத் தவிர பிற பொருட்கள் 12.5% வரிக்கு உட்பட்டவையாகவும் இருக்கும்.

[2005 ஏப்ரல் 5

மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதற்கு முன்னோடியாக, துறை அலுவலர்களுக்கும், வியாபார மற்றும் உற்பத்தியாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் உரிய பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. கோட்ட அளவில் பிற அலுவலர்களுக்குப் பயிற்சி தரும் வகையில் சிறப்புப் பயிற்சியும் தகுந்த அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மாநில மதிப்புக் கூட்டு வரியானது, மாநிலத்தின் முழு ஆளுமைக்குட்பட்ட விற்பனை வரிக்கு ஒரு மாற்று ஏற்பாடாகும். மதிப்புக் கூட்டு வரி முறையை அமல்படுத்துவதாக இருந்தால், மாநிலத்திற்குள் அனைத்துத் தரப்பினரிடையே ஒரு கருத்தொற்றுமையை உருவாக்க வேண்டியது அவசியமாகும்.

## 16. பகுதி—II திட்டம், 2005–2006

2005–2006 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தில் கீழ்க்காணும் புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது:

1. விருதுநகர் மாவட்டம், சிவகாசி வணிக வரி மாவட்டத்தில் ரூபாய் 52 இலட்சம் செலவில் வணிக வரி அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவது.
2. துணை ஆணையர் (வணிக வரி) (செயலாக்கம்) திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி அலுவலகங்களுக்கு ரூபாய் 75 ஆயிரம் செலவில் நிகரி இயந்திரம் (Fax Machine) கொள்முதல் செய்தல்.
3. துணை ஆணையர் (வணிக வரி) (செயலாக்கம்) இடைமாநிலப் புலனாய்வுக் குழு, சென்னை, இயக்குநர், வணிக வரி பணியாளர் பயிற்சி நிலையம், சென்னை மற்றும் துணை ஆணையர் (வணிக வரி), திருச்சி, அலுவலகங்களுக்கு ரூபாய் 2.70 இலட்சம் செலவில் நகலெடுக்கும் இயந்திரம் கொள்முதல் செய்தல்.
4. நாகர்கோவில் வணிக வரி வளாகத்தில் ரூபாய் 2 இலட்சம் செலவில் வாகனங்கள் நிறுத்துமிடம் கட்டுவது.
5. ஈரோடு வணிக வரி அலுவலகக் கட்டடத்தில் ஆழ்குழாய்க் கிணறு ரூபாய் 1.53 இலட்சம் செலவில் அமைத்தல்.
6. ரூபாய் 22.40 இலட்சம் செலவில் 400 கூடுதல் தொலைபேசி இணைப்புகள் வணிக வரித் துறையின் கணிப்பொறி மையங்களுக்கு வழங்குதல்.

D V211,31/05
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
185278
சென்னை-600 008
காலகம்

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**112, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.